வெளியீடு 16-11-2002

Issued 16-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 13, 2002 – தொகுதி 14 – எண் 3

**Wednesday the 13th March, 2002– Volume 14 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

D.
224482

**13-3-2002**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 261-288

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல் 288-290

2. **தகவல் கோரல்—**

சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம் .. 290-292

3. **அறிக்கை அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு .. 291

4. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் இணைப்பு பற்றிய விளக்கங்கள் கொண்ட முதலமைச்சரின் அறிக்கை .. .. 293-297

5. **ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி 298-431

திரு. இரா. திருமாவளவன் 298-312

திரு. பி.ஆர். சுந்தரம் 313-324

*திரு. வி.கே. லட்சுமணன் 324-332

திரு. தி. வேல் முருகன் 332-338

*திரு. எச்.எம். ராஜு 339-344

பக்கங்கள்


**5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| * திரு. வை. சிவபுண்ணியம் | 344-353 |
| திரு. டி. மணி | 354-363 |
| திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் | 363-368 |
| திரு. ரா. ஈஸ்வரன் | 368-375 |
| திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 376-386 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 386-396 |
| திருமதி சான்ட்ரா டான் க்ரவல் | 396-398 |
| * திரு. ஆஸ்டின் | 398-413 |
| திரு. கோ. இரவிராஜ் | 413-417 |
| திரு. ப. அரசன் | 417-423 |
| திரு. எஸ்.எம். பாலன் | 425-431 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 431-432 |



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22482
சென்னை-600 008
நூலகம்


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 29, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 மார்ச் 13, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 11, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

11—

**திருப்பணி**

***2266—திரு. தா. பச்சைமால் :**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கும்பாபிஷேகம் நடத்தப்படாமல் உள்ள இந்துக் கோயில்களில் அரசே திருப்பணி நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2002 மார்ச் 13

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து குடமுழுக்குச் செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களின் எண்ணிக்கை 318. இதில் 20 திருக்கோயில்களுக்கும், துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள 9 திருக்கோயில்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி நடைபெற்றுவரும் 20 கோயில்களில் ஒரு கோயிலில் திருப்பணி முடிவுபெற்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழம்பெருமை வாய்ந்த பல ஆலயங்கள் உள்ளன. அவற்றில் சுசீந்திரம் தாணுமாலய மூர்த்தி ஆலயம், வடசேரி கும்மண்டையம்மன் ஆலயம், கட்டிமாங்கோடு சிவன், கிருஷ்ணன் ஆலயங்கள், பிள்ளையார்விளையில் சிவன் ஆலயம் இப்படிப் பல ஆலயங்களில் பல இலட்சம் ரூபாய்க்கு வருமானம் இருந்தும், இன்றுவரை எந்தவித கட்டடப் பணியோ, ஆலயப் பணியோ நடைபெறாமல் இருக்கிறது. அந்த ஆலயங்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மொத்த திருக்கோயில்கள் விவரம்: இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் 1959, சட்டப் பிரிவு 49(1)-ன்கீழ் 630 ஆலயங்கள்; சட்டப்பிரிவு 46(1)ன் கீழ் 55 ஆலயங்கள்; சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் 3 ஆலயங்கள்; சட்டப் பிரிவு 46(3)ன்கீழ் ஒரு ஆலயம்; ஆக மொத்தம் 689 ஆலயங்கள். அவற்றில் 12 ஆண்டுகள் கடந்து குடமுழுக்குச் செய்ய வேண்டியவற்றின் எண்ணிக்கை 318. பட்டியலில் சேராதவை:

தற்போது நிதி உதவி அளிக்கப்பட்டு திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் திருக்கோயில்கள் விவரம்: இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பட்டியலில் சேராத 20 திருக்கோயில்களுக்கும் மற்றும் பட்டியலில் சேராத, துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள 9 திருக்கோயில்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி



2002 மார்ச் 13]

வழங்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதில் பட்டியலில் சேராத 20 திருக்கோயில்களில் ஒரு கோயிலில் திருப்பணி முடிவுபெற்று கும்பாபிஷேகம் முடிந்துள்ளது. மீதமுள்ள 289 திருக்கோயில்களுக்கு நிதிநிலை அடிப்படையில், படிப்படியாக எதிர்வரும் ஆண்டுகளில் திருப்பணிகளை முழுமையாக முடித்து கும்பாபிஷேகம் நடத்துவதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கோயில்களில் திருவிழாக்களை முன்னிட்டு நடைபெறும் வெடி வழிபாடுகளில் சில நேரங்களில் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. நேற்று திருநந்திக்கரை என்ற இடத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான சிவன் கோயிலில் சிவராத்திரி விழாவையொட்டி..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாகச் சொல்லுங்கள். மற்றவற்றிற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கும்பாபிஷேக விழாவோடு சேர்ந்த கேள்விதான். அப்படிப்பட்ட வெடி வழிபாடு நேரத்திலே ராஜேஷ் என்ற ஒரு வாலிபன், அவருடைய உடல் சிதறி இறந்து போயிருக்கிறார். இப்படி இறக்கக்கூடியவர்களுக்கு அரசு நிவாரணம் சாதாரணமாக வழங்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட வெடி வழிபாடுகள் காரணமாக இறக்கக்கூடியவர்களுடைய குடும்பங்களுக்கு ஏதாவது நிதி உதவியோ, நிவாரணமோ வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலத்தில், அங்கு வருகின்ற பக்தர்கள் தங்களுடைய வசதிக்கேற்ப இப்படிப்பட்ட வெடி விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று இப்படி ஒரு விபத்து ஏற்பட்டு இருக்குமானால், அரசு கூர்ந்து கவனித்து அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை எடுத்து உதவி புரிவதற்கு முயற்சி எடுக்கும்.

[2002 மார்ச் 13

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**12—**

**சரவணப் பொய்கை**

***3875—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையைத் தூர் வாரிச் சுத்தம் செய்து பொய்கையின் தூய்மை காக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையைத் தூர் வாரிச் சுத்தம் செய்து, தூய்மைப்படுத்தும் பணியை ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதும், பணி நிறைவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி,

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திருக்குளங்களையெல்லாம் சுத்தப்படுத்தித் தூர்வாருவதற்கு கனடா நாட்டிலிருந்து ஒரு நன்கொடையாளர் பல இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? எவ்வளவு கொடுத்திருக் கிறார்கள்? அதை எந்த வகையிலே செலவு செய்யவிருக்கிறோம் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் இன்னும் அலுவலகத்திலிருந்து



2002 மார்ச் 13]

சேகரிக்கப்படவில்லை. சேகரித்ததும் உடனடியாகத் தகவல் கொடுக்கிறோம். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற ஆலயங்களுக்குச் சொந்தமான திருக்குளங்கள் அனைத்தையும் தூர்வருவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியை உடனடியாகப் பெற்று, அதன் மூலம் அனைத்து ஆலயங்களுக்கும் சொந்தமான திருக்குளங்களைச் செப்பனிடவேண்டும், தூர் எடுக்கவேண்டுமென்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**13—**

**மருத்துவமனை**

***790—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், மோகனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் பரமத்தி, வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம், பள்ளிபாளையம், சேந்தமங்கலம், வெண்ணாந்தூர், இராசிபுரம் ஆகிய ஊர்களில் மட்டுமே அரசு மருத்துவமனைகள் உள்ளன. அவை நாமக்கல் மாவட்ட மக்கள் தொகைக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர்

[2002 மார்ச் 13

அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும், நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் சுமார் 1¼ கோடி ரூபாய் செலவில் மக்கள் நலன் கருதி, சி.டி. ஸ்கேன் வசதியை உடனடியாக ஏற்படுத்தியதைப் போல, நாமக்கல் மாவட்டத்தில் முக்கிய ஊரான மோகனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அருகில் எங்கும் அரசு மருத்துவமனை இல்லாத காரணத்தால், அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய முயற்சி செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது கபிலர்மலை தொகுதியில் தலைமை நகரான பரமத்தி வேலூரில் உள்ள அரசு மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலையப்பசாமி அவர்கள் சொன்ன அந்த அடிப்படையிலேதான், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிராமப்புற மக்களுக்கு, அவர்கள் பகுதியிலேயே தரமான சிகிச்சை அளிக்கவேண்டும் என்ற அந்த அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஒன்றிய அளவிலே தரம் உயர்த்தி, அவர்கள் சொன்னதைப் போல, ஒரு வட்டாரத் தலைமை மருத்துவமனை Taluk Hospital-க்கு உண்டான வசதி வாய்ப்புகளோடு ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கைகள், எக்ஸ்ரே-பிரிவு, ஆபரேஷன் தியேட்டர், ஆம்புலன்ஸ் வசதி, அறுவை சிகிச்சைக்கு இரத்தம் செலுத்தும் வசதி, அனைத்துப் பரிசோதனைகளையும் செய்யத்தக்க வகையிலே பரிசோதனைக்கூடம், ஏற்கெனவே இருக்கிற மருத்துவர்களோடு கூடுதலாக இரண்டு சிறப்பு மருத்துவர்கள் ஆகிய இந்த வசதி வாய்ப்புகளோடு—ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை—தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு அது நடப்பாண்டிலேயிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையிலே இதுவரை 75 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, அந்த வகையிலே இந்த மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் கூடிய விரைவில் இந்த வசதிகளோடு தரம் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அப்படி நடவடிக்கை எடுக்கிறபோது தாலுகா மருத்துவமனை அளவிற்கு அந்தத் தகுதியை



2002 மார்ச் 13]

மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையம் பெற்றுவிடும் என்ற செய்தியை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு

முற்பகல் 10-10

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதியிலே பல துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் தொகுதியினுடைய தலைநகரில்கூட ஆரம்ப சுகாதார நிலையம் அடிப்படை வசதியோடு இல்லாத சூழ்நிலை பல தொகுதிகளிலே இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலேகூட தலைமை இடத்திலே துணை ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது. எனவே இதுபோன்ற துணை ஆரம்ப சுகாதார நிலையங்களை—குறைந்த அளவு, ஒவ்வொரு தொகுதி தலைநகரங்களிலாவது—ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படுமா? அதிலும் குறிப்பாக எனது தொகுதி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே கட்டடங்கள் கட்டப்பட்டன. தளவாடச் சாமான்கள் எல்லாம் பொதுப் பணித் துறை மூலமாக வழங்கப்பட்டன. அதனால் இன்றைக்கும் பல இடங்களிலே துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் ரிப்பேராகி, மிக மோசமான நிலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குத் தனியாக நிதியை ஒதுக்கி உடனடியாக அவற்றை எல்லாம் ரிப்பேர் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா? எனது தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தாம் உயர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் சொன்னதைப் போல ஒன்றிய தலைமை இடத்திலே கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், ஒன்றியத்தினுடைய மற்ற பகுதிகளிலே தலைமை ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது உண்மைதான். அந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒன்றியத்துக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை, நான் சொன்ன அந்த வசதிகளோடு தரம் உயர்த்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது அந்த ஒன்றியத்திலே தலைமை ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி அல்லது கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, எந்தச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தினால்

[2002 மார்ச் 13

அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்குமோ அந்த வகையிலே, அதுவும் குறிப்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தையே தரம் உயர்த்துவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். ஏற்கெனவே இருக்கிற கட்டடங்கள் பழுதுபட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் உணர்ந்துதான் ஒரு துணை இயக்குநருக்கு 5 இலட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து, பராமரிப்புக்கு என்று வழங்க உத்தரவிட்டிருக்கிறோம். அந்தத் தொகையிலிருந்து பழுதுபட்ட கட்டடங்கள் பழுதுபார்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்:** *(பேரவைத் துணைத் தலைவர்)*: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அளவிலே ஆரம்ப சுகாதார நிலையம் கட்டாயமாக இருக்கும் என்று இங்கே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய வாகூர் தொகுதியில் குன்னம், தாலுகாவாகப் பிரிக்கப்பட்டும் இன்று வரை ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. அதற்கு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கவனியுங்கள், எங்கள் பேரவைத் துணைத் தலைவரை. *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு நீங்கள் பரிந்துரை செய்ததற்கு மகிழ்ச்சி. ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னால் முப்பதாயிரம் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. அதேபோல ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் ஐந்தாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று 'நார்ம்ஸ்' சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அந்த மக்கள் தொகை இருக்கும் என்று சொன்னால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அந்தப் பகுதியிலே



2002 மார்ச் 13]

ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதோடு சில தாலுகா மருத்துவமனைகளில்கூட நான் ஏற்கெனவே சொன்ன அந்த 30 படுக்கைகள் கொண்ட வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. அதையும் இப்போது தரம் உயர்த்துவதற்கு, எப்படி ஓர் ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்குகிறோமோ அதைப் போல தாலுகா மருத்துவமனைகளுக்கும், இன்னும் சொல்லப்போனால் வட்டாரம் சாராத மருத்துவமனைகளுக்கும் படுக்கை வசதிகள், அறுவை சிகிச்சை வசதி, எக்ஸ்-ரே வசதி போன்றவை இல்லாமல் இருக்குமானால் இந்த வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்றால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அனுமதிக்கப்படும் என்று சொல்லி பத்து பரிந்துரைகள் செய்யப்பட்டதாக இந்த மாமன்றத்திலே தகவல் தரப்பட்டது. அந்த அடிப்படையில், அந்த 10 ஆரம்ப சுகாதார நிலையங்களை முன்னுரிமை அடிப்படையிலே வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான அந்த அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுமேயானால், அந்த வசதிகள் இருக்குமேயானால், அவர் சொல்கிற அந்த இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்கு மைய அரசு ஒன்றும் தடையாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-15*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30,000 ஜனத்தொகை இருக்கவேண்டும் என்பதை ஆரம்ப சுகாதார நிலையம் அமைபபதற்கான சாத்தியக்கூறுக்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று கருத்து இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அது பல ஆண்டுகளுக்கு

[2002 மார்ச் 13

முன்னாலே எடுக்கப்பட்ட ஒரு முடிவு. ஆனால் எங்களுடைய வேலூர் ஊராட்சி ஒன்றியத்திலேகூட ஒரு இலட்சம் ஜனத்தொகைக்கு மேலே இருந்து கொண்டிருக்கக்கூடிய இடத்தில் ஊசூர் P.H.C. என்ற ஒரே ஒரு P.H.C. மட்டும்தான் இருக்கிறது. அதுபோல அலமேலுரங்காபுரம் என்ற பகுதியிலே ஒரு P.H.C. யைத் தொடங்குவது பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னாலே இதே அவையிலே உறுதிமொழி அளிக்கப்பட்டும்கூட அது நிறைவேற்றப்படவில்லை. அதுபோல ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திலே வெள்ளக்குட்டை என்ற பகுதியிலே ஒரு P.H.C. தொடங்குவதற்கு உறுதிமொழி அளிக்கப்பட்டு, அதுவும் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திலும் வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அலமேலுரங்காபுரம் என்கிற இடத்திலும் P.H.C.-யைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான அந்தத் தகுதிகள் இருக்கும்பட்சத்தில், ஏற்கெனவே அப்படி உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்குமேயானால், நிச்சயமாக இந்த அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலே இருக்கிற துணை சுகாதார நிலையங்களுக்கு மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய்க்குத்தான் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அங்கே இருக்கிற மருத்துவருக்கு ஒரு வாரத்திற்குள் அவை தீர்ந்துவிடுகின்றன. ஆகவே, அப்படி இருக்கிற நிலையில், அந்த மருத்துவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளிலேயாவது மீதி நேரங்களில் பணியாற்றக்கூடிய நிலையினை உருவாக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சொல்வது தவறான தகவல். ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் ஒதுக்கப்படுகிறபோது அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகின்ற புற நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்



2002 மார்ச் 13]

ஒதுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் அளவில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும்...

**திரு. கு. பிச்சாண்டி:** நான் சொன்னது ஒன்றிய துணை சுகாதார நிலையம் .....

**மாண்புமிகு திரு.செ. செம்மலை:** Sub-centre தானே?

**திரு. கு. பிச்சாண்டி:** ஆமாம், sub-centre.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** புற நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோலத்தான் துணை சுகாதார நிலையங்களிலும் அங்கு வருகிற புற நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருந்துகள் ஒதுக்கப்படுகின்றன. அப்படி புற நோயாளிகளின் எண்ணிக்கை கூடும்பட்சத்தில் நிச்சயமாக மருந்துகளுடைய அளவும் உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 30,000 ஜனத்தொகை வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கு தோழர் மணி அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசிலே அனுமதி கேட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதாவது 30,000 என்பதற்குப் பதில் 25 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்கிற கருத்துருவை மத்திய அரசுக்கு அனுப்பி, அதன் மூலமாக அனுமதி பெற்று, 10 இடங்களில் ஏற்கெனவே அரசு விதிமுறைக்கு ஏற்ப 10,000 ரூபாயைக் கட்டிவிட்டு பல இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரும் என்ற ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, அந்த 10,000 ரூபாய் கட்டிய ஊர்களுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் தர வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அதனுடைய நிலைமை என்ன என்பதைத் தெரிந்துகொள்வதோடு, அப்படி 10,000 ரூபாய் கட்டிய, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக ஐந்தாறு ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிற கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

[2002 மார்ச் 13

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற நிபந்தனையைத் தளர்த்துவதற்கான முறையீடுகள் ஏதேனும் வருமேயானால் இந்த அரசு அவை குறித்துப் பரிசீலிக்கும். அதற்கான மைய அரசினுடைய அனுமதியை வேண்டுமானாலும் இந்த அரசு கேட்டுப் பெறுவதற்கு, கோரிப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**14—**

**புறநகர் மருத்துவமனை**

***826—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கம் கிராமத்தில் உள்ள புறநகர் மருத்துவமனைக்கு உரிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தாம்பரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கம் கிராமத்தில் மந்தைவெளிப் புறம்போக்கு நிலத்தில் அரசு புறநகர் மருத்துவமனை அமைத்திடத் தேவையான நிலப்பரப்பான 2.35 ஏக்கரை மருத்துவத் துறைக்கு நிலமாற்றம் செய்வது குறித்த செயற்குறிப்பு ஒன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாய்வில் இருந்து வருகிறது. நிலமாற்றம் செய்து அரசு ஆணை வெளியிட்ட பின் அந்த மருத்துவமனைக்கான கட்டடம் கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-20*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புறநகர் மருத்துவமனை 13-7-1999 அன்று தொடங்கப்பட்டது. அன்றைய அந்தத் தொகுதியினுடைய



2002 மார்ச் 13]

நாடாளுமன்ற உறுப்பினரும், இன்றைய மத்திய அமைச்சருமான மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் கட்டடங்களுக்காக 15 இலட்சம் ரூபாய் நிதியையும் ஒதுக்கித் தந்தார்கள். இந்த 2.35 ஏக்கர் நிலத்தை ஒதுக்குவதற்காகப் பலமுறை நானே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே சென்று கேட்டபோது, சென்னை புறநகர் பகுதியிலே இருக்கின்ற இடங்களை ஒதுக்கித் தருவதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை, முதலமைச்சருடைய கையொப்பம் பெற வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, அரசு இடத்தில் அரசுக்குரிய மருத்துவ மனையைக் கட்டுவதற்காக ஒதுக்கித் தருவதற்காகவாவது அந்த நிபந்தனைகளைத் தளர்த்தி உடனடியாக அதனை எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அஃதன்னியில் அந்த மருத்துவமனைக்கு ஒரே ஒரு மருத்துவர்தான் deputation முறையிலே அனுப்பப்படுகிறார். அவரும் ஞாயிற்றுக்கிழமைகளிலே வருவதில்லை. நாள் ஒன்றுக்குச் சராசரியாக 190-க்கு மேற்பட்ட புறநோயாளிகள் அங்கே வருகிறார்கள். அப்படி வருகிற புறநோயாளிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வருவதற்கு வாய்ப்பு இல்லை. காரணம் மருத்துவர்களே வருவது கிடையாது. இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல இந்த மருத்துவமனை முற்றுப் பெறுவதிலே ஏற்பட்ட காலதாமதத்திற்குக் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய அவசரத் தன்மைதான் காரணம். எப்பொழுதுமே, ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தத் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னால் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, அதற்கான கட்டட வசதிகள், பணியாளர்களை நியமிக்கக்கூடிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டு, அத்திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தியிருப்பார்களேயானால், நிச்சயமாக இந்த மருத்துவமனை இந்நேரம் முழுமை பெற்றிருக்கும். அவசரகோலத்திலே அள்ளித் தெளித்ததைப் போல, ஓர் அறிவிப்பை மட்டும் செய்துவிட்ட காரணத்தினாலே இப்போது இடம் இல்லாமல், கட்டட வசதியில்லாமல், பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த ஆண்டு அளித்த ஆளுநர் உரையில்கூட, மாநகர மருத்துவமனைகளில் நோயாளிகளுடைய கூட்ட நெரிசலைத்

[2002 மார்ச் 13

தவிர்ப்பதற்காக, புறநகர் மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புக் கவனத்தை இந்த அரசு எடுத்துக் கொள்ளும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே, ஏற்கெனவே சென்னை மாநகரத்திலே இருக்கின்ற கே.கே. நகர், பெரியார் நகர், தண்டையார்பேட்டை, அண்ணா நகர் ஆகிய புறநகர் மருத்துவமனைகளை மேம்படுத்துவதோடு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியான நீலாங்கரை பகுதியிலுள்ள, அறிவிக்கப்பட்ட இந்தப் புறநகர் மருத்துவமனைக்கும் உடனடியாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து, படுக்கை வசதிகளோடுகூடிய முழுமையான ஒரு மருத்துவமனையாக மாற்றுவதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தொகை இன்னும் பொதுப் பணித் துறையினுடைய கணக்கிற்கு மாற்றம் செய்யப்படவில்லை. எனவே, நில மாற்றத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் உடனடியாகச் செய்து கொடுத்துவிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்தும், அவர்களுடைய கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் ஒரு தொகையைப் பெற்றுத் தருவார்களேயானால், கட்டடம் கட்டுவதற்கும் உடனடியாக அங்கே நடவடிக்கை எடுப்பதோடு அந்த மருத்துவமனையில் மருத்துவர்களை புதியதாக நியமித்து, அந்தப் பகுதிக்குச் சேவை செய்யக்கூடிய ஒரு நல்ல மருத்துவமனையாக அதனை ஆக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பொழுதே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அதற்கான கடிதம் தந்துவிட்டார். நான்தான் கொண்டுபோய்க் கொடுத்தேன். நான் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்னும் மேற்கொண்டு நிதி வேண்டுமானாலும் 10, 15 இலட்சம் வாங்கித் தருவதற்கும் தயாராக இருக்கிறேன். ஆனால், தற்போது அங்கே வருகிற 190 புறநோயாளிகள் பயன்பெறுவதற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவர்கள் வரவேண்டும். அதைப்போல, ஒரே ஒரு மருத்துவர் வருவதை மாற்றவேண்டும், குழந்தைகள் மருத்துவரே வருவது கிடையாது என்கிற காரணத்தினால் குழந்தைகளைக் கொண்டு போய்



2002 மார்ச் 13]

அங்கே சிகிச்சை அளிக்க முடியவில்லை. மாமல்லபுரத்திலே ஆரம்பித்தால் சென்னை வருகிற வரை, இடையிலே கிழக்குக் கடற்கரைச் சாலையில் இப்படி ஒரு மருத்துவமனையே கிடையாது என்கிற காரணத்தால், இதற்கு தனி முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்துவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எருமை மாடு வாங்குவதற்கு முன்னே கலயம் வாங்கியதால்தான் நிலைமை இப்படியாகிவிட்டது. எனவே, மருத்துவர்கள் நியமிக்கப்படாமல், நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமல், திட்டத்தை மட்டும் அறிவித்துவிட்டுள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் 15 இலட்சம் ரூபாயை ஒதுக்கி என்ன பிரயோஜனம்? 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கி பிரயோஜனம் இல்லை. எனவேதான் இந்த அடிப்படைத் தேவைகளையெல்லாம் முழுமையாகப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபோல, இந்த பகுதிக்குக் கூடுதலாகப் புறநோயாளிகள் வருகிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இப்போது இராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து டாக்டர்களை மாற்றுப் பணியில் deputation அடிப்படையில் நாங்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இன்னும் கூடுதலாக டாக்டர்களை அனுப்பவும், தேவைப்பட்டால் குழந்தைகள் வைத்தியத்திற்கு அல்லது இன்னும் வேறு எந்தெந்த நோய்கள் அங்கே அதிகமாக இருக்கின்றனவோ அவற்றுக்குத் தகுந்தவாறு டாக்டர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதுவும் குறிப்பாக, எந்த வகையான டாக்டர்கள், எத்தனை டாக்டர்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பாரேயானால் அந்தளவுக்கு அங்கு மருத்துவர்களை மாற்றுப் பணி அடிப்படையிலே இராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து அனுப்புவதற்கு நிச்சயமாக இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி தாலுகா மருத்துவமனையில் 10 இலட்சம் ரூபாய் செலவில் அறுவை சிகிச்சை மையம் கட்டப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் இருக்கிறது. அதற்குண்டான உபகரணங்கள் மற்றும் மயக்க மருந்து டாக்டர்கள் இல்லாமல் அது

[2002 மார்ச் 13

திறக்கப்படாமல் இருக்கிறது. அதைச் சார்ந்த பூவிருந்தவல்லி பகுதியில் உள்ள Maternity மருத்துவமனையில் ஒரு ஆபரேசன் தியேட்டரும் ஆவடி பகுதியில் நகராட்சி மருத்துவமனையில் ஒரு ஆபரேசன் தியேட்டரும் இயங்காமல் உள்ளன. இப்படி மூன்று ஆபரேசன் தியேட்டர்களும் இயங்காமல் இருக்கின்றன. நம்முடைய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சண்முகம், தனிக் கேள்வியாகப் போடுங்கள்.

வினா எண் 15, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**15—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

***512—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங்குளம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங் குளம் ஆதிதிராவிடர் காலனி என்பது பெருங்கண்ணங்குளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். பெருங்கண்ணங்குளம் குடியிருப்பிற்கு நாங்குநேரி, திசையன்விளை மற்றும் 342 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே அங்குள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 13]

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங் குளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், தாங்களும் அனுமதி அளித்துள்ளீர்கள். அதற்கு ஏற்கெனவே 15 தினங்களுக்கு முன்னால் நாங்கள் அடிக்கல் நாட்டிவிட்டோம். அந்த ஊர் மட்டுமல்ல, அதே பஞ்சாயத்தைச் சார்ந்த, பொண்ணாத்தி, புத்துக்குறிச்சி, குட்டம் பஞ்சாயத்தைச் சார்ந்த ஜார்ஜ் நகர், மைக்கேல் நகர், அண்ணா நகர், உவரி காலனி, ரம்மதபுரம், நம்பிக்குறிச்சி, தெற்குகள்ளிக்குளம், கூடங்குளம், செட்டிகுளம், விசுவநாதபுரம், நரிப்பாறை, மகாராஜபுரம், கைலாசபுரம், ஆ. திருமலாபுரம், ஓட்டக்காரன் குடியிருப்பு, சின்னம்மாள்புரம் ஆகிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பாவு, கஸ்தூரிரெங்கபுரத்தோடு நில்லுங்கள். தொகுதி முழுவதும் கேட்டுக்கொண்டு போனீர்கள் என்றால் அமைச்சர் எப்படிப் பதில் சொல்லமுடியும்?

**திரு. மு. அப்பாவு:** கிராமங்களில் இந்த ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அனுமதி வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கடந்த ஆட்சியில் பெறப்பட்ட தாமிரபரணி-பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இந்த ஆண்டு Tender கோரப்பட்டுள்ளது. அதுவும் வருகிற 2003 மார்ச் மாதம் தாமிரபரணியிலிருந்து பணகுடி, வள்ளியூர், ஏர்வாடி, களக்காடு, திருக்குறுங்குடி ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் அறிவித்த தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 342 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் தருவதாக உறுதி அளித்தீர்கள். ஆனால், அதிலே 103 கிராமங்களுக்கு மட்டுமே தற்போது இணைப்பு வழங்குவதாகச் சொல்கிறார்கள். மற்ற கிராமங்களுக்கு இணைப்பு வழங்குவதற்கு ஏற்கெனவே ஒப்பந்தம் பெற்றுள்ள L&T நிறுவனத்தினர் மறுத்து வருகின்றனர். அதற்கு நிதி ஏராளமாக இருக்கிறது. தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 43 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கி நிதியும் இருக்கிறது. ஆகவே, நீங்கள் அறிவித்த 342 கிராமங்களுக்கும், 1996-க்குப் பிறகு கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு இணைப்புக்

[2002 மார்ச் 13

முற்பகல் 10-30

கொடுக்க மறுத்து வருகிறார்கள். ஆகவே, அந்த தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை சிறப்புக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாத, புதியதாக 1996-க்குப் பிறகு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விரைவாக இணைப்பு வழங்குவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

16—

**தெரு விளக்கு வசதி**

***769—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்குத் தெரு விளக்கு வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்குத் தெரு விளக்கு அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கிராமம் சிறிய கிராமமாக இருக்கிறது. மேலும் அந்தக் கிராமத்தில் ஏற்கெனவே மூன்று தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டுமென்றால் ஊராட்சி மன்றத் தலைவருடைய தீர்மானத்தின் அடிப்படையில் அந்தக் கிராமத்தினுடைய ஊராட்சி நிதியைப் பயன்படுத்தி அவர்களே அமைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2002 மார்ச் 13]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பொறுப்பு மேட்டுப்பட்டி ஊராட்சியிலே போதிய நிதிவசதி இல்லை என்கின்ற நிலை உள்ளது. அதற்கு மேலும் தெரு விளக்குகள் அமைத்துத்தர வேண்டிய அவசியம் இருக்கின்றது. கடந்த காலங்களில் எல்லாம் அப்படி நலிவுற்ற ஊராட்சிகளுக்கு தெரு விளக்குகள் அமைப்பதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்வது வழக்கமாக இருந்தது. அதன்படி நமது அரசும் வருகின்ற காலத்திலே அந்த ஊராட்சிக்கு ஓரிரு தெரு விளக்குகள் அமைத்துத் தருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை உள்ள ஊராட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து பெற்றுக் கூட தெரு விளக்குகள் அமைத்துக்கொள்ளலாம். ஆனால், 35 குடும்பங்களைக் கொண்ட அந்தக் கிராமத்திற்கு மூன்று தெரு விளக்குகள் போதுமானவை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊரின் பெயரே பொறுப்பு மேட்டுப்பட்டி. இதற்குக்கூடப் பொறுப்பு ஏற்காமல் இருந்தால் எப்படி? (சிரிப்பு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசுகின்ற நேரங்களிலே எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற நிதியிலே குறிப்பிட்ட அளவு தொகையை அரசு நிர்ணயித்துவிடுகிறது; ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாய்க்கு இதைத்தான் செய்ய வேண்டும் என்று அரசு திட்டவட்டமாக விதியை நிர்ணயம் செய்துவிடுகின்ற காரணத்தினால், எங்களால் போதிய அளவிற்கு எல்லாவிதமான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு இயலாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிற காரணத்தினால்தான் அரசின் மூலமாக நிதியைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்கின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். வருகின்ற காலத்திலாவது அமைச்சரும் அரசும் எங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியினை நாங்களே செலவு செய்துகொள்ளலாம் என்கின்ற ஓர் ஆணையை பிறப்பிப்பார்களேயானால், நிச்சயமாக இப்படிப்பட்ட சிறிய சிறிய காரியங்களையெல்லாம் நாங்களே செய்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2002 மார்ச் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குப் பதில் வேண்டாம். (சிரிப்பு)

வினா எண் 17, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

17—

### அங்காடி

***1440—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், ராஜா கொத்தமங்கலத்தில் பொது விநியோக அங்காடி அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், ராஜா கொத்தமங்கலத்தில், அங்கு சுற்றுப்புறத்திலே இருக்கக்கூடிய பகுதி மக்களுடைய தேவையைக் கருதித்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பரிசீலனையை விரைவாக முடித்து, உடனடியாகத் திறப்பதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 மார்ச் 13]

18—

### வெங்காய இருப்புக் கிடங்கு

***9724—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோடு வெங்காய இருப்புக் கிடங்கு பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைய சூழ்நிலையில் மாற்றி அமைத்துத் தர சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கிடங்கு பாழடைந்த நிலையிலே இருக்கிறது. அதை எப்படியாவது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்து, அதை அரசு அலுவலகமாகவோ - பெரிய கட்டடம், 20 இலட்சம் ரூபாய் பெறுமான அந்தக் கட்டடம் பாழாகியிருக்கிறது - அல்லது விவசாயிகளுக்குப் பயன்படுகிற விதத்தில் ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடோ செய்துகொடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டில்தான் இது கட்டி முடிக்கப்பட்டது. வெங்காய ஏற்றுமதிக்காக திண்டுக்கல் சுற்றுவட்டாரத்தில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து இந்தக் கிடங்கில் வைத்து

[2002 மார்ச் 13

ஏற்றுமதி செய்வதற்கு வசதியாகத்தான் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் விவசாயிகளிடத்திலே அதற்கு ஆதரவு இல்லாததாலும், அதைச் சரியாகப் பயன்படுத்த விவசாயிகள் யாரும் முன்வராத காரணத்தாலும், இவை நீண்ட நாட்களாகப் பயனற்று இருக்கின்றன. இவற்றைத் தனியார் மற்றும் இதர அரசு நிறுவனங்கள் பயன்படுத்த முன்வந்தால் அவர்களுக்கு மாற்றித்தர, அவர்களுக்கு வாடகைக்குவிட அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

19—

### பழப் பண்ணைகள்

***1565—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் பழப் பண்ணைகள் அமைய அரசு தனியார்களை ஊக்குவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வகையில்?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் பழப் பண்ணைகள் அமைக்க அரசு தனியார்களை ஊக்குவிக்கும்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பழங்கள் பயிரிட தனியாரை அரசு ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது குறித்து இந்த மன்றத்திலே



2002 மார்ச் 13]

பேசப்பட்டிருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதன் அடிப்படையிலே செயல்பட வேண்டுமென்று ஏற்கெனவே இதே மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது என்கிற கருத்தை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் பழப் பண்ணைகள் வளர்ச்சி அடையச் செய்வதை ஊக்குவிப்பதாகச் சொன்னார்கள். அப்படிப் பழப் பண்ணைகளில், காய்கறிப் பண்ணைகளில் பயிரிடக்கூடிய விவசாயிகளை அரசு எந்த வகையிலே ஊக்குவிக்கப் போகிறது? மானியத்தோடு கடன் வழங்கி ஊக்குவிக்கப் போகிறதா? எந்தெந்த வகையில் விவசாயிகளுக்கு உதவிகரமாக இருந்து ஊக்குவிக்கப் போகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறுபட்ட திட்டங்களை நிறைவேற்றி பழச் செடிகளை விவசாயிகளுக்கு வழங்குகிறபோது, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ப 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்குத் தேவையான இடுபொருட்கள் எல்லாம் மானியமாகத் தரப்படுகின்றன. அவர்கள் பயிர்களை வளர்ப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்திகளை அளிக்க, பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு ஆங்காங்கே விவசாயிகளுக்கு உதவிபுரிந்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிறைய விவசாயிகள் ஆரஞ்சு பயிரிட்டு வந்தார்கள். இப்போது ஆரஞ்சு பயிரிடுகின்ற விவசாயிகளுக்குச் சரியாக மானியம் வழங்கப்படாத காரணத்தால் விவசாயிகள் ஆரஞ்சுப் பழங்கள் பயிரிடுவதைக் குறைத்து வருகிறார்கள். ஆரஞ்சு பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மத்திய அரசினுடைய உதவியுடன் செய்யப்படும் பழ அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாகப் பழங்கள் உற்பத்தி செய்வதற்கு அரசு விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது. இந்தத் திட்டங்களின் மூலமாக 50 சதவிகித மானிய விலையில் ஆரஞ்சு, பலா, Plum, Peach போன்ற பழ வகைகளுக்கு சிறு குறு விவசாயிகளுக்கு கன்றுகளைத் தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கி, தனியார் பழப் பண்ணைகளை ஆங்காங்கே ஊக்குவித்து வருகிறோம் என்கிற செய்தியை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**20—**

**தரிசு நில மேம்பாடு**

***1573—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்ட 10 மாவட்டங்களிலே, புதுக்கோட்டை





மாவட்டத்தையும் தேர்ந்தெடுத்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் நான் சார்ந்திருக்கின்ற புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே ஏறத்தாழ 3 ஒன்றியங்களிலே, புதுக்கோட்டை ஒன்றியத்திலே 127 ஹெக்டேர் நிலங்களும், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திலே ஏறத்தாழ 1,200 ஹெக்டேர் தரிசு நிலங்களும், குன்னண்டார்கோவில் ஒன்றியத்திலே 995 ஹெக்டேர் தரிசு நிலங்களும் தயாரான நிலையிலே உள்ளன. ஆகையினாலே இந்த நிலங்களையெல்லாம் நடப்பு நிதியாண்டிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழே சேர்த்துக்கொள்ள வேண்டும். என்னுடைய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலுள்ள மக்கள் பயன்பெறத்தக்க வகையிலும், விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையிலும், அவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே இந்த வருடம் 10 மாவட்டங்களிலே தமிழக அரசினுடைய சார்பிலே 1,35,905 ஏக்கர் நிலங்களிலே தரிசு நில மேம்பாட்டுப் பணித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலே விவசாயிகள் இதிலே எந்த அளவிற்குப் பயன்பெறுகிறார்கள், வேளாண்மைத் தொழில் தமிழகத்திலே இந்தத் திட்டங்களின் மூலம் எந்த அளவிற்கு வளர்ந்து வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகத் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பொன்னமராவதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நில நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, தரிசு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவர் வேண்டியபடி அடுத்த ஆண்டு தேவையான அளவிற்கு அங்கே இருக்கிற தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நான் பணிவோடு இந்த அவையிலே கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2002 மார்ச் 13

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தமிழ்நாட்டில் மொத்தம் 20 இலட்சம் ஹெக்டேர் நிலம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது ஆளுநர் உரையிலே 10 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1,35,905 ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்கள் இப்போது இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன? எஞ்சியுள்ள 20 மாவட்டங்களை எப்போது இந்த அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழகத்தில் சமூகப் பொருளாதார மாற்றத்தை நிலை நிறுத்தும் வகையில் உற்பத்தியிலும் தரத்திலும் மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும்; அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; அதிக வருமானத்தை உருவாக்குவதன் மூலமாக வேலைவாய்ப்பைத் தர வேண்டுமென்கின்ற உயர்ந்த எண்ணத்தில் உருவாக்கப்பட்டிருக்கிற இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், தமிழகத்தில் சேலம், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டமும் ஒன்றாகும். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்களாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன், என்ன, உங்களுடைய திருவண்ணாமலை மாவட்டமா? (சிரிப்பு)

**திரு. க. முருகவேல் ராஜன்:** தரிசு நிலங்களாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக என்னுடைய வந்தவாசி தொகுதி, பனை மரங்களைத் தவிர



2002 மார்ச் 13]

வேறு எதையும் பார்க்க முடியாது என்கிற அந்த அளவிற்கு எங்கு பார்த்தாலும் தரிசு நிலங்களாகக் காட்சி அளிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மிக அருமையான திட்டங்களில் ஒன்று, தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களை மேம்படுத்துவது என்பதாகும். எதிர்காலத் தமிழ்நாட்டிற்கு ஒரு வளமான சூழ்நிலையை உருவாக்கும் இந்தத் திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுமா? வந்தவாசி தொகுதியும் அதிலே பயன்படும் வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருவண்ணாமலை மாவட்டத்திலும் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாண்புமிகு பேரவை உறுப்பினர் கேட்டுக்கொண்டதுபோல, வந்தவாசிக்கும் சீக்கிரம் வந்துவிடும் என்பதை இந்தப் பேரவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலே இருக்கிற 13 ஒன்றியங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு உட்பட்டவை. அந்த வகையிலே 13 ஒன்றியங்களிலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எடுத்துச் செய்யப்படுமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்தக் கேள்வி எழுந்திருப்பதால், நான் விளக்கம் கூற முற்படுகிறேன். தமிழகத்தில் எங்கெல்லாம் தரிசு நிலம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் அத்தனை தரிசு நிலங்களிலும் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த 4 ஆண்டு காலத்திற்குள், தமிழகத்திலுள்ள அனைத்து தரிசு நிலங்களையும் மேம்படுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி, சொல்லுங்கள்.

[2002 மார்ச் 13

**திரு. ஜி.கே. மணி:** கேள்வி முடிந்து பதில் சொல்லியாகி விட்டது, அடுத்த பிரச்சினை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்புகிற இந்த ஒழுங்குப் பிரச்சினை மூலம் ஒன்றைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்; தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். ஏற்கெனவே சென்ற கூட்டத் தொடரில் நான் ஒருமுறை இப் பிரச்சினையை கிளப்பினேன். இந்த மன்றத்திலே எடுக்கப்படுகிற வீடியோ நிகழ்ச்சிகளை ஃபிலிம் டிவிஷன் எடுத்து சென்சார் செய்து, எடிட் செய்து, எல்லா டி.வி.-க்கும் கொடுத்துவிடுகிறது. அந்த டி.வி.காரர்கள் யார் யார் படத்தைக் காட்ட விரும்புகின்றார்களோ, அவற்றை அவர்கள் காட்டுகிறார்கள். ஆகையினாலே, இதிலே அரசுக்கு எந்தத் தலையீடும் இல்லை என்று எனக்குத் தெரிவித்தீர்கள். ஆனால், நேற்றைக்கு முல்லைப் பெரியாறு அணையைக் குறித்து ஒரு பிரச்சினை வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் விளக்கம் அளித்தார்கள். அந்தப் பிரச்சினையைக் கிளப்பிய நம்முடைய பரிதி அவர்களையும் காட்டினார்கள். முதலமைச்சர் பேச்சையும் காட்டினார்கள். நம்முடைய நிதியமைச்சரையும் முழுக்கக் காட்டினார்கள். அந்தப் பேச்சிலே கூட ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து இந்த உரையைத் துவக்கி வைத்த, அந்த ஆளுங்கட்சி உறுப்பினரையும் காட்டினார்கள். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்ன செய்தீர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நான் விளக்கம் கொடுத்தேன்.



2002 மார்ச் 13] [திரு. துரைமுருகன்]

ஆனால், ஒரு நிமிடம்கூட என்னைக் காட்டவில்லை. என்னுடைய பதிலைத் தெரிவிக்கவில்லை. என்னைக் காட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் உங்கள் ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று கேட்டபோது, அந்தக் கட்சியைச் சார்ந்த நான் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை; என் பதிலைச் சொன்னேன். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இதைச் செய்தோம் என்று சொன்ன பதிலைக்கூடக் காட்டாமல் மறைக்கிற காரணத்தால் —— நான் ஜெயா டி.வி. தான் பார்த்தேன். ஒருக்கால் நம்மைக் காட்டவில்லை போல் இருக்கிறது என்று சொல்லி பிறகு —— சன் டி.வி.க்கு போன் செய்து என் படம் அதிலே வந்திருக்கிறதா என்று கேட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை என்று பதில் சொன்னார்கள். ஆகையினால் ஆளுங்கட்சியினருக்கு விளம்பரம் தருகிற வகையிலே, ஆளுங்கட்சிக்கு அனுசரணையாகவே இருக்கிற காரணத்தால் எதிர்க்கட்சிகளுக்கு இருட்டடிப்பு செய்யப்படுகிறது. எனவே, எங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், இந்த மன்றத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளுக்கு முழு பொறுப்பும் ஏற்க வேண்டியவர்கள் தாங்கள்தான். எனவே, அருள்கூர்ந்து எதிர்க் கட்சியிலே இருக்கிற எங்களுக்கு அந்தப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் (குறுக்கீடுகள்) இதை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் என்ற முறையில் அதற்கு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, என்ன முறை என்பதைச் சொல்லிவிடுகிறேன். பேரவையின் முழு நடவடிக்கைகளும் ஒளி நாடாவில் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் உதவியோடு 30 நிமிடங்களுக்கான ஒளி நாடாக்களாக மறுபடியும் தொகுக்கப்பட்டு, தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு நாளும் காலை, மாலை நடவடிக்கைகள், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மூலம் கூட்டம் முடிந்த பிறகு வழங்கப்படுகிறது. 3 மணி நேரம் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள், 30 நிமிட ஒளி நாடாக்களில் தொகுக்கப்படுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் முக்கிய நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தி தொகுப்பு நடைபெறுகிறது. பேரவைச்

[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 13

செயலகத்தைச் சேர்ந்த துணைச் செயலாளருடைய மேற்பார்வையில் இந்தத் தொகுப்புப் பணி நடைபெறுகிறது. இதிலே முக்கியமானவை என்று கருதப்படக்கூடிய அளவிற்கு, அந்த 30 நிமிடத்திலே, 3 மணி நேர நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் தொகுக்க வேண்டியிருக்கிறது. அதிலே சில நேரங்களிலே துரைமுருகன் விடுபட்டுப் போயிருந்தால் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

## 2. தகவல் கோரல்

### சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம்

**திரு. பரிதி இளம்வழுதி:** சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் அதைப் பற்றி ஏற்கெனவே சொன்னீர்கள். திருமாவளவன் அவர்கள் பேச்சிலே அது இடம் பெறப் போகிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அவர் பேசும்போது சொல்லட்டும். இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. சட்டக் கல்லூரி மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைப்பற்றி அவர் பேசுவார். பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, அதைப் பற்றிய பதில் வருகிறது. நீங்கள் சொன்ன பிரச்சினைக்கு பதில் வரப் போகிறது (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். சொன்னால்தான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** சட்டக் கல்லூரி மாணவர்கள் . .



2002 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன் அவர்கள் அதைப் பற்றிப் பேசப் போகிறார். அதற்கான பதிலை முதலமைச்சர் சொல்வார்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

## 3. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது முதல் பதினெட்டாவது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிக்கை ஒன்றை வழங்குவார்கள்....

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம்—தொடர்ச்சி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னிடத்திலே வந்து கேட்டீர்கள். நான் விளக்கம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அமருங்கள். (குறுக்கீடுகள்) திருமாவளவன் என்பவர் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், உங்கள் கட்சியின் சார்பாகப் பேசப் போகிறார். அதற்கு முதலமைச்சர் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் சொல்வார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். உங்கள் பிரச்சினைக்குத்தான் பதில் வருகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள். நான் முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் படிப்பதற்கு அழைத்து விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் ஒலிபெருக்கி இல்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவர்களும் ஒலிபெருக்கி இல்லாமல் பேசுகிறார். ஒலிபெருக்கி இல்லாமல் என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்களும் பேசுகிறீர்கள், அவர்களும் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எப்படிப் பேசியிருக்கிறீர்களோ அதேமாதிரி பேசுகிறார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒலிபெருக்கியினுடைய துணை இல்லாமல், பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் நீங்களும் பல நேரங்களிலே பேசுகிறீர்கள். நீங்கள் பேசுவதற்கு அங்கேயிருந்து பதில் வருகிறது. (குறுக்கீடுகள்) இது குறித்து எல்லாம் நடவடிக்கை எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு அவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) ஒலிபெருக்கியினுடைய துணை இல்லாமல், பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.





## விதி 110–ன்கீழ் அறிக்கை

### அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் இணைப்பு பற்றிய விளக்கங்கள் கொண்ட முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும் ஆண்டிமடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. குரு அவர்களும், அரியலூர் மாவட்டம் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்கப்படும் என்ற அறிவிப்பால், மாவட்டம் முழுவதும் பதட்ட நிலை இருப்பதாகத் தெரிவித்து, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் எனத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்கள்.

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களின் இணைப்பு சம்பந்தமாக தமிழக அரசு எடுத்துள்ள முடிவு குறித்து ஒரு சில விளக்கங்களை இங்கே தர விரும்புகிறேன்.

9-3-2002 அன்று நிகழ்த்தப்பட்ட மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையில், செலவைக் குறைக்கவும், நிருவாகத் திறனை மேம்படுத்தவும் அரியலூர் மாவட்டத்தைப் பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக் இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றும், விரிவுபடுத்தப்பட்ட பெரம்பலூர் மாவட்டத்தின் தலைமையிடம் பெரம்பலூராக இருக்கு என்றும், இருப்பினும் சில முக்கியமான மாவட்ட நிலை அலுவலகங்க அரியலூரில் செயல்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம் 1-1-2001 முதல் செயல்பட்டு வருகிறது. இந் மாவட்டம் உருவாக்கப்படும்போது, இந்திய ஆட்சிப் பணி அலுவல திரு. பி.எஸ். பாண்டியன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட் ஒரு நபர் குழு, பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அரியலூர் மாவட்டம் என்ற புதிய மாவட்டத்தை உருவாக்குவது குறித் சாத்தியக்கூறுகள் அனைத்தையும் ஆராய்ந்து, அண்மையி அமைக்கப்பட்ட மற்ற புதிய மாவட்டங்களில் பின்பற்றப்பட

வரையறையைக் கொண்டு பார்க்கும்போது, அரியலூர் மாவட்டம் என்ற புதிய மாவட்டம் அமைக்கத் தேவையில்லை என்று கருத்துரை வழங்கியது. ஆனால், அரசியல் காரணங்களுக்காக அப்போது இருந்த தி.மு.க. அரசு, ஒரு நபர் குழுவின் கருத்துரையை ஒதுக்கிவிட்டு பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டு சிறிய மாவட்டங்களாக உருவாக்கியது.

*முற்பகல் 10-55*

ஏற்கெனவே உள்ள நீலகிரி மாவட்டத்தைத் தவிர, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் மிகவும் குறைவான மக்கள் தொகை கொண்ட மாவட்டங்களாக இருப்பது தெரிய வந்தது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பெரம்பலூர் மாவட்ட மக்கள் தொகை, 4,86,971 என்றும், அரியலூர் மாவட்ட மக்கள் தொகை 6,94,058 என்ற அளவிலும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சில சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் எண்ணிக்கையைவிட இந்த மாவட்டங்களின் மக்கள் தொகை குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், இந்த இரண்டு பிரிக்கப்பட்ட மாவட்டங்களும், நிர்வாக அடிப்படையில், மிகச் சிறிய மாவட்டங்களாக உள்ளன.

மேலும், சில மாவட்டங்களில், அதிக மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளாக உள்ள நகரங்கள், வட்டத் தலைமை இடங்களாகக்கூட—அதாவது Taluk Headquarters-ஆகக்கூட இல்லை. ஆனால், இந்த மாவட்டங்களில், பேரூராட்சிகள்தான் மாவட்டத் தலைமை இடங்களாக அமைந்துள்ளன.

அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணி இடங்களை, பணியாளர்களுக்கு பணியில் சேர விருப்பம இல்லாத காரணத்தினால், முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதனால் நிர்வாகத்தில் சிரமங்களும் இடர்ப்பாடுகளும் ஏற்பட்டு, பொதுமக்களுக்குச் சென்று சேர வேண்டிய நன்மைகள், காலத்தே அவர்களுக்குச் சேரவில்லை. எனவே, இந்த மாவட்டங்கள் நிர்வாக ரீதியில் unviable-ஆக உள்ளன. அதாவது, சரியாக இயங்க முடியாதவையாக உள்ளன. மாவட்டத்தைப் பிரிக்க நினைப்போர், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டாமா? பல பதவிகள், குறிப்பாக மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர், அரசுக் கருவூலம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், நலவாழ்வு இணை





இயக்குநர், முதன்மைக் கல்வி அலுவலர் ஆகிய பதவிகள்கூட உருவாக்கப்படவில்லை.

இப்படிச் சிறிய மாவட்டங்களை உருவாக்குவதால், மாநிலம் முழுவதும் பெருமளவில் தாக்கம் ஏற்பட்டு, தீர்க்க முடியாத சிக்கல்கள் உருவாகும். நிர்வாகச் செலவுகள் உயர்ந்து, வளர்ச்சிப் பணிகளில் தேக்க நிலை உண்டாகும். இதன் எதிரொலியாக, பொதுமக்கள் ஏழ்மைக்கும், அதிருப்திக்கும் உள்ளாவார்கள்.

மேலும், அரியலூரில் புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்குவதில், தொடர் செலவினம் - Recurring Expenditure - 4 கோடி ரூபாயும், தொடராச் செலவினம் - Non-recurring Expenditure - 12 கோடி ரூபாயும் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய இக்கட்டான நிதி நிலையில், இச்செலவினத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், இந்த 16 கோடி ரூபாயை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாமே?

முன்பு மாவட்டங்களின் பெயர்களிலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களிலும் இணைந்து இருந்த பல்வேறு தலைவர்களின் பெயர்களை அகற்றிவிட்டால், தமிழ்நாட்டில் சாதிச் சமயப் பூசல்கள் குறையும் என்று கருதப்பட்டு, அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களின் பெயர்களே மாவட்டங்களின் பெயர்களாக வைக்கப்பட்டன. அதேபோல அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களோடு இணைந்து இருந்த தலைவர்களின் பெயர்களும் அகற்றப்பட்டன. அப்படி இருக்க, ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதியில் பெரும்பான்மையாக வசிக்கும் ஒரு இன மக்களை மற்ற இனத்தவர்களிடம் இருந்து பிரித்து, அவர்களுக்கென ஒரு மாவட்டத்தை உருவாக்க நினைத்தது முந்தைய தி.மு.க. அரசு. தி.மு.க. அரசின் இந்த முடிவு எந்த வகையிலும் சரியானது அல்ல.

முந்தைய தி.மு.க. அரசு, பெரம்பலூர் மாவட்டத்தைப் பிரித்துள்ளதே தவிர, பெரம்பலூரை சிறிய மாவட்டமாகவும், அரியலூரை பெரிய மாவட்டமாகவும் பிரித்துள்ளது என்ற குற்றச்சாட்டு அந்த மாவட்டத்து மக்களிடையே நிலவுகிறது.

அரியலூர் மாவட்டம் உருவாகி ஏறத்தாழ ஓராண்டு ஆனபோதும்கூட, அந்த மாவட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு அலுவலகம்கூட அமைக்கப்படவில்லை. அவருக்கு எனத் தனியாக பணியமைப்புக்கூட ஏற்படுத்த வகை செய்யப்படவில்லை.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மார்ச் 13

இன்றைய சூழ்நிலையில், பெரும்பாலான அலுவலகங்கள் பெரம்பலூரையே தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கின்றார்களே தவிர, எல்லாவகையிலும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள், பெரம்பலூரைத் தலைமை இடமாகக் கொண்ட ஒரே மாவட்டமாகத்தான் இயங்கிக்கொண்டு வருகின்றன. பிரிக்கப்படாத பெரம்பலூர் மாவட்டம் ஒரு கட்டுக்கோப்பான மாவட்டமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. தலைமையிடத்தை அணுகுவதற்கு எவ்விதப் போக்குவரத்து வசதியும் அற்ற மாவட்டமாக அது இருந்ததில்லை. ஆகவே, நிர்வாக வசதிக்காகவே, சிக்கன நடவடிக்கையாகவே, இந்த மாவட்டங்களின் இணைப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அரியலூரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற பெரிய அரசு அலுவலகங்கள் தொடர்ந்து அங்கேயே இருக்கும். அந்த அலுவலகங்களைப் பெரம்பலூருக்கு மாற்றும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

பெரம்பலூர், அரியலூர் இரண்டு மாவட்டங்களுமே, மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ளன. அங்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் அதிக அளவு உள்ளனர் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரை இந்த மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாகவும், அதிக அளவிலும் செய்ய வேண்டும் என்பதையே தலையாய கடமையாகக் கொண்டிருக்கிறது என்பதையும் கூறிக்கொள்கிறேன். அந்த வகையில் பெரம்பலூர் மாவட்டம் வளர்ச்சிப் பணிகளில் முன்னுரிமை பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு . . (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, 110-வது விதியின்கீழ் வைக்கப்படக்கூடிய அறிக்கையின்மீது விவாதத்திற்கு இடமளிப்பதில்லை. நீங்கள் பேசுகின்றபோது பேசலாம். (குறுக்கீடு) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. இரா. திருமாவளவன்.



2002 மார்ச் 13]

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்கு வரவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என் பெயரைக் கொடுத்திருக்கிறேன், அது சேர்க்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேர்த்துக்கொள்ளச் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. முதலமைச்சர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்லவில்லை. 110-வது விதியின்கீழ் அறிக்கையை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன், (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, 110-வது விதியின்கீழ் வைக்கப்படக்கூடிய அறிக்கையின்மீது விவாதத்திற்கு இடமளிப்பதில்லை. நீங்கள் பேசுகிறபோது அதற்கான விளக்கங்களைச் சொல்லலாம். ஒரு புதிய மரபை உருவாக்காதீர்கள். திரு. இரா. திருமாவளவன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அந்த மாவட்டத்து மக்களின் உணர்வுகளை இந்த அரசு புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே நீங்கள் இதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லி, நாங்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்).

[2002 மார்ச் 13

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. இரா. திருமாவளவன். (குறுக்கீடுகள்) திரு. திருமாவளவன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டப் பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், அரசின் கொள்கை நெறிகளையும், செயல் திட்டங்களையும் முன்வைத்துள்ளதை வரவேற்று........ (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, துரைமுருகன் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** உறுப்பினர் பேச ஆரம்பித்து விட்டாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன் பேச ஆரம்பித்துவிட்டார்.

**திரு. துரைமுருகன்:** சரி, நான் பிறகு பேசுகிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் இந்தப் பேரவையில் முன் வைத்திருக்கிற அரசின் கொள்கை நெறிகளிலும், செயல் திட்டங்களிலும் பாராட்டுக்குரிய பல்வேறு சிறப்புகள் அமைந்திருக்கின்றன. அதில் நான் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டுகின்றேன். அதற்கு முன்னதாக மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக மாற்றுவதே தனது இலட்சியம் என்று முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிற இந்த அமைச்சரவையில் 27 பேர் அமைச்சர்களாக





இடம் பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த அமைச்சரவையிலிருந்து ஒரேயொரு இஸ்லாமிய பிரதிநிதித்துவமும் இந்த அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. அது வேதனை அளிக்கிறது. தமிழகத்திலே நான்கில் ஒரு பங்காக இருக்கிற, மிகப் பெரும்பான்மை சமூகமாக இருக்கிற தலித் சமூகத்தின் சார்பிலேயுள்ள அமைச்சர்கள் இரண்டாகக் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அமைச்சரவையிலே இல்லை என்பதும் வருத்தம் அளிக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிற அமைச்சரவையில் இஸ்லாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் எனவும், நான்கில் ஒரு பங்கு மக்கள் தொகை கொண்ட பெரும்பான்மை சமூகமான தலித் சமூகத்தினருக்கு மேலும் மூன்று அமைச்சர்கள் பதவி, விகிதாச்சார அடிப்படையிலே வழங்கப்பட வேண்டுமென்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூன்றுபேர் அமைச்சர்களாகவும், ஒருவர் துணை சபாநாயகராகவும் இருந்தார்கள். அந்த அடிப்படையிலே இந்த அமைச்சரவையில் மேலும் தலித் மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதைப் பணிவான வேண்டுகோளாக இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-05)

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய 15 அம்சத் திட்டம் மிகவும் சிறப்பிற்குரியது; பாராட்டிற்குரியது; வரவேற்புக்குரியது. ஆனால், அந்தத் திட்டம் அமைந்திருக்கிற இந்த ஆளுநர் உரையில் போக்குவரத்துத் துறையை படிப்படியாகத் தனியார் மயமாக்குவதாக அறிவித்திருப்பது என்பது, மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது. ஏலம் மணக்கிற தேநீரில் ஈ விழுந்து கிடப்பதைப்போல, சுவையான பருப்பு சாம்பாரில் பல்லி செத்துக் கிடப்பதைப்போல, மணக்கும் கூந்தலிலே ஈரும், பேனும் இருப்பதைப்போல, இனிய மாம்பழத்திற்குள் வண்டு துளைத்து அதைக் கெடுத்திருப்பதைப்போல, இந்த அழகிய 15 அம்சத் திட்டத்தில்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வண்டு துளைத்த மாம்பழம் மிகவும் சுவையான மாம்பழம்.

**திரு. இரா. திருமாவளவன்:** வண்டு துளைத்த மாம்பழம் சாப்பிடமுடியாது. ஆனால், 15 அம்சத் திட்டங்கள் என்பது, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு கூடிய திட்டம். தேசத்தின்மீது ஒரு

நல்ல அக்கறையை வெளிப்படுத்துகிற திட்டம். அந்தத் திட்டத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், தனியார்மயமாக்குகிற இந்தத் திட்டம் என்பது, அந்த ஒட்டுமொத்தச் சிறப்புகளையும் பின்னுக்குத் தள்ளிவிடுகிறது. அதைக் கெடுத்துவிடுகிறது. ஆகவே, தயவுகூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து போக்குவரத்துத் துறையைத் தனியார்மயமாக்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும், தவிர்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது சேலம் உருக்காலையைத் தனியாருக்கு விற்கக்கூடாது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒருங்கிணைத்த ஆர்ப்பாட்டத்திலே — விடுதலைச் சிறுத்தைகளும் பங்கேற்று — எதிர்ப்புத் தெரிவித்தது. அதைப்போல, இன்றைக்கு மத்திய அரசாங்கம் சேலம் உருக்காலையை மட்டுமல்ல, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைக்கூடத் தனியார்மயமாக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இதையெல்லாம் தடுத்து நிறுத்த தமிழக அரசு முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பதற்காக நாம் எண்ணிக் கொண்டிருந்த நிலையில், தமிழக அரசும் இதற்காகப் போராட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த நிலையில், தமிழக அரசே படிப்படியாய்ப் போக்குவரத்துத் துறையைத் தனியார்மயமாக்குவது என்பது மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது; இடி விழுந்ததைப்போல் நாங்கள் உணர்கிறோம். தனியார்மயமாக்குவது என்பது, ஆட்குறைப்பிற்கு வழிவகுக்கும், வேலைவாய்ப்பைக் குறைக்கும்; மேலும், இட ஒதுக்கீடு என்ற சமூக நீதிக்கு எதிராக அமையும். ஒடுக்கப்பட்டவர்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, ஏழையெளியவர்களுக்கு எதிரான ஒரு திட்டம்தான், தனியார்மயமாக்குவது.

ஒரு துறையைத் தனியார்மயமாக்குகிறோம் என்று சொன்னால், ஒன்று, நிர்வாகத் திறமையில் இயலாமையை வெளிப்படுத்துகிறது; அல்லது அங்கு ஆதாயத்தை ஓர் அளவுகோலாகக் கொண்டு செயல்படுவதாக வெளிப்படுத்துகிறது. ஆகவே, அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கிற ஓர் அரசாங்கம் ஒரு துறையை இலாபகரத்தோடு நடத்துவதற்கு முடியவில்லை என்று கருதி அதைத் தனியாரிடத்திலே ஒப்படைப்பது என்றால் அவர்களால் எந்தவிதத்திலே இலாபத்தோடு நடத்தமுடியும் என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை; உணர்ந்துகொள்ள முடியவில்லை. இது மத்திய அரசின்



D V2', 3:1202 101.14:2

திட்டமாக இருக்கலாம்; உலகமெங்கும் இருக்கிற திட்டமாக இருக்கலாம். ஆனால், இது ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான திட்டம்; உழைக்கிற மக்களுக்கு எதிரான திட்டம்; கிராமப்புற மக்களுக்கு எதிரான திட்டம்; ஏழையெளிய மக்களுக்கு எதிரான திட்டம். ஒரே இடத்தில் அதிகாரத்தைக் குவிப்பதும், ஒரே இடத்தில் பொருளாதாரத்தைக் குவிப்பதும் மக்களுக்கு எதிரானது; பாட்டாளிகளுக்கு எதிரானது. ஆகவே, அந்த அடிப்படையில் தனியார்மயமாக்குவதை தயவுகூர்ந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலியிலே நிலக்கரி நிறுவனத்தின் மூலம் இந்த ஆண்டு 950 கோடி ரூபாய் இலாபம் கிடைத்திருப்பதாக அவர்களே அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இலாபம் கிடைக்கிற அந்தத் துறையும் தனியார்மயமாக்கப்படுகிறது; நட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிற போக்குவரத்துத் துறையும் தனியார்மயமாக்கப்படுகிறது. ஆகவே, இந்த தனியார்மயமாக்கலுக்கு வேறு காரணம் அரசியல்தான் என்று நாம் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே, போக்குவரத்துத் துறையைத தனியார்மயமாக்கினால், குறிப்பிட்ட சிலர், குறிப்பிட்ட தனி நபர்கள் மட்டுமே இதில் ஆதாயம் பெற முடியும். கிராமப்புறங்களுக்குப் போக்குவரத்து பாதிக்கப்படும்.

முற்பகல் 11-10

தனியார் துறையை ஊக்குவிப்பது என்பது வேறு; தனியாரிடத்திலேயே நிர்வாகத்தை ஒப்படைப்பது என்பது வேறு. தனியார் துறைகள் இன்றைக்கும் இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஆம்னி பஸ்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. கிராமப்புறங்களில் பல தனியார் பேருந்துகள் இன்றைக்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்தத் தனியார் துறையை ஊக்குவிப்பதிலே அரசு கவனம் செலுத்தினால் அதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தனியாரிடத்திலே ஒப்படைப்பது என்பது, இந்த நாட்டையே தனியாரிடத்திலே ஒப்படைப்பதாக அமைந்துவிடும். அரசையே தனியாரிடத்திலே ஒப்படைப்பதாக அமைந்துவிடும். ஆகவே, எல்லாச் சவால்களையும் எதிர்கொள்கிற ஆற்றல் வாய்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தப் போக்குவரத்துத் துறையில் ஏற்படுகிற நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டும். ஒரு நாடு இயங்குகிறது என்று சொன்னால், அது போக்குவரத்துத் துறையின் இயக்கத்திலிருந்துதான் அது இயங்குவதாக

224482

நம்மால் கணித்திட முடியும். போக்குவரத்து நின்றால், ஒட்டுமொத்த நாடு, தேசமே ஸ்தம்பித்துவிட்டது என்றுதான் நாம் கருதுகிறோம். ஆகவே, போக்குவரத்துத் துறையை தயவுகூர்ந்து தனியாரிடத்திலே ஒப்படைக்க வேண்டாம் என்று மீண்டும் ஒருமுறை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 15 அம்சத் திட்டத்தில் எல்லா விதமான.........

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேதகு ஆளுநர் உரையைச் சரியாகப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாகப் போக்குவரத்துத் துறையை அப்படியே தனியாரிடம் இந்த அரசு ஒப்படைக்கப் போகிறது என்று ஆளுநர் உரையில் எங்கேயும் கூறப்படவில்லை.

"The Government proposes to go in for a phased privatisation of select routes, services and operations in the bus-transport sector" - என்றுதான் ஆளுநர் உரையில் இருக்கிறது. சில ரூட்கள்தான் தனியாரிடம் ஒபபடைக்கப்படும் என்று கூறியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாகத் தனியாரிடம் ஒப்படைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தார். கிராமப்புற மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனியார் துறையை ஊக்குவிக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமல்ல, அதற்காக இந்த நடவடிக்கையை அறிவிக்கவில்லை. அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால், அந்த நஷ்டத்தைச் சரி செய்ய வழியே இல்லாததால்தான், சில வழித்தடங்களைத் தனியாருக்கு ஒப்படைக்கலாம் என்ற முடிவை இந்த அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு முதல்வரவர்களுடைய 15 அம்சத திட்டத்தில் எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உறைவிடப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு என்று ஒட்டுமொத்தத்திலே இந்த தேசத்தின் பாதுகாப்பைக் கவனத்திலே





கொண்டு அவையெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சமூகக் கட்டமைப்பின் யதார்த்தமான சூழலில் பெண்களுக்கும், தலித்துகளுக்கும் பாதுகாப்பற்ற நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அண்மையிலே, அரியலூர் மீன்சுருட்டி அருகே, மீரா என்கிற பள்ளி மாணவி படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தபோது, இரண்டு பேரோ, மூன்று பேரோ கும்பலாக வந்து கடத்திக்கொண்டு போய் அவரை பலாத்காரம் செய்து, படுகொலை செய்திருக்கிறார்கள்.

அதைப்போல பேருந்து ஏறுவதற்காக ஆத்தூர் பேருந்து நிலையத்திலே நின்று கொண்டிருந்த ரீட்டா என்கின்ற பெண், போலீஸ் என்று சொல்லப்படுகிற ஒரு நபரால் கடத்திச் செல்லப்பட்டு, விபச்சாரத் தொழில் நடத்துவோரிடம் விற்பனை செய்யப் பட்டிருக்கிறார். அந்தப் பெண்ணின் மீது காவல் துறையினர் விபச்சார வழக்குகளைப் பதிவு செய்து சிறையிலே தள்ளியிருக்கிறார்கள். அந்தப் பெண் இன்றைக்கு மனப்பிரம்மை பிடித்து, மனநோயாளியாக மாறியிருக்கிறார். இப்படி எத்தனையோ சான்றுகளைச் சொல்ல முடியும். ஆகவே, பெண்களுக்கான பாதுகாப்பு என்பது அரசினுடைய இந்த 15 அம்சத் திட்டத்திலே இணைக்கப்பட வேண்டும். அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பெண்களுக்கு மலிவு விலை மதுவாலும், கள்ளச் சாராயத்தாலும், மிகப்பெரிய அளவிலே சமூகத்தில் பாதிப்பு உருவாகி வருகிறது. கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, விஷ சாராயச் சாவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, மலிவு விலை மதுவை ஒரு தீர்வாக அரசு கருதுவது என்பது அதிர்ச்சியாய் இருக்கிறது. கஞ்சா விற்பனை நகர்ப்புறங்களிலே நடக்கிறது. ஏராளமான போதைப் பொருட்களால் குடும்பங்கள் சீரழிகின்றன. ஆகவே, அந்தக் கஞ்சாவிலிருந்தும், போதைப் பொருட்களிலிருந்தும் குடும்பங்களைப் பாதுகாப்பதற்காக, அரசு மலிவு விலை கஞ்சாவை விற்பனை செய்யுமா? மலிவு விலை போதைப் பொருளை விற்பனை செய்யுமா? ஆகவே, கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், கடுமையான நடவடிக்கைகளின் மூலம்தான் அதைத் தடுக்க வேண்டுமேதவிர, மலிவு விலை மதுவின் மூலம் தடுக்க....

[2002 மார்ச் 13

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மலிவு விலை மதுவை அறிமுகப்படுத்தியதைப் பற்றி எதிர்ப்புத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில், கிராமப்புறங்களில், விலை 100 எம்.எல். மதுவின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் அதைப் பருகாமல், கள்ளத்தனமாக விற்கப்படுகின்ற குறைந்த விலையிலான கள்ள மதுவை வாங்கி அருந்துகிறார்கள் என்ற தகவல் அரசுக்குக் கிடைத்தது. அந்தப் பகுதி மக்கள் கள்ள மதுவால், கலப்படம் செய்கின்ற விஷத் தன்மை வாய்ந்த அந்த மதுவால் பாதிக்கப்பட்டு சாவுச் சம்பவங்கள் மிகுதியாக நடக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் அரசினுடைய வருவாயைக்கூட கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அரசு குறைந்த விலையில் அதே தரத்தோடுதான் மதுவினை அளித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உதாரணமாக, கஞ்சா போன்ற போதைப் பொருளையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கஞ்சா என்பது, சர்வதேச அரங்கில் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பொருள். அதை எங்குமே விற்க அனுமதி கிடையாது என்பதையும் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில், தாய்மார்களின் பாதுகாப்பைக் கவனத்திற்கொண்டு, மலிவு விலை மதுவினையும், கள்ளச் சாராயத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

பெண்கள் சுயநிதிக் குழுக்கள் என்கிற பெயரில், கிராமப்புறங்களிலே குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** பெண்கள் உள்ளாட்சிகளிலே இட ஒதுக்கீடு பெற்று, ஆட்சி அதிகாரத்திற்கு வருவதன்மூலம் கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம் என்ற நிலையில் எளிய மக்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்படுகிறபோதுதான் ஒரு நல்ல அரசு அமைந்திருப்பதாக



2002 மார்ச் 13] [திரு. இரா. திருமாவளவன்]

மக்கள் கருதமுடியும். அந்தவகையிலே, பெண்களுக்கும் இட ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு என்று வழங்கப்பட்டிருக்கிற நிலையில், பெண்கள் ஒன்றியக் குழு உறுப்பினராக, மாவட்டக் குழு உறுப்பினராக, ஒன்றியப் பெருந்தலைவராக, மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவராக, பல்வேறு அதிகாரங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களே தவிர, அவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த முடிவதில்லை; அதிகாரத்தைச் சுவைக்க முடிவதில்லை; அதில் அமர்ந்து ஆட்சி செய்ய முடிவதில்லை. அந்தப் பெண்ணின் கணவரோ அல்லது உறவினர்களோ அங்கே மாற்றாக இருந்து அதை impersonation ஆகக் கருதி, ஆளுமை செய்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட இடங்களிலே நேரடியாகப் பெண்கள் ஆட்சி நாற்காலியில் அமர்ந்து ஆளுமை செய்வதற்கு, ஆட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்களுக்குப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ, அதைப்போல சமூகத்தின் கடைசி நிலையில் கிடக்கிற, கடைசி மனிதர்களாக வாழ்கிற சேரிவாழ் மக்களுடைய பாதுகாப்பு என்பது மிக அவசியமானது. வன்கொடுமைகளிலிருந்தும், சாதிய வன்கொடுமைகளிலிருந்தும், அரச வன்கொடுமைகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொதுத் தொகுதியிலே அவர்கள் போட்டியிட முடியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு, பல இடங்களிலே உள்ளாட்சித் தேர்தலின்போது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அதற்குச் சான்று தருமபுரி மாவட்டம், மருக்காலம்பட்டி என்ற ஊரில் ஒரு தாழ்த்தப்பட்டவன் பொதுத் தொகுதியிலே வேட்புமனுவைத் தாக்கல் செய்தான் என்பதற்காக, ஒட்டுமொத்த கிராமத்தையே சூறையாடிவிட்டார்கள். அதிலே ஒரு கர்ப்பிணிப் பெண், பூவி என்கிற கர்ப்பிணிப் பெண்ணை எட்டி உதைத்ததில், அவர் மரணம் அடைந்துவிட்டார், அந்தக் குழந்தையும் செத்துப்போனது.

அதேபோல், தூத்துக்குடி மாவட்டத்திலே சங்கரலிங்கபுரம் என்ற இடத்தில், பொதுத் தொகுதியில் ஒரு தாழ்த்தப்பட்டவன் வேட்புமனுவைத் தாக்கல் செய்தான் என்பதற்காக, காவல் துறையும் இணைந்து கொண்டு, அந்தக் கிராமத்தையே சூறையாடியது. இந்த இரண்டு இடங்களிலுமே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதுவரையில் இழப்பீடு வழங்கப்படவில்லை. ஆக, ஜனநாயகத்தைச் சுவைக்க

முடியாமல், அதிகாரத்தைச் சுவைக்க முடியாமல், தலித்துகளும், பெண்களும் இங்கே வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனத்திற்கொண்டு, அதற்குப் பாதுகாப்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், பாப்பாப்பட்டி விஷயத்தையும், நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் என்கின்ற அந்த ஊராட்சிகளில், தேர்தலுக்கு வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய முடியவில்லை. அதற்கு அச்சுறுத்தல்தான் காரணம் என்பதை நேற்றே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த அச்சுறுத்தலை விலக்க வேண்டும். தேர்தல் அறிவிப்பு மட்டும் செய்யப்படுகிறது — திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, ஆறு முறை அவ்வாறு அறிவிப்புச் செய்யப்பட்டது. — ஆனால், வேட்புமனுவைத் தாக்கல் செய்ய முடியவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம், அங்கு நிலவுகிற அச்சுறுத்தல்தான். ஆகவே, அந்த அச்சுறுத்தலை விலக்கி, நேரடியாக அங்கே பதவியை ....

*(முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அச்சுறுத்தல், அச்சுறுத்தல் என்று சொல்கின்றார்கள். அரசு தேர்தல் அறிவிப்பை முறையாக வெளியிடுகிறது; அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற, மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் அந்தக் கிராமத்திற்கு சென்று, தேர்தலிலே போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யுங்கள் என்று நல்ல ஆலோசனை வழங்குகிறார்கள். காவல் துறை மூலம் போதுமான அளவுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. இதற்கு மேலும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வேட்புமனு தாக்கல் செய்ய மறுக்கிறார்கள் என்பதை நேற்று நானே விளக்கமாகச் சொல்லியதற்குப் பின்பும், அச்சுறுத்தல், அச்சுறுத்தல் என்று சொன்னால், யார் அச்சுறுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டு, அவருடைய பெயரையோ அல்லது எந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய எந்த அரசியல் கட்சிக்காராக இருந்தாலும் சரி, அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப்பேரவை மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எண்ணமாகும், நோக்கமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் வந்தபோது, ஒரு பொதுத் தொகுதியில்—ஒரு தலித்—(மேசையைத் தட்டும் ஒலி) திரு. தலித் எழில்மலை அவர்களை நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தவள் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை யாருமே செய்திராத ஒரு சாதனையாக, ஒரு நாடாளுமன்றப் பொதுத் தொகுதியில் ஒரு தலித்தை நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தது அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, எங்கள் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் அளிக்கப்படும், உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசுக்கு எதிரான குற்றச்சாட்டாக நான் சொல்ல வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட சி.டி. தண்டபாணி போன்றவர்கள் பொதுத் தொகுதியிலே நின்று வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அந்த விவாதத்தை இங்கே நான் சொல்ல வரவில்லை. இன்றைய அரசு அதற்குப் பொறுப்பு என்று நான் சொல்ல வரவில்லை. உள்ளாட்சி அளவில் மட்டும்தான் இத்தகைய எதிர்ப்பு கடுமையாக இருக்கிறது. நாடாளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ அல்லது குடியரசுத் தலைவர் அளவுக்குக்கூட ஒரு தலித் வர முடிகிறது. ஆனால், உள்ளாட்சி அளவிலே, நாங்கள் குந்திய நாற்காலியில் இவர்கள் வந்து எப்படிக் குந்த முடியும் என்று கேள்வி எழுப்புகிறார்கள். **

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியக் குழுத் தலைவராக ஒரு தலித் இனத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவரை பொதுத் தொகுதியில் நிறுத்தி வெற்றிப் பெறச் செய்து இருக்கிறார்கள் என்பதைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 மார்ச் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், இந்தப் பிரச்சினையோடு முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** முடித்துவிடுகிறேன். உள்ளாட்சி அளவிலே இந்த எதிர்ப்பு கடுமையாகத் தமிழகத்தில் மட்டும் இருக்கிறது; மற்ற இடங்களைவிட மதுரை மாவட்டத்தில் குறிப்பாக இருக்கிறது. பாப்பாப்பட்டியில் என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால், **அவர்கள் குந்திய நாற்காலியில் ** எப்படிக் குந்த முடியும்? நாங்கள் எப்படி அனுமதிப்போம்? முதல் மரியாதையை நாங்கள் எங்களுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வழங்குவோம்; ஆகவே, அப்படி நாங்கள் மற்ற சாதிக்காரர்களுக்கு வழங்கமாட்டோம் என்று அங்கே பேசுகிறார்கள். அதைக் குறிப்பிடுகிறேன். ஆகவே, இது அரசுக்கு எதிரான குற்றச்சாட்டு அல்ல; அல்லது இந்த அவையில் வேறு எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிராகவும் நான் இங்கே எதிர்த்துப் பேச விரும்பவில்லை. இப்படிப்பட்ட நிலை நிலவுகிறது. இதில் கூடுதல் கவனம் செலுத்தி, அமைச்சர்கள் மட்டத்திலே குந்திப் பேசி, யார் தடுக்கிறார்கள் என்பதைக் கவனத்திலே எடுத்துச் செய்ய வேண்டும்; இல்லையென்று சொன்னால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்கள் தொகுதியிலே நாங்கள் தடுத்து நிறுத்திவிட்டோம்; அதுபோல உங்கள் தொகுதியில் நீங்கள் இனிமேல் தனித் தொகுதி வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்; தடுத்து நிறுத்துங்கள் என்று அது பாவுகிறது. பிற தொகுதிகளிலும் அவ்வாறு பரவாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்புதைத்தான் நான் இங்கே பணிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய பேச்சிலே நீங்கள் குறிப்பிட்டது, **உட்கார்ந்த நாற்காலியில் உட்காருவதா என்று பேசிய வாசகங்கள், அது ஒருவிதமான உணர்வைத் தூண்டக்கூடிய வாசகங்கள். ஆகவே, மேல் சாதியினர் உட்கார்ந்த நாற்காலியில் உட்காரலாமா என்று நீங்கள் அதை மாற்றிக்கொள்ளுங்கள். அந்தப் பெயர் குறிப்பிடப்பட வேண்டாம்; அந்தப் பெயர் நீக்கப்படுகிறது. திரு. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதுபோல **ஒரு காலத்திலும் ஊராட்சி மன்றத்தில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மார்ச் 13] [திரு. லா. சந்தானம்]

தலைவராக இருந்தவர் அல்ல. அவர் மிகப் பெரிய தலைவராக இந்த சட்டமன்றத்திலே ஏறக்குறைய ஐந்தாறு முறை அங்கம் வகித்தவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், அது நீக்கப்பட்டுவிட்டது. அதனால் மறுபடியும் அதை மென்ஷன் பண்ண வேண்டாம்.

**திரு. இரா. திருமாவளவன்:** நான் ஒத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி, சமய வேறுபாடுகளை அகற்றி, எல்லோரும் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு நிகழ்ச்சிகள் நிகழ்வது இயற்கைதான். அத்தகைய ஒரு சூழ்நிலை அங்கும் இங்கும் இருப்பதால்தான் இந்த சமூகநீதியை நிலைநாட்ட சட்டங்கள் தேவைப்படுகின்றன. அதனால்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆகவே, இந்த ஜாதி வேறுபாடுகளை அகற்றி ஓர் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வேறுபாடுகளை இன்னும் பெரிதுபடுத்தும் வகையில் இந்த அவையில் பேச வேண்டாம் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதை நானும் வரவேற்கிறேன். அங்கே யார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் சரியாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதால் அதை நான் குறிப்பிட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். ஊராட்சிகளிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், நேற்றே நீங்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினீர்கள். இருக்கிற பிரச்சினை என்ன என்பதை நீங்களே எழுதி முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்தால் உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்பார்கள்.

**திரு. இரா. திருமாவளவன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நொடிக்கு 100 கதை சொல்லக்கூடியவர்கள். இராமாயணக் கதைகளை எல்லாம் விரல் நுனிகளில் வைத்திருப்பவர். இராமாயணத்தில் இராமன் வன வாசத்திற்குப் போன பிறகு, இந்த நாட்டை யார் ஆளுவது என்றபோது, இராமனின் செருப்பை வைத்து இந்த நாட்டை ஆண்டதாகக் கதை சொல்கிறது. இராமனின் செருப்பே இந்த நாட்டை ஆளுகிறபோது அந்தச் செருப்பைத் தைத்தவன் ஒரு ஊரை ஆளக்கூடாதா என்றுதான் நான் ஆதங்கத்தோடு கேள்வி எழுப்ப விரும்புகிறேன். மற்றபடி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே அங்கு போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இராமரின் செருப்புகள் நாட்டை ஆண்டன என்று சொன்னார். அவை தைக்கப்பட்ட செருப்புகள் அல்ல, மரத்தால் செய்யப்பட்ட பாதுகைகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. திருமாவளவன்**: மரத்தால் செய்யப்பட்ட பாதுகைகளாக இருந்தாலும் அதை ஒரு நபர்தான் செய்திருக்க முடியும். ஆகவே, அதைச் செய்தவன்தான் இப்போது தோலால் தைத்துக் கொண்டிருக்கிறான். அன்றைக்கு மரத்தால் செய்தான், இப்போது தோலால் செய்து கொண்டிருக்கிறான். ஆகவே, அப்படிப்பட்ட கடைசி மனிதனுக்கு அதிகாரம் போய்ச் சேர வேண்டும்; ஜனநாயகம் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

இந்த நேரத்தில், பேரவையில், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் குறித்தும், வீட்டுமனைப் பட்டா குறித்தும் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. 1995 ஆம் ஆண்டு அதற்கான விதிகள் வரையறுக்கப்பட்டன. ஆனால் தமிழகத்தில் எந்த இடத்திலுமே இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த காவல் துறை முன்வருவது இல்லை. ஆகவே, அந்தச் சட்டம் எந்த அளவிற்கு நடைமுறையில் உள்ளது; அதில் எவ்வளவு பேர் கைது



செய்யப்பட்டிருக்கிறார்கள்; அந்த வழக்குகளின் நிலைமை என்ன என்பது குறித்தும் தெளிவுபடுத்த வேண்டும்.

வீட்டுமனைப் பட்டா சம்பந்தமான வழக்குகள், 20 ஆண்டுகளுக்கு மேலான வழக்குகள் எல்லாம் உயர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இந்த ஆளுநர் உரையில் விரைவு நீதிமன்றங்கள் என்ற வகையில் தீர்ப்பினை உடனடியாக வழங்குவதற்காக நீதிமன்றங்கள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வீட்டுமனைப் பட்டாவிற்கு என்று நிலங்கள் கையகப்படுத்துகிறபோது அந்த நிலங்கள் குறித்து உடனடியாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்குகள் ஓராண்டு அல்ல, ஈராண்டு அல்ல, 20 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ளன. இந்த மாதிரியான பிரச்சினைகள் நாடு தழுவிய அளவிலே, மிகப் பெரிய அளவிலே சாதிய வன்கொடுமைகளுக்கும் இட்டுச் செல்கிறது; கலவரத்திற்கும் வழிவகுத்து விடுகிறது. ஆகவே, வீட்டுமனைப் பட்டா வழங்குவது சம்பந்தமாகவும், அதுகுறித்த வழக்குகள் சம்பந்தமாகவும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளது சம்பந்தமாகவும் தமிழக அரசு ஓர் வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

நேற்று நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தேன். காவல் துறை என்பது எளிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்குச் செயல்படக்கூடிய ஒரு துறையாக இல்லை. அவர்கள் கொடுக்கிற புகார்களை வழக்குகளாகப் பதிவு செய்வது இல்லை. அதைப் பொருட்படுத்துவதே இல்லை என்பதற்கு ஒரு சான்று, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இடையப்பட்டி பஞ்சாயத்திலே உள்ள குங்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்த சங்கர் என்பவரின் மகன் 7ஆம் வகுப்பு படிக்கிற ஒரு பள்ளி மாணவன் சிவக்குமார் என்பவன், வேட்டையாட வரவில்லை என்பதற்காக ஒரு கும்பலால் நாட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டு, அவனுடைய முகம், கண் முதலிய எல்லா இடங்களிலும் அந்த ரவைக் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. அதில் அவன் இரண்டு கண்களும் பார்வையிழந்து இன்றைக்கு பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறான். இது சம்பந்தமாக 25 நாட்களாக அங்கே வழக்குப் பதிவு செய்யாமல் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினுடைய கவனத்திற்குச் சென்றும்கூட வழக்குப் பதிவு செய்யப்படாமல் கட்டப் பஞ்சாயத்து செய்வதில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அதன்பிறகு கலெக்டருடைய கவனத்திற்குப்

[திரு. இரா. திருமாவளவன்] [2002 மார்ச் 13

போய், மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். அதை வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். ஆனால் சாதாரண மக்கள், சாமானியமான மக்கள் புகார் கொடுப்பதைப் பொருட்படுத்தாத காவல் துறையினர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பள்ளி மாணவனுடைய எதிர்காலம் இருண்டுவிட்டது. அவன் வாழ்க்கையில் ஒளியேற்ற முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவனுடைய மருத்துவச் செலவையும், அவனுடைய எதிர்காலத்திற்கான படிப்புச் செலவையும், ஏற்றுக்கொள்ளும் வகையில், முழுக்க முழுக்க அரசே அவனைத் தத்தெடுத்து, பாதுகாக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்; பணிவான வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

சட்டக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற்று, அவர்கள் கல்வியிலே கவனம் செலுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் திரு. திருமாவளவன் அவர்களைப் பேச அழைத்துவிட்ட காரணத்தால், இந்த அவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் இருக்கக்கூடாது என்று அமர்ந்திருந்தேன்.

அரியலூர், பெரம்பலூர் மாவட்ட இணைப்புக் குறித்து எங்கள் கட்சி சார்பிலும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு தரப்பட்டது. ஆனால், அதிலே மன்ற உறுப்பினர்கள் நிறையப் பேர் விவாதம் செய்வதற்கு இல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைப் படித்துவிட்ட காரணத்தால், எங்களுக்குப் பேச வாய்ப்பில்லை. ஆனாலும், அதிலே கூறப்பட்ட கருத்துக்கள் எங்களுக்கு உடன்பாடல்ல என்பதைத் தெரிவித்து நாங்கள் இப்போது வெளிநடப்புச் செய்கிறோம்.



2002 மார்ச் 13] [திரு. துரைமுருகன்]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்ததற்கு திரு. துரைமுருகனுக்கு நன்றி. திரு பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு. ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதலில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நடைபெற்ற ஒரு தர்ம யுத்தத்தை ஒரு கணம் நான் திரும்ப நினைத்துப் பார்க்கிறேன். தேவ, அசுரர்களுக்கு இடையில் நடந்த யுத்தத்தைவிட இந்த அரசியல் போருக்குத் தனிச் சிறப்பு உண்டு. சுதந்திர இந்திய வரலாற்றில் மட்டுமல்லாமல், உலக அரசியலை ஒப்பிட்டுப் பார்த்தாலும், சாதனைச் சரித்திரத்தைப் படைத்திருக்கின்ற மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகராக வேறொருவர் இத்தனை சோதனைகளை எதிர்கொண்டிருப்பாரா? சூழ்ச்சிகளைச் சந்தித்திருப்பாரா, நம்பிக்கைத் துரோகிகளைப் பார்த்திருப்பாரா என்றால் நிச்சயமாக இருக்காது. வாழ்க்கையில் பலசோதனைகளைச் சந்திப்பவர்கள் மனம் தளர்ந்துவிடாமல் இருக்க அம்மா அவர்களின் போராட்ட வாழ்க்கைப் பாதை ஒரு பாடமாக அமையும்.

கடந்த பொதுத் தேர்தலிலே அவரைத் தேர்தலில் நிற்க விடாமல் சதி செய்தாலும், தமிழக மக்கள் அவர்தான் தமிழக முதல்வராக வரவேண்டும் என்று தீர்மானித்தார்கள். நீதி தேவதையிடம் நீதி பெற்று முறைப்படியாக, தமிழக மக்களின் ஆவலுக்கு ஏற்றவாறு, அரியணையில் அமர்ந்து இருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைய சோதனைகளை எல்லாம் இன்றைய சாதனைகளாக ஆக்கி வருகின்றார்கள்.

புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய இயக்கத்தையும், இலட்சியங்களையும் பாதுகாக்கிற மாபெரும் சக்தியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று விளங்குகின்றார்கள். அவர்கள் அரசியலில் இருக்கின்றவரை தன்

குடும்ப அரசியல் நிறைவேற வாய்ப்பே இல்லை என்பதால், புரட்சித் தலைவி அவர்களை அச்சுறுத்தி, அரசியலிலிருந்து அப்புறப்படுத்த முடியும் என்று தி.மு.க. தலைவர் மனப்பால் குடித்தார். தி.மு.க. அமைச்சர்கள் எல்லாம், இதே சட்டமன்றத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இத்தனை வருட தண்டனை கிடைக்கும் என்று சொல்லக்கூடிய நீதிபதிகளாக மாறி, அவர்கள் கொக்கரித்தார்கள். அப்போது இந்த அவையிலே நான் சொன்னேன். ஆணவச் சிரிப்பு சிரிக்காதீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின்னலை விழுங்கி, மின்சாரத்தைக் கொப்பளிக்கின்ற ஆற்றல் படைத்தவர். அடுத்த மகளிர் தினத்தில் அம்மா அவர்கள் தமிழக முதல்வராக வீற்றிருப்பார் என்று நான் பேசியது இந்த அவைக் குறிப்பிலே பதிவாகியிருக்கிறது. அப்போது அன்றைய முதலமைச்சர் ஓர் ஏளனச் சிரிப்போடு எழுந்து நின்று, 'சுந்தரம் சொல்வது நல்ல ஜோக்' என்று கேலி பேசினார். இன்றைக்கு தர்மம் வென்றிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மகளிர் தினத்தில் தமிழகத்தின் முதல்வராகி இருக்கின்றார்கள். அதர்மம் வீழ்ந்திருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசியல் வாழ்க்கை முடிந்து விட்டது என்று மனப்பால் குடித்தவர்கள், அண்ணா தி.மு.க. அழிந்தது என்று தப்புக் கணக்குப் போட்டார்கள். ஆனால், சாம்பலிலிருந்து உயிர் பெற்றெழுகிற பீனிக்ஸ் பறவைபோல், போர்க்குணம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பகைவர் கூட்டத்தைத் தவிடு பொடியாக்கி, கம்பீரமாக மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கின்றார். வக்கணை பேசியவர்கள், சட்டசபைக்கு வருவதற்குக்கூட திராணி இல்லாமல் தெம்பில்லாமல், பாவம் இன்று உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் நடந்து முடிந்த ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்று சொன்னால் அது மிகையாகாது. இதுவரை எந்த அரசியல் கட்சியும் ஒரு தேர்தலைச் சந்திப்பதற்கு இந்த அளவுக்குப் பயந்ததில்லை என்று சொல்லும் அளவுக்கு தி.மு.க. ஆண்டிப்பட்டியைப் பார்த்து அஞ்சியது. எப்படியாவது தேர்தலைத் தடுத்துவிட வேண்டுமென்று படாதபாடுபட்டார்கள். தேர்தல் கமிஷன் தீர விசாரித்து, தி.மு.க.வின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமே இல்லையென்று கூறியது. தேர்தல் கமிஷன் தேதி அறிவித்த பிறகும் ஜனாதிபதிக்கு மனு போட்டார்கள்.





இங்கிருக்கிற உயர்நீதிமன்றம் அல்ல, டெல்லி தலைமைநீதிமன்றத்திற்கு ஓடினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெற்றி உறுதி என நிச்சயமாக முடிவு செய்த பிறகு அலறினார்கள், பதறினார்கள். அனைத்து சதிகளையும் முறியடித்துவிட்டு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று ஆண்டிப்பட்டி அரசியாக இருக்கின்றார்கள். பிறநாட்டுத் தலைவர்கள் எல்லாம் பாராட்டும் வகையிலே இதயதெய்வம் அம்மா அவர்களை மக்கள் தலைவியாக ஏற்றுக்கொண்டதன் அடையாளம்தான் இன்று ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல் வெற்றி.

*முற்பகல் 11-35*

கடந்த பொதுத் தேர்தலின்போது அண்ணா தி.மு.க.வின் கூட்டணியில் இருந்த கட்சிகள் எல்லாம் தற்போது நடந்த ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் விலகியிருந்த நிலையிலும், தோழமைக் கட்சிகள் இல்லாமல் தனது சொந்த பலத்தை மட்டுமே நம்பி தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்றிருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தன்னம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொய்ப் பிரச்சாரத்தை மக்கள் நம்பவில்லை. குறிப்பாக, முன்னாள் முதல்வர் அந்தத் தொகுதிக்கே போய் தன்னுடைய வீட்டில் நடக்காத சம்பவங்களையெல்லாம் நடந்ததாக ஜோடித்து, காவல் துறையினர்மீது கற்பனையான, கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். ஆனால் மக்கள் அந்த நாடகங்களை நம்பவில்லை. அவரைக் கைது செய்தது சரிதான். வழக்குப் போட்டது நியாயம்தான் என்று ஆண்டிப்பட்டி மக்கள் இன்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

அம்மா அவர்கள், தி.மு.க. ஆட்சியில் செய்ததைப் போல பழி வாங்கும் உணர்வுடன் நாங்கள் நடந்துகொள்ளமாட்டோம், அதேபோல நடைபெற்ற தவறுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அம்மா அவர்களிடம் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வது, அண்ணா நகர் ரமேஷ் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் வழக்கில் . தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல முந்தைய ஆட்சியில் நடைபெற்ற கொப்பரைத் தேங்காய்க் கொள்முதலில் ஊழல், கால்நடைகளுக்கு மருந்து

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மார்ச் 13

வாங்கியதில் ஊழல், இரயில் மூலம் அரிசி கடத்தி ஊழல், சந்தனமரம் எரிந்து போனது போன்றவற்றில் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது பொய் வழக்குப் போட்டு 28 நாட்கள் சிறையில் அடைத்தீர்கள்; சித்திரவதை செய்தீர்கள். தி.மு.க. ஆட்சியில் அம்மா அவர்கள்மீது பொய் வழக்குப் போட்டபோது, இதற்கெல்லாம் பதில் கூறும் காலம் விரைவில் வரும் என்று இந்த மாமன்றத்தில் நான் கூறினேன். உங்களுக்காக மத்திய சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கும் என்று அன்று நான் கூறினேன். அங்கு தொல்காப்பியத்திற்கு உரை எழுதி உங்கள் இலட்சியத்தை அடைவீர்கள் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். நான் கூறியது நடந்துள்ளது. தவறு செய்தவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் 3 நாட்களுக்கு மேல் சிறையில் இருக்க முடியாமல் அழுது, புலம்பி, ஆர்ப்பாட்டம் செய்து, மத்தியிலே இருப்பவர்களிடம் கெஞ்சி, கூத்தாடி விடுதலை பெற்றீர்கள். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பதைப் போல, தொல்காப்பியத்துக்கு உரை எழுதும் வாய்ப்பு விரைவிலே உங்களுக்குக் கிடைத்துவிடும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு சமர்ப்பித்துள்ள கவர்னர் உரையில் ஒன்றுமே இல்லையென்று கூறினார்கள். இந்த கவர்னர் உரையில் அடுக்குமொழி வார்த்தைகள் இல்லை; மக்களை ஏமாற்றும் கவர்ச்சித் திட்டங்கள் இல்லை. இந்த உரை வெறும் வார்த்தைக் குவியல்களாக வறட்சிச் சித்தாந்தத்தால் வற்றிப்போன விளக்கங்களாக இல்லாமல், ஒடிந்து, மெலிந்து, பட்ட மரங்களாகக் காட்சி தருகின்ற தமிழகத்து கிராமங்களை மீண்டும் பச்சை மரங்களாகத் துளிர்த்து, பூத்து, காய்த்துக் குலுங்க வைக்கின்ற வகையிலேதான் இந்த கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்று இந்த கவர்னர் உரையை 'Economic times' என்ற பத்திரிகை பாராட்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எங்கே போய் படித்தீர்கள்? (சிரிப்பு).



2002 மார்ச் 13]

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, நிருபர்களைச் சந்தித்தபோது, பொருளாதார நெருக்கடியிலிருந்து தமிழகத்தை மீட்டு, இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவோம் என்று சூளுரைத்தார்கள். அது வெறும் கோஷம் அல்ல. அதைச் செய்து காட்டுகிற ஆற்றல் அம்மா அவர்களிடம் இருக்கிறது என்பதன் அடையாளமாகத்தான், ஒரு Blue print ஆகத்தான் அமைந்திருக்கிறது இந்த ஆளுநர் உரை. அம்மா அவர்களின் அந்த 15 அம்சத் திட்டத்தினுடைய இலட்சியத்தை திட்டத்தை சீரான முறையிலே செயல்படுத்த, மாவட்டவாரியாக கண்காணிக்க அரசுச் செயலாளர்களையும், அமைச்சர்களையும் நியமனம் செய்திருக்கிறார்கள். அதன்மூலம் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாறும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்கள் யாரும் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

முற்பகல் 11-40

அடுத்தபடியாக விவசாயம். விவசாயத்துக்கும் அதன் துணைத் தொழில்களுக்கும், அதேபோல கிராமப்புற மேம்பாட்டிற்கும் ஆளுநர் உரையில் முன்னுரிமை அளித்திருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனித நேய சிந்தனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்று கூறியிருப்பதை வரவேற்கின்றேன்.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக இன்று தமிழகத்தில் நெசவுத் தொழில் பெருமளவில் நடைபெற்று வருகின்றது. அந்தத் துறையைப் பாதுகாக்கிற வகையில் நெசவு முறைகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், விற்பனையைப் பெருக்கவும், அரசு திட்டமிடும் என்று அறிவித்திருப்பது நெசவாளர்களின் நெஞ்சங்களில் இடம்பெற்று அவர்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல. அவர்களுடைய தாயுள்ளத்துக்கு அடையாளமாக இன்னொரு திட்டத்தையும் இதில் பார்க்கலாம். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சார்ந்த சிறுவயதினருக்காக ஒவ்வொரு

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மார்ச் 13

மாவட்டத்திலும் முழுநேர தொழிற் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதை வரவேற்கின்றேன். இப்பள்ளிகளில் அடிப்படைக் கல்வி மற்றும் வேளாண்மை, தச்சு வேலை, கட்டுமான வேலை போன்ற வாழ்க்கைத் தொழில் முனைப்புப் பயிற்சிகளைக் கற்றுத் தருவதோடு, அவர்களுக்கு தங்கும் வசதியும், உணவு உடை வசதியும் செய்து கொடுக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பது இதுவரை எந்த முதல்வருக்கும் வராத சிந்தனையாகும்.

திருக்கோயில்களில் "அன்னதானத் திட்டம்" அறிவித்திருப்பது பக்தர்களைப் பாவசமடையச் செய்திருக்கிற உன்னதமான திட்டமாகும். அதேபோல சாதி சமய வேறுபாடுகளைக் களைய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு சர்வ மதத்தினரும் வழிபடக்கூடிய ஒரு தியான மண்டபத்தையும், அமைதிப் பூங்காவையும் அமைப்பதற்கு அரசு முடிவெடுத்திருப்பதையும் கட்சி, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து நாட்டு மக்கள் அனைவரும் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக சுகாதாரம். மக்கள் அனைவருக்கும் தரமான மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரப் பணிகள் கிடைக்கச் செய்வது உறுதி செய்யப்படும் என்று கூறியிருப்பதை வரவேற்கின்றேன்.

அடுத்தபடியாக கல்வி. "அனைவருக்கும் இலவச தொடக்கக் கல்வி" என்ற குறிக்கோளை எய்தும்பொருட்டு, 2003 ஆம் ஆண்டுக்குள் பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை 100 சதவிகிதம் கொண்டுவரத் திட்டமிட்டிருப்பதை மனதாரப் பாராட்டுகின்றேன்.

அடுத்து கணினி. இன்று நாம் விஞ்ஞான யுகத்திலே இருக்கிறோம். அணு யுகத்திலே இருக்கிறோம். ஊரகப் பகுதிகளில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தரமான தகவல் தொழில்நுட்பப் பணிகள் கிடைக்கும் என்று கூறியிருப்பதன் மூலம் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாறும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றுக்கூட Online மூலமாக Hall Ticket கொடுக்கும் முறையை அம்மா அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். இது உலகத்திலேயே இன்று தமிழகத்தில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2002 மார்ச் 13] [திரு. பி.ஆர். சுந்தரம்]

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெண்கள் முன்னேற்றத்தில் எப்போதுமே தனி அக்கறை உண்டு. பெண் உரிமைக்காகவும், பெண் விடுதலைக்காகவும் என்றைக்குமே அவர்கள் குரல் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். அந்தக் குரல் இந்த கவர்னர் உரையிலும் ஒலித்துள்ளது. அதன்படி ஐந்தாண்டு கால அளவில் 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர்களாக மாறுவதற்கு இந்த அரசு எல்லா உதவிகளையும் செய்யும் என்ற நம்பிக்கை விதையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதைத்து, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள்.

ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பொருளாதார, சமூக மேம்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்ட புதிய பல்கலைக்கழகம் ஒன்று வேலூரில் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருப்பதன் மூலம் சமூக நீதி காத்த வீராங்கனை என்ற புகழுக்கு அவரை விடப் பொருத்தமான இன்னொருவர் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக, கடந்த பொதுத் தேர்தலின்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாக்கு சேகரித்த போது கிராமப்புறத் தாய்மார்கள் அனைவருமே தங்களுக்குத் துப்புரவு வளாகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டார்கள். நான் ஆட்சிக்கு வந்தால் முதலிலே மகளிருக்குத் துப்புரவு வளாகங்கள் கட்டித் தருவேன் என்று உறுதி கூறினார். சொன்னதைச் செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று சொல்லாததையும் செய்து முடித்திருக்கிறார்கள். அதுதான் சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் மகளிருக்குக் கட்டண துப்பரவு வளாகங்கள் அமைக்கும் புதிய திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள். இதன்மூலம் தமிழகத்தின் தாய்க்குலமே இன்று டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-45*

அடுத்தபடியாகச் சொல்ல வேண்டுமென்றால், தரிசு நில மேம்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதை

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மார்ச் 13

வரவேற்கின்றேன். ஏற்கெனவே 10 மாவட்டங்களில் 1,35,905 ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இன்றைக்கு காலையிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கெங்கு தரிசு நிலங்கள் காணப்படுகின்றனவோ அத்தனை தரிசு நிலங்களையும் மேம்படுத்தும் திட்டம் தயாரிக்கப்படும் என்று கூறியிருப்பதை மனதாரப் பாராட்டுகின்றேன்.

அதேபோல வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல வேளாண் தொழிற் பிரிவு ஒன்றாவது தமிழகத்திலே இருக்கிற 385 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தப்படும் என்று கூறியிருப்பதை விவசாயிகள் இப்போது பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக கொடைக்கானல் பகுதியிலுள்ள அனைத்து மகளிர் கல்லூரிகளும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது மகளிர் ஆண்டில் மகளிருக்குக் கிடைத்த பரிசாகும் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது ஆதிதிராவிட மக்கள் மீது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றைக்கும் தனிப் பற்று உண்டு என்பது இதன் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் முதன் முதலாக ஓசூரில் மலர்கள் ஏற்றுமதி வர்த்தக மண்டலம் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதால் அந்த மாவட்ட மக்களும், அண்டை மாநில மக்களும் இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசைப் பாராட்டி, வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக கால்நடை. எருமை வளர்ப்பிற்காக ரூபாய் 93 கோடி செலவில் புதிய திட்டம் ஒன்றை வகுத்திருப்பது, வேலைவாய்ப்பு பெறாத கால்நடை மருத்துவர்கள் வேலைவாய்ப்பு பெற ஏதுவாக அமைந்திருக்கிறது.

மாநிலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 2,300 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே புதிய திட்டம் தீட்டியிருப்பது மாநில மக்களுடைய மனதைக் குளிர வைக்கின்ற ஒரு திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் கோடை காலத்திலே, வறட்சியிலே குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க மழை நீரைச் சேகரிக்கும் திட்டம்



2002 மார்ச் 13] [திரு. பி.ஆர். சுந்தரம்]

தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக, அங்கே இருக்கிற உள்ளாட்சித் தலைவர்கள், ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளை எல்லாம் வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே கூட்டம் போட்டு மழை நீரைச் சேகரிக்கும் திட்டமானது மிக அற்புதமான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மனதாரப் பாராட்டுகிறேன்.

மீனவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டு அவர்களுக்காக மீனள மேம்பாட்டு இயக்கம் என்ற ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று கூறியிருப்பதை வரவேற்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் நலன் காக்க மத்திய அரசிடம் உரிமைக் குரல் எழுப்புகிற குறிப்புகளையும் ஆளுநர் உரையிலே பார்க்கிறோம். உதாரணமாக உலகமயமாக்கல் கொள்கையின் காரணமாக மத்திய அரசு கையெழுத்திடுகின்ற சில ஒப்பந்தங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை முன்னால் இருந்தவர்கள் எல்லாம் கண்டுகொள்ளவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற பிரச்சினைகளில் மாநில அரசுகளை மத்திய அரசு கலந்து பேச வேண்டும் என்று போர்க்குரல் எழுப்பியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சேவைத் துறைகளில் வரி வசூலிக்கிற அதிகாரத்தை மாநில அரசுக்கு அளிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று வலியுறுத்தி இருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய போர்க் குணத்தினுடைய முத்திரைகள். உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சொன்னவர்கள், மத்தியில் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார்களே தவிர இவற்றை எல்லாம் அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நினைக்கின்றேன்.

இன்றைக்கு, பெருகி வரும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, இந்த அரசு பெரும் பொறுப்புகளை ஏற்க வேண்டியுள்ளது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில்கொண்டு, பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில், சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஏழை எளியோர்களை பாதிக்காத வகையில் மாநில அரசின் நிதிநிலையைச் சீர்திருத்த

நடவடிக்கைகள் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்றுதான் போக்குவரத்துத் துறையில் சில வழித்தடங்களைத் தனியாருக்கு அளிப்பது என்ற முடிவு. அரசு எடுத்திருக்கும் இந்த முடிவு சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்று அம்மா அவர்களைப் பொருளாதார வல்லுநர்களும், நடுநிலையாளர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு என்னவோ அந்தப் போக்குவரத்துத் துறை முழுவதையும் தனியாரிடம் ஒப்படைத்து விட்டதைப் போல எதிர்க்கட்சியினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் இப்போது அழகான, தெளிவான விளக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது போக்குவரத்துத் துறையில் சில வழித்தடங்களை மட்டும் படிப்படியாகத் தனியாருக்கு அளிப்பது என்று அவர்கள் கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

முற்பகல் *11-50*

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியின் சார்பாக ஒரு சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதி அம்மாவிடம் நேரில் கொடுத்துவிடலாமே! (சிரிப்பு) இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி; கடந்த ஐந்து ஆண்டு காலமாக நான் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையிலே, என்னுடைய தொகுதி முழுவதுமே புறக்கணிக்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுக்குகூடத் தெரியும். நான்கூட என்னுடைய தொகுதியிலே உண்ணாவிரதம் இருந்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த உண்ணாவிரதத்தை விலக்கிக்கொள்ளச் சொன்னதற்கிணங்க நான் அதை விலக்கிக்கொண்டேன். ஆகவே, இராசிபுரம் எதிர்க்கட்சி உறுப்பினர் தொகுதி என்ற முறையில் தி.மு.க. அரசு எதையுமே அன்று கண்டுகொள்ளவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இராசியானபுரத்தை மீண்டும்—முகராசியான மகராசி நீங்கள் —இராசிபுரமாக மாற்றித் தருமாறு உங்களை வேண்டி விரும்பி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மகளிர் ஆண்டில் இராசிபுரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இராசிபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில் இராசிபுரம் நகரம் மக்கள் நெரிசல் மிகுந்த பகுதி. போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக —புறவழிச்சாலை ஒன்றை அமைத்துத்தர நிதி உதவி அளிக்குமாறு நான் அன்புடன் அம்மா அவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராசிபுரத்தில் புதிய பஸ் நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், நாமக்கல், பெரியார், கடலூர் போன்ற சில மாவட்டங்களில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கை அதிக அளவில் பயிரிடுகின்றார்கள். கரும்புக்கு டன்னுக்கு விலை நிர்ணயித்ததைப் போல மரவள்ளிக் கிழங்கிற்கும் நியாயமான விலை கிடைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூர்பட்டணம், சீராப்பள்ளி, புதுப்பட்டி, நாமகிரிப் பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தொழிற்சாலை அமைக்கப்படுமென்று அன்றைய முதல்வர் வாய் அளவிலே ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டே இருந்தார். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, குஜராத்தில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களைப் பார்த்துப் பதைபதைத்துப் போய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விடுத்த அறிக்கை அவருடைய துணிச்சலுக்கு மற்றுமோர் உதாரணமாகும். அகில இந்திய அளவில் அவரது அறிக்கை இன்று பாராட்டப்படுகின்றது. இப்படிப்பட்ட உறுதியான எண்ணங்களைக் கொண்ட தலைவர்தான் இன்றைக்கு நாட்டுக்குத் தேவை. மொழிகளைக் கடந்து, பேதங்களைக் கடந்து, மக்கள் நேசிக்கின்ற மாபெரும் தலைவராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று உருப்பெற்று வருகிறார்கள். அவருக்கு நிகரான, மக்கள் செல்வாக்கு பெற்ற, போர்க் குணம் மிக்க இன்னொரு தலைவரை அடையாளம் கண்டுகொள்வது முடியாத காரியம். அகில இந்திய அளவில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றும் திருநாள் வெகுதொலைவில் இல்லையென்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) எனது உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

* **திரு. வி.கே. லட்சுமணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் தேதி டெல்லி பாராளுமன்றம் வன்முறையாளர்களாலே தாக்கப்பட்டதைக் கண்டித்தும், காந்தியடிகள் பிறந்த....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஏதோ கேட்க வேண்டும் என்கிறார். திரு. கருணாகரன் என்ன?

**திரு. கே.சி. கருணாகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத்திலே ஏற்பட்ட தீ வைப்பு சம்பவம் போல மாம்பலம் இரயில்வே பகுதியிலே இதே மாதிரியான ஒரு தீ வைப்பு நடைபெறும் என்று அல்-உம்மா அமைப்பைச் சார்ந்தவர்கள் அச்சுறுத்தல் செய்து இரண்டு தினங்களுக்கு முன்னாலே பேப்பரில் வந்திருக்கிறது. நாளை மறுதினம் நாட்டிலே என்ன நடக்கப்போகிறது என்று அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த அல்-உம்மா மிரட்டலைச் சமாளிக்க அரசு என்ன செய்யப் போகிறது என்பதை அறிவதற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்து, எந்தப் பதிலும் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இந்த நேரத்தில் தேவையில்லை. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் டெல்லி பாராளுமன்றம் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்தும், காந்தியடிகள் பிறந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில், காந்தியடிகள் வாழ்ந்த ஆசிரமமான சபர்மதி ஆசிரமத்தினுடைய பெயரைத் தாங்கியிருக்கின்ற சபர்மதி இரயிலானது கொளுத்தப்பட்டதைக் கண்டித்தும் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்று ஆளுநருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





முற்பகல் 11-55

15 அம்சத் திட்டமானது வரவேற்கத்தக்க திட்டமாக இருக்கிறது என்றாலும் அடுத்து வருகிற 4 ஆண்டுகளில் அதாவது 2006-வது ஆண்டுக்குள் நிறைவேற்றப்படவிருக்கிற திட்டமாக இருக்கிற காரணத்தினாலே அதைப்பற்றிப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே நான் அடுத்த கருத்தைச் சொல்கிறேன்.

ஆளுநர் உரையிலே, ராஜீவ் காந்தியை ஸ்ரீபெரும்புதூரிலே கொன்ற விடுதலைப் புலிகளுக்கு இங்கே சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இடம் கொடுக்கமாட்டோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதேபோல, பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்தவும், தென்னக நதிகளை இணைக்கவும், அச்சன்கோவில்-பம்பா நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றவும், முயற்சிகள் மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால், அதேசமயத்திலே 'தெற்கு வாழ்கிறது வடக்கு தேய்கிறது' என்று சொல்கின்ற அளவுக்கு இந்த வடபுலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லமாட்டேன். அவையெல்லாம் அடுத்து வரவிருக்கிற நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுடன் நான் மேற்சொன்ன திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். விடுபட்டுப் போன திட்டம் இல்லையா என்று சொன்னால், பாண்டியாறு-புன்னம்புழா திட்டம், அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை எல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படாமல் இருப்பது மெத்த வருத்தத்தை அளிக்கிறது. மழை நீர் சேகரிப்பு, சூரிய சக்தியைப் பயன்படுத்துதல் போன்ற திட்டங்களைக் காட்டிலும் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டமானது மிகமிக இன்றியமையாத திட்டம், தொலைநோக்கோடு எண்ணிப்பார்க்கப்பட்ட திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம்—தலைமை)**

இந்தத் திட்டம் நல்லமுறையிலே பரிசீலிக்கப்பட்டு, விரைவிலே நிறைவேற்றப்படுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது ஏதோ ஒரு கனவாகப் போய்விடக்கூடாது என்று மட்டும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வி.கே. லட்சுமணன்] [2002 மார்ச் 13

இந்தத் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைப் போலவே தீபகற்ப நில வாயு இணைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதாவது, Peninsular Gas Grid Scheme. எப்படி நரிமணத்தில் நில வாயு கிடைக்கிறதோ, அதைப்போல மும்பையில் கிடைக்கிற நில வாயுவைக் குழாய்கள் மூலமாகத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து அதன்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது அந்தத் திட்டம். காரணம் புனல் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இனிமேல் வாய்ப்பு மிகக் குறைவு என்ற காரணத்தினால் இந்த Peninsular Gas Grid திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே 2,300 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம் நிறைவேற்றப்படவிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே கோவை மாநகராட்சிக்கு மிகமிகத் தேவையான இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டமானது சேர்க்கப்படவில்லை என்பதை நான் இங்கே மிக வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுகாதாரப் பணியில் தனியார் துறை ஊக்குவிக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். இன்று சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய மருத்துவமனைகளில்கூட, ஏறத்தாழ ஆயிரம் பேருக்கு மேல் புற்று நோயால் பாதிக்கப்பட்டு கதிர்வீச்சு சிகிச்சைக்காகக் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். ஆயிரம் பேருக்கு மேல் மிகப்பெரிய மருத்துவமனைகளிலே காத்திருக்கிறார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட மருத்துவமனைகளுக்கு எல்லாம் நம் அரசு உதவி செய்வதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நான் நம்புகிறேன்.

கிருஷ்ணா நீர் வந்துகொண்டிருக்கிறது. நாங்கள் கூட, கன்னட மொழியில் 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' என்று சொல்லத்தான் விரும்புகிறோம். சென்னைக்கு விரைவிலே, அந்த 12 டி.எம்.சி. தண்ணீராவது கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவாகத் தேர்தல் நடத்தப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி நடத்தப்படுகின்றபோது, உறுப்பினர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2002 மார்ச் 13] [திரு. வி.கே. லட்சுமணன்]

வேளாண் தொழில்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன முக்கியத்துவம்? வேளாண் தொழிலை எப்படி இலாபகரமாக நடத்துவது என்று அதிலே விரிவாகச் சொல்லப்படவில்லை. இப்போது கிராமங்களிலே மேற்கொள்ளப்படுகிற எல்லா தொழில்களிலும் உற்பத்தியைச் செய்ய முடியும். ஆனால், அங்கே விற்க முடியாது. இப்போது தென்னை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய வீழ்ச்சியை நாம் பார்க்க வேண்டும். ஆகவே, பொருட்களை உற்பத்தி செய்வது ஒருபுறம்; அவற்றை விற்பது மற்றொரு புறம். பொருட்களை உற்பத்தி செய்கின்றபோது அதற்குரிய சந்தை எங்கே இருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுதான் பொருட்களை உற்பத்தி செய்ய நாம் முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

தமிழ்நாட்டிலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருப்பவர்களுடைய எண்ணிக்கை 49 இலட்சம். அதாவது Live Register-லே இருப்பவர்களுடைய எண்ணிக்கை 49 இலட்சம். இந்த 49 இலட்சத்திலே, ஏறத்தாழ 5 ஆயிரம் பேர் மருத்துவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இவர்கள் அனைவருக்கும் இப்போது வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் நிறைய இருக்கிறது. மணி அடித்தால் எப்படி?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. ஆர். சுந்தரம்):** பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கோவையிலே கடந்த மூன்று ஆண்டுகளிலே ஏறத்தாழ 200 தங்க நகைத் தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்; குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால் தங்க நகைத் தொழிலை சிறிய அளவிலே செய்பவர்களுக்குப் போட்டியாக இராட்சத இயந்திரங்கள் வந்து அவற்றின் மூலமாக நகைகளை வடிவமைக்கின்றபோது இந்தச் சிறிய நகைத் தொழிலாளர்களால் போட்டி போட முடியவில்லை. அவர்களுக்கு லைசென்ஸ் முறை இரத்து செய்யப்பட்டிருப்பதனாலே இப்போது அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலை மூலமாக நகை செய்கின்றவர்களுக்கு உற்பத்தி வரி

விதிக்கப்பட வேண்டும் என்று இவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தங்க நகை செய்கின்றவர்களுக்கான காம்ப்ளெக்ஸ் என்று சொல்லப்படுகின்ற பெரிய தொழிற்சாலைகளிலே எந்தவிதமான வசதியும் கிடையாது. எந்தவிதமான தொழில் சட்டமும் அவர்களைப் பாதிப்பது இல்லை. சிறார்கள், பெண்கள் நேரம் பார்க்காமல் வேலை செய்ய வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, காம்ப்ளெக்ஸ் என்று சொல்லப் படுகின்ற பெரிய தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு உறுதுணையாக தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கோவை மாவட்டத்திலே தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை உள்ளது. இந்தத் தொழிற்சாலையிலே நேரடியாக நான்காயிரம் பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை நம்பி தமிழ்நாட்டிலேயும் அண்டை மாநிலங்களிலேயும் பத்தாயிரம் பேர் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். இப்போது அந்தத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்பட வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை மூலமாக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 100 கோடி ரூபாய் வருவாய் வந்து கொண்டிருக்கிறது. சேல்ஸ் டேக்ஸ் மூலமாக, கஸ்டம்ஸ் மூலமாக, எக்சைஸ் மூலமாக, இப்படிப் பல்வேறு துறைகளிலே அரசுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இது மூடப்படுகின்ற போது வருமான இழப்பு அரசுக்கு ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். விரைவாக இதற்கு ஒரு தீர்வு காண்பதன் மூலமாக, அந்த நான்காயிரம் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு நம்பிக்கையை அரசு ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல குவாரி தொழிலாளர்கள், இந்த குவாரி தொழிலாளர்களுக்கு ஏழு தாலுகாக்களிலே Hill Area Conservation Authority என்ற அமைப்பிடமிருந்து அனுமதி வாங்கினால்தான் குவாரி தொழிலை மேற்கொள்ள முடியும் என்கின்ற ஒரு நிலைமை இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்த குவாரி தொழிலாளர்கள் இப்போது வேலை இழந்திருக்கிறார்கள். பழைய உரிமங்கள் புதுப்பிக்கப்படவில்லை; புதிய உரிமங்களும் கொடுக்கப்பட வில்லை. இந்த இரண்டு காரணங்களினாலே அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர, சிமெண்ட் விலை ஏற்றத்தினால்





இப்போது கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலேயும் குவாரி தொழிலாளர்களுடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது தமிழ்நாட்டிலே கிராமப்புற மாணவர்களுக்கு தமிழக அரசு அளிக்க வேண்டும் என்று விரும்பிய 25 சதவீதம் ஒதுக்கீட்டை உயர் நீதிமன்றம் இரத்து செய்துவிட்டது. அதற்காக நாம் என்ன செய்யப் போகிறோம்? மிகப் பொறுப்போடு நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-05

தமிழகத்திலே அண்மையிலே ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 10 ஆம் வகுப்பு மாணவர்கள் பிளஸ்-2 வகுப்பு மாணவர்கள் எந்த அளவுக்குத் தேர்ச்சி பெறுகிறார்கள் என்று ஆய்வு செய்ததிலே, ஏறத்தாழ தமிழகம் முழுவதுமாக 10 ஆம் வகுப்பிலே 5 பள்ளிகளிலே ஒரு மாணவன்கூடத் தேறவில்லை. அதேபோல பிளஸ்-2 வகுப்பிலே 9 பள்ளிகளிலே ஒரு மாணவன்கூடத் தேறவில்லை. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கிலப் புலமை குறைந்து கொண்டே வருகிறது. அதை நல்லமுறையிலே சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்கள் இல்லையோ என்ற சந்தேகம்கூட எழுகிறது. இதையும் நாம் சீர்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், சென்னைப் பல்கலைக்கழகம், அஞ்சல் வழிக் கல்வி முறையில் பணத்தைப் பெற்றுக்கொண்டு மாணவர்களுக்குப் பாடங்களை அனுப்புகிறது. ஆனால், கோவையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இதுவரையில் பாடங்களே அனுப்பப்பட வில்லை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தை அணுகி, அந்த மாணவர்களுக்கு பாடங்களை அனுப்ப வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அதிகாரிகள் எத்தகைய மரியாதை அளிக்க வேண்டும், எப்படி வரவேற்க வேண்டும் என்பதற்கான அரசாணை ஒன்று இருக்கிறது. Protocol and Warrant of Precedence. அந்த அரசாணையின் நகலை எல்லாச்

[திரு. வி.கே. லட்சுமணன்] [2002 மார்ச் 13

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி இந்தப் பிரச்சினை எழுகிறது. அரசு அதிகாரிகளுக்கும், எம்.எல்.ஏ.க்களுக்கும் இடையே ஏற்படுகின்ற இந்தப் பிரச்சினை தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால் இந்த அரசாணையை எல்லோருக்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்–தலைமை)**

எங்களுடைய சின்னமான சைக்கிளை 80 ஆயிரம் மாணவிகளுக்கு அளித்ததற்காக நான் இந்த அரசுக்குப் பாராட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், எம்.எல்.ஏ.க்களுடைய சட்டமன்றத் தொகுதி அலுவலகப் பராமரிப்புச் செலவை யார் ஏற்றுக்கொள்வது? இதை யாரும் முடிவு செய்யவே இல்லை. சில சமயங்களிலே எம்.எல்.ஏ.க்கள் கொடுக்கிறார்கள். சில சமயங்களிலே பொதுப்பணித் துறை கொடுக்கிறது. யார்தான் கொடுப்பது என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. அலுவலகத்தினுடைய பராமரிப்புச் செலவை யார் கொடுப்பது என்று அரசு தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். செலவு என்று சொன்னால், குடிநீர்ச் செலவு, மின்சாரச் செலவு, சொத்து வரி கட்டுவது போன்ற பராமரிப்புச் செலவுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்**: முடித்துவிடுகிறேன். எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற கட்டடங்கள், போடப்படுகின்ற சாலைகளை அந்தந்த உள்ளாட்சிகள் பராமரிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் அடுத்த ஆண்டு மீண்டும் எல்.எல்.ஏ. பணத்திலிருந்து அதைச் செய்ய முடியாது. ஒவ்வொரு ஆண்டும் அதைச் செய்ய முடியாது. ஆகையினால் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் செய்யப்படுகின்ற பணிகளை உள்ளாட்சித் துறை பராமரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எண் 150 அரசாணை இன்றைக்கு மிகப் பெரிய தொல்லையைத் தந்துகொண்டிருக்கிறது. இந்த அரசாணையின் காரணமாக Real Estate



2002 மார்ச் 13] [திரு. வி.கே. லட்சுமணன்]

தொழில் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசாணையை அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாநகரைப் பொறுத்தமட்டிலே நிறைய சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. வால்பாறையிலே, டாப்ஸ்லிப் இருக்கிறது. தொண்டாமுத்தூர் பகுதியிலே கோவை குற்றாலம், வைதேகி நீர்வீழ்ச்சி போன்றவை எல்லாம் இருக்கின்றன. இவற்றையெல்லாம் இணைத்து கோவையிலே ஒரு சுற்றுலா மையத்தை மிக விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்தில் நடைபெறுவதுபோல பேரூரிலும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கு நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். சிதம்பரத்திலே ஆண்டுதோறும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அதுபோல பேரூரிலும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

10 ஆண்டுகளுக்கு முன்பு கோவையிலே ஒரு கோளரங்கம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. அதேபோல, அன்னை சந்தியா பெயரிலே ஒரு சிறுவர் உலகம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், 10 ஆண்டுகள் ஆகியும்கூட, அந்தச் சிறுவர் உலகமும் இன்னும் வரவில்லை; கோளரங்கமும் வரவில்லை. கோளரங்கம் என்று சொன்னால் பிளானட்டோரியம். அதுவும் இன்னும் வரவில்லை என்பதை நான் உங்களுக்கு மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

இந்த ஆளுநர் உரையிலே பாதாள சாக்கடை திட்டத்தைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோவை நகரிலே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்**: சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். கோவை நகரிலே பாதாள சாக்கடை திட்டமானது சரியான முறையிலே இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த பாதாள சாக்கடைத்

திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைக்கூட கொஞ்சம் சுதந்திரமாகச் செலவழித்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளுக்குள்ளே வருவாய்த் துறைக்குச் சொந்தமான சில சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளைப் பராமரிக்க மாநகராட்சி முன்வருவதில்லை. ஆகையினாலே ஓர் அரசாணையின் மூலமாக நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிற வருவாய்த் துறைக்குச் சொந்தமான சாலைகளை உடனடியாக மாநகராட்சிகளிடம் ஒப்படைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே தமிழைப்பற்றி ஒன்றும் அதிகமாகச் சொல்லப்படவில்லை, என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கை யினை ஏற்று, மைய அரசோடு பேசி அரேபியத்தைப்போல, பாரசீகத்தைப்போல, வடமொழியைப் போல தமிழையும் செம்மொழி யாக அறிவிக்க வேண்டும். கல்வி உலக மயம் ஆகிக் கொண்டு வருகிற இந்தக் காலகட்டத்தில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டியது அரசினுடைய கடமை என்று கூறி, இங்கே என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடைபெறும் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியிலே அடங்கிய பல்வேறு கிராமங்களிலே சமீபத்தில் சாராயச் சாவுகள் நடந்து 54 பேர்களுக்கு மேல் பலியாகியுள்ளார்கள். அப்படி பலியாகி உயிரிழந்த அந்த நபர்களின் குடும்பங்களுக்கு இந்த அரசு நிவாரணத் தொகை





வழங்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், எங்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களும், கோரிக்கைகளை வைத்தோம். ஆனால், இதுநாள்வரையில் அரசிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் இருக்கின்றது. அதேபோல, இதற்கு முன்பு பல்வேறு மாவட்டங்களில் நடந்த இத்தகைய சாராயச் சாவுகளுக்கெல்லாம், ஆண்டுகொண்டிருந்த அரசாங்கம் அந்தக் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியிருக் கிறது. அதனடிப்படையில், என்னுடைய தொகுதியிலும் ஏற்பட்டிருக் கின்ற மிகக் கொடிய அந்தச் சம்பவத்திற்கு ஆளாகி தாய் தந்தையரை இழந்து அனாதைகளாகத் தவிக்கின்ற அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுகின்ற வகையிலும், அந்தக் குடும்பங்களுக்கு எதிர்காலத்திலே ஒரு வாழ்க்கைச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தருகின்ற வகையிலேயும் இந்த அரசு அந்தக் குடும்பங்களுக்கு, தமிழக அரசு. ஒவ்வொரு குடும்பத்திற்கும், தலா 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேர்புரியாங்குப்பம் என்னும் கிராமத்தில் ஊரில் பெயர்ப் பலகை சம்பந்தமாக எழுந்த பிரச்சினையில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் குண்டு காயம் பட்டு, அரசு பொது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, இப்போது பல்வேறு நிலைகளிலே பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர். அந்தக் குடும்பங்களுக்கும் இந்த அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய சொந்த கிராமமான புலியூர் காட்டுவலசை கிராமத்தைச் சேர்ந்த தனசேகரன் என்பவருடைய மகன் செல்வகுமார் அரசு நடத்திய பொருட்காட்சிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பாமல், மர்மமான முறையிலே இறந்து, இப்போது அந்தக் குடும்பமும் தவித்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சாவுக்கு யார் காரணம், அவர் எப்படி இறந்தார் என்பதையும் கண்டறிந்து அந்தக் குடும்பத்திற்கும் இந்த அரசாங்கம் நிதி வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்திருக்கின்றார்கள்.

அதேபோல, நான் இங்கு சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, என்னுடைய கன்னிப் பேச்சிலே குறிப்பிட்டதைப்போல, முந்திரி விலை வீழ்ச்சியால் என்னுடைய தொகுதி மக்களெல்லாம் இப்போது கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவேகூட, 'வடக்கே சிந்திரி சிரிக்கிறது; இங்கே முந்திரி முறிகிறது' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

[திரு. தி. வேல் முருகன்] [2002 மார்ச் 13

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் கட்சி நடத்தி, ஆட்சியும் செய்கின்ற தாங்கள் நிச்சயம் அந்த முந்திரிக்கு நல்ல ஒரு விலையை நிர்ணயம் செய்து, எதிர்காலத்தில் அந்த முந்திரி விவசாயிகளுடைய சாவுகளையும், தற்கொலைகளையும் தடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த அரசும் அந்த முந்திரிக்கு ஒரு சரியான விலை நிர்ணயம் செய்வதோடு மட்டும் அல்லாமல், இப்பொழுது தேயிலைக்கு எப்படி விலை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்கிறதோ அதேபோன்று ஒரு நிலையை முந்திரித் தொழிலுக்கும் எடுக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாக இங்கே வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-15

தமிழகத்திலே இப்பொழுது மிகப் பெரிய ஒரு பிரச்சினையாக N.L.C. நிறுவனம் தனியார்மயமாக்கப்படும் என்ற அடிப்படையிலே பல்வேறு பிரச்சினைகள் எழுந்து, இன்றைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 5,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்து, பல்வேறு அறப் போராட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசு அந்த N.L.C. நிருவாகம் தொடங்குவதற்கு பல ஏக்கர் நிலங்களை, நம்முடைய மக்களுடைய நிலங்களை, கையகப்படுத்தி, அந்த N.L.C. நிறுவனத்திற்குத் தந்திருக்கிறது. அதன் அடிப்படையில் ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் சம்பாதிக்கக்கூடிய அந்த நிறுவனம் திடீரென்று தனியார் மயமாவதற்கான காரணம் என்ன என்பதில் நம்முடைய தமிழக அரசு கவனம் செலுத்தி, அந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலையைக் கருதி அந்த N.L.C. நிறுவனம் தனியார்மயமாவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கின்ற வகையிலே, மத்திய அரசுக்கு நம்முடைய எதிர்ப்பைக் காட்டுகின்ற வகையில், இந்த மாமன்றத்திலே நம்முடைய முதல்வர் அவர்களும், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து, நிறைவேற்ற வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை இங்கே வைக்கின்றேன்.

எங்களுடைய கட்சி நிறுவனர், தமிழினப் போராளி டாக்டர் அய்யா அவர்கள், டெல்லியிலே இருக்கின்ற மத்திய அரசாங்கத்தில் நாங்கள் கூட்டணி வகிக்கின்ற காரணத்தினால், அனைத்துக் கட்சிகளுடைய எம்.பி.களுக்கும் கடிதம் எழுதி, இந்த விஷயத்திலே



2002 மார்ச் 13] [திரு. தி. வேல் முருகன்]

நாம் ஒருங்கிணைந்து மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்து, N.L.C. நிறுவனம் தனியார்மயமாவதைத் தடுக்க வேண்டுமென்ற முயற்சி எடுத்திருக்கின்றார்கள். அந்த முயற்சிக்கும் உங்களுடைய ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நெல்லைப் பொறுத்தவரையில் தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் போன்ற பல்வேறு மாவட்டங்களிலே அடை மழையின் காரணமாக, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய விவசாய மக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் என்னுடைய தொகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பயிர் செய்யப்பட்டு வந்த உளுந்து இன்றைக்கு முழுவதுமாக அழிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டு, அந்த விவசாயிகள் எல்லாம் தற்கொலை செய்துகொள்கின்ற ஒரு நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு நெல்லுக்கு மட்டும் நிவாரணம் வழங்கியிருக்கிறது. நேற்றுக்கூட நான் பேரவைத் தலைவரிடத்திலே துணைக்கேள்வி எழுப்பிய நேரத்திலே உளுந்துக்கு இடம் இல்லை என்று சொல்லி மறுத்துவிட்டார். அப்பாவி மக்களாயிருக்கின்ற என்னுடைய தொகுதியில் வாழ்கின்ற கிராமத்து மக்கள், அந்த உளுந்தைப் பயிர் செய்து, அது முளைத்து, அழுகி, அவர்களுக்கு உளுந்தின் மூலம் கிடைக்க வேண்டிய பணம், வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற அந்த மக்களுக்கு, கிடைக்கவில்லை. ஆதலால், உளுந்தையும் அரசு இழப்பாகக் கருதி, அந்த உளுந்திற்கும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்; நிவாரண நிதியாக அந்த மக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தது 5,000 ரூபாயாவது வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெல் கொள்முதலை நம்முடைய தமிழக அரசாங்கம் குறிப்பிட்ட காலத்திலே செய்யத் தவறியதன் காரணமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நம்முடைய மக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, நம்முடைய அரசும் அவர்களுக்கு ஓரளவு நிதி வழங்கியிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அந்த நெல் கொள்முதல் விற்பனை நிலையங்களை நம்முடையு தமிழக அரசு உரிய நேரத்திலே தொடங்கி, அந்த நெல் கொள்முதலைச் செய்திருப்பார்களேயானால், நிச்சயம் அந்த அறுவடை செய்த நெல்லை அந்த நெல் கொள்முதல் நிலையங்களிலே நம்முடைய விவசாய மக்கள் கொடுத்து நல்ல பலன் பெற்றிருப்பார்கள். அப்படி நெல் கொள்முதல் நிலையங்கள் உரிய நேரத்தில் திறக்கப்படாத காரணத்தால், இவ்வளவு பேரிழப்பு நமக்கு

ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய விவசாய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனைச் சரிசெய்யும் பொருட்டு தமிழக அரசு நம்முடைய மத்திய அரசாங்கத்திற்கு மீண்டும் எழுதி, அதிகப்படியான நிதிகளை வாங்கித் தந்து, அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம்-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை 4 வழிப்பாதைச் சாலையாக அரசால் அறிவிக்கப்பட்டு, அதற்கு பல்வேறு நிலைகளிலே தடங்கல் ஏற்பட்டு, அந்த வேலை தொடங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. உடனடியாக அந்த வேலையைத் தொடங்க நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி, அந்த வேலைகளை முடிப்பதற்குத் தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்தியாவிலேயே அதிக விபத்துக்கள் ஏற்பட்டு மனித உயிர்கள் பலியாக்கக்கூடிய இடமாக உளுந்தூர்பேட்டையிலிருந்து தாம்பரம் வருகின்ற அந்த வழித்தடம் அமைந்திருக்கிறது என்று ஆய்வுக் குறிப்பு சொல்கின்றது. ஆதலால், நம்முடைய தமிழக அரசு உடனடியாக விரைந்து அந்த 4 வழிப்பாதைச் சாலையை படிப்படியாக நீட்டித்துத் தர அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்று எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதைப்போல பண்ருட்டி தொகுதியிலே 5,000-க்கும் மேற்பட்ட ஆடுகள், திடீரென்று நோய் ஏற்பட்டு இப்போது இறந்து பலியாகியிருக்கின்றன. அந்த ஆடுகளையெல்லாம் கடனுக்கு வாங்கி, மேய்த்து வந்த மக்கள், படிப்படியாக அந்த ஆடுகள் இறந்த காரணத்தினாலே, அவர்களெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கணக்கில்கொண்டு, அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நீண்ட நாள் கோரிக்கையானது ஒன்று; பண்ருட்டி தொகுதியில் பல்வேறு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் செல்லக்கூடிய கும்பகோணம்-சென்னை வழியில் பண்ருட்டி இரயில்வே கேட் உள்ளது. ஆண்டாண்டு காலமாக மேம்பாலம் இல்லாமல் அங்குள்ள மக்கள் அவதியுறுகிறார்கள். இந்த அரசு உடனடியாகத் தனிக் கவனம் செலுத்தி, அங்கே இரயில்வே





மேம்பாலம் அமைக்கிற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பண்ருட்டி எல்லையை நெருங்கிவிட்டால் இரண்டு பக்கமும் முந்திரிக் காடுகள் மட்டும்தான் இருக்கின்றன. பண்ருட்டி தொகுதி என்று சொல்லப்படுகின்ற அளவிலே, அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற எந்த ஒரு அரசு கலைக் கல்லூரியோ அல்லது அரசு பெயரைத் தாங்கியிருக்கிற ஒரு பெரிய நிறுவனமோ இல்லாமல், மிக மிகப் பின்தங்கிய செம்மண் பூமியாக என்னுடைய தொகுதி காட்சியளிக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தருணத்தில் என்னுடைய தொகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு பெண்கள் கலைக் கல்லூரியாவது அல்லது குறைந்தபட்சம் தொழில்நுட்பக் கல்லூரியாவது கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று காலை அரியலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம் இணைப்புச் சம்பந்தமாக அறிக்கை அளிக்கின்றபோது எங்களுக்கெல்லாம் வேதனை அளிக்கின்ற ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, ஒரு சமுதாயத்திற்காக அந்த மாவட்டம் கடந்த ஆட்சியிலே பிரிக்கப்பட்டது என்ற பொருள்படும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நிச்சயமாக ஒரு சமுதாயத்திற்காக அந்த மாவட்டம் பிரிக்கப்படவில்லை. அந்த மாவட்டத்திலே ஆயிரக்கணக்கான பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நோக்கத்திற்காக எனக் கருதாமல், அதை மீண்டும் பரிசீலித்து அதனை ஒன்றுபட்ட மாவட்டமாக அறிவித்திருப்பதை பரிசீலித்து இரண்டாகப் பிரிக்கப்பட்டதை இந்த அரசு நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. எச்.எம். ராஜு, இந்திய தேசிய காங்கிரஸ்.

**திரு. தி. வேல் முருகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடங்கள் பேச அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இன்னும் 5 நிமிடங்கள் பேச அனுமதி கேட்டால், மற்றவர்கள் பேச வேண்டுமே?

[2002 மார்ச் 13

**திரு. தி. வேல் முருகன்**: எல்லோருக்கும் 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நான் மணியைப் பார்த்துக் கொண்டுதான் பேசி வருகிறேன். ஆகவே இன்னும் ஒரு 5 நிமிடம் பேச அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: ஏற்கெனவே நீங்கள் 11 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. தி. வேல் முருகன்**: ஆதலால் அப்படியே பிரிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிப்பு அரசினிடத்தில் இருந்து வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தை எங்களுக்கு வேதனை அளிக்கிறது. அப்படி ஒரு சமூகம் என்று நீங்கள் கருதினால், உங்களுக்கும், உங்கள் ஆட்சிக்கும் நாங்கள் எதிரானவர்களா, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எதிரானவர்களா என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். திரும்பவும் அதைப் பேச வேண்டாம். நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்**: கட்சியின் சார்பாகப் பேசுகிறேன். என்னுடைய கட்சியினுடைய கோரிக்கை அது. ஆதலால் அப்படி ஒரு சமுதாயம் என்றால் அந்தச் சமுதாயம் எந்தக் காலத்திலும் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதைப் புரிந்துகொண்டு, தற்போது இணைக்கப்பட்ட அந்த மாவட்டங்கள் மீண்டும் அப்படியே பிரிக்கப்பட்ட மாவட்டங்களாகத் தொடருவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு, இந்திய தேசிய காங்கிரஸ்.

**திரு. தி. வேல் முருகன்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன.

**திரு. எச்.எம். ராஜு**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. தி. வேல் முருகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....



2002 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் எச்.எம். ராஜு, நீங்கள் பேசுங்கள்.

***திரு. எச்.எம். ராஜு**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய விவாதத்தினை நான் ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக தமிழ்நாட்டை ஆட்சிசெய்ய வந்தமைக்கு என்னுடைய நல்வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

55 வருடங்களுக்குப் பிறகு நீலகிரி மாவட்டத்தினைச் சேர்ந்த ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுத்து சுற்றுலாத் துறை அமைச்சராக மாண்புமிகு மில்லர் அவர்களை நியமித்தமைக்கு மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசின் நல்ல திட்டங்களையெல்லாம் நாங்கள் பாராட்டி, ஆதரவு தருகிறோம் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. நல்ல திட்டமான 15 அம்சங்களை உள்ளடக்கிய திட்டம், குடிநீருக்கு முன்னுரிமை வழங்கும் தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டம், நீர்த்தேக்கங்களைத் தூர்வாரி, ஆழப்படுத்தும் பெருந்திட்டம், அனைவருக்கும் இலவச தொடக்கக் கல்வி, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பள்ளி, தரிசு நில மேம்பாடு அதிகார மன்றம் ஏற்படுத்தல், உலக வர்த்தக மையப் பிரிவு ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைத்தல், தோட்டக் கலை வளர்ச்சி இயக்கம் அமைத்தல், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசுச் செயலாளர்கள் பொறுப்பேற்றல் போன்றவற்றை நாங்கள் எப்போதும் வரவேற்கிறோம்.

பிற்பகல் 12-25

நீலகிரி மாவட்டத்தில் சிறு குறு விவசாயிகள் 65,000 பேர் இருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். பச்சைத் தேயிலை விலைக்காக கடந்த காலத்தில் போராட்டங்கள் நடந்து வந்ததை தாங்கள் நன்கு அறிவீர்கள். விலை நிர்ணயம் கேட்டு, ஒரு கிலோ

[திரு. எச்.எம். ராஜு] [2002 மார்ச் 13

பச்சைத் தேயிலைக்கு 15 ரூபாய் என்ற வகையிலே அங்கு போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இறக்குமதியை இரத்து செய்ய வேண்டும்; கலால் வரியை 150 சதவிகிதத்திற்கு ஏற்ற வேண்டும்; மத்திய சர்க்காரிடம் அவர்கள் ஏற்கெனவே அளித்து வந்த அந்த மானியத்தை மீண்டும் எப்படியாவது வலியுறுத்தி பெற வேண்டும். நீலகிரி மாவட்ட மக்களைக் காப்பாற்றும் வகையில் அந்த மானியத்தை மீண்டும் பெறுவதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தி மக்களுக்கு வாங்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் விவசாயத் தொழிலாளர்களும் அதிக அளவிலே பாதிக்கப்படும் நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய கூலி எல்லாம் ஒரு நாளைக்கு 6 ரூபாய் 85 பைசா வீதம் குறைக்கப்படும் நிலையில் இருக்கிறது. இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பச்சைத் தேயிலை தோட்டத்திற்கு செல்ல முடியாமல் இருக்கிறார்கள். காரணம், சிறு குறு விவசாயிகளே இலையைப் பறிக்கச் சென்றுவிடுவதால், தொழிலாளர்கள் அந்த வேலையை, பணியைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. ஆகவே, இதையெல்லாம் அனுசரித்து மத்திய சர்க்காரிடம் எப்படியாவது கண்டிப்பாக மானியம் பெறுவதற்கு நமது தமிழ்நாடு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப்போல் தொலைக்காட்சிகளிலே ஒரு விளம்பரம் வருகிறது. இரண்டு ரூபாய் டீயில் மிச்சப்படுத்துங்கள் என்று. தயவுசெய்து தமிழ்நாடு அரசு இந்த விளம்பரத்தை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாங்கள் எல்லாம். வெந்துகொண்டு இருக்கும்பொழுது டீயில் இரண்டு ரூபாய் மிச்சப்படுத்துங்கள் என்று சொல்லுவது நியாயமாகத் தெரியவில்லை. மாவட்டத்தினுடைய மக்களை எல்லாம் இது துன்புறுத்துகிறது. வறுமை மாவட்டமாக நாங்கள் இருக்கும்பொழுது, இந்த மாதிரி சொல்வது நல்லதல்ல என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

H.P.F. என்பது தென் கிழக்கு ஆசியாவிலேயே ஒரு மாபெரும் தொழிற்சாலை. அங்கு 4,100 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது சுமார் 1,500 தொழிலாளர்களே பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும் நிலை தமிழ்நாடு அரசுக்கும் இருக்கிறது. மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்து, அந்தக் குடும்பங்களுக்கு எலலாம் நல்வாழ்வளிக்க, தயவுசெய்து அந்தக் குடும்பங்கள் சீரழிந்து



2002 மார்ச் 13] [திரு. எச்.எம். ராஜு]

போகாமல் தடுக்க நல்ல ஒரு திட்டத்தைக் கொடுத்து, அந்த H.P.F. தொழிற்சாலையை மீண்டும் நல்ல முறையில் இயங்க வைக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு உட்பட்டு கூடலூர் பகுதியிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையிலே அவர்கள் இருக்கும் அந்த நிலத்திலிருந்து அவர்களைக் காலி செய்யக் கூடாது. அவர்கள் ஏற்கெனவே பட்டா வழங்கும் நிலை இருப்பதற்கு முன்னாலிருந்து இருந்துகொண்டு இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புககு உட்பட்டு அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எந்தவிதமான துன்புறுத்தல் செய்யாமலும் காலி செய்யாமலும் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேத்தி பேரூராட்சியில் ஆலன் நகர் என்ற ஒரு நகர் இருக்கிறது. அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குரிய நடைபாதையைத் தனியார் துறையைச் சேர்ந்த Laid Law Memorial School and Junior College, Ketti என்பவர்கள் அடைத்து வைத்திருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால் சமாதானம் செய்து அந்த அடைப்பை எடுத்துவிட்டு வந்திருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் நடைபாதையை அடைத்திருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தடத்திற்குச் செல்வதற்கு 50 ரூபாய் என்ற அளவிலே வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார்கள்?

*(உறுப்பினர் ஒரு மஞ்சள் நிற அட்டையை அவையில் காண்பித்தார்)*

எதற்காக எங்கள் விவசாயிகள் பணம் கொடுக்க வேண்டும்? கேத்தி, எல்லநள்ளி, உல்லாடா போன்ற பகுதி மக்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே சென்று விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து, கண்டிப்பாக, அந்தப் பாதையை ஆர்ஜிதம் செய்து, அதனை மக்கள் நடமாடும் பாதையாக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் சட்டமன்ற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆலன் நகருக்கு நடைபாதைக்காகக் கொடுத்த பணத்தைக்கட்ட ஜல்லி, மணலுக்காக அவர்கள்—நூறு ரூபாய்—வாங்கியிருக்கிறார்கள். அதற்குமேலும் அங்கு வண்டியை விடாமல் நிறுத்தியிருக்கிறார்கள். தயவு செய்து உடனடியாக இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எச்.எம். ராஜு] [2002 மார்ச் 13

ஊட்டியிலிருந்து மேட்டுப்பாளையம் வரை செல்லும் பாதை உங்களுக்கு நன்றாகத் தெரியும் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு மாற்றுச் சாலையை அமைக்க 1991-1996-ல் ஆட்சிசெய்த நமது அரசு நல்ல வகையிலே நிதியுதவி செய்து கொடுத்தார்கள். கொலக்கம்பை-உட்லாண்ஸ்-பழனியப்பா-சாம்பர் எஸ்டேட்-முள்ளி-காரமடை வழித்தடம் மூலமாகச் சென்றால் 25 கிலோ மீட்டர் தூரம் குறைவாக இருக்கும். மேலும் நேரத்தின் மகிமையைக் குறித்துப் பார்க்கையில் அதிக அளவிலே நேரம் எடுக்காமல், சற்றுக் குறைவான நேரத்தில் செல்ல வழிவகை செய்யும். மேலும் குன்னூர்-குந்தா தாலுகா மக்கள் அந்தப் புதிய வழியிலே செல்லலாம். இப்பொழுது 1.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு வனத் துறை அனுமதி கொடுத்தால் சாலை பூர்த்தி செய்யப்பட்டு நல்ல சாலையாக இருக்கும். மீதமுள்ள சாலைகள் சரியாக இருப்பதால், அந்தச் சாலையை உபயோகப்படுத்தலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தில், நீங்கள் பெண்களுக்காகக் கழிப்பிடம் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நமது நீலகிரி மாவட்டத்தில் 10 கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு நிதி கொடுத்திருக்கிறேன். அங்கு ஒரு கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.2.80 இலட்சம் ஆகிறது என்று சொல்லி, என்னுடைய தொகுதியிலே 3, 4 கழிப்பிடங்களை அதிகாரிகள் நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். அங்கு அரசு கொடுத்திருக்கும் ரூ.2.00 இலட்சத்திற்குப் பதிலாக 2.80 இலட்சம் ரூபாய் அளவிற்கு செலவு அதிகமாகி விட்டது என்பதற்காக நாங்கள் செய்யாத தவறுக்காக, எதற்காக நாங்கள் 3, 4 கழிப்பிடங்களை விடவேண்டும்? ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்து, மீண்டும் 4, 5 கழிப்பிடங்களைத் தொகுதி மக்களுக்குக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுவும் அல்லாமல், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திற்கு அதிக அளவிலே செலவாகிறது. Revetment என்ற வகையிலே நிலச்சரிவைத் தடுப்பதற்கு சுவர்கள் தேவைப்படுகின்றன. அந்த அளவில் நாங்கள் நிதி கொடுக்கமுடியாத



2002 மார்ச் 13] [திரு. எச்.எம். ராஜு]

நிலையில் இருக்கிறோம். HADP என்ற மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்திற்கு ஒவ்வொரு வருடமும் 25.00 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் மாநில அரசுக்கு தந்து கொண்டிருக்கிறது. அதன்மூலமாகவும் கட்டப்பட்டது. கடந்த ஆட்சியிலே அந்த Revetment கட்டக் கூடாது என்று நிறுத்தி விட்டார்கள். தயவுசெய்து நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்த ஏழையெளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் விருப்பத்தின்படி ஒதுக்கீடு செய்து அதைக் கொடுப்பதோடு அல்லாமல்...... (மணியடிக்கப்பெற்றது) இரண்டு, மூன்று நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். தயவுசெய்து Revetment கட்டிக் கொடுப்பதற்கு HADP மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட மருத்துவமனைக்கு உதவி செய்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மருத்துவர்கள் இன்னும் வந்து சேரவில்லை. தயவுசெய்து மருத்துவர்களை நீங்கள் அனுப்பி வைக்கவேண்டும். கோவையிலிருந்து 12 மருத்துவர்கள் மாதத்திற்கு இரண்டு முறை ஊட்டிக்கு வந்து போக வேண்டுமென்று நீங்கள் ஓர் உத்தரவு அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் நிர்வாகத்தின் மூலமாக அந்த உத்தரவு இன்னும் செயல்படுத்தவில்லை. தயவுசெய்து நீங்கள் மீண்டும் மாவட்ட நிர்வாகத்திற்குச் சொல்லி, அந்த மருத்துவர்களை அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் ஆசிரியர் பணிகளில் காலியிடங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தயவுசெய்து உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலிருந்து ஊட்டி செல்லும் பேருந்துகளுக்காக, இங்கிருந்து நீலகிரி எக்ஸ்பிரஸ்-ல் சென்றாலும், சேரன் எக்ஸ்பிரஸ்-ல் சென்றாலும், அரசு அலுவலர்கள் ஆகட்டும், பொதுமக்கள் ஆகட்டும், சுமார் 15 நிமிடத்திலிருந்து, 30 நிமிடம் வரை க்யூவில் நிற்கவேண்டும். ஒவ்வொரு சமயத்திலும் பேருந்து நிலையத்தில் 300 பேர் க்யூவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து பேருந்தை 15 நிமிடங்களுக்கு ஒரு முறை அனுப்பினால் கண்டிப்பாக மக்கள் நல்ல முறையில் ஊட்டிக்குச் செல்லமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நமது நகராட்சிகளில் condemn செய்த vehicles இருக்கின்றன. எல்லா நகராட்சிகளிலும் உள்ள உபயோகமில்லாத, பழுதடைந்த அந்த வண்டிகளைத் தயவுசெய்து ஏலத்தில் விட்டு, அந்த இடத்தை நல்ல வகையில் வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் அந்த இடம் மக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று சொல்லி, எனக்கு இந்த வாய்ப்பைத் தந்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு மீண்டும் நன்றி கூறி, 'வாழ்க பாரதம், வளர்க பாரதம்' என்று சொல்லி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்:

***திரு. வை. சிவபுண்ணியம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, எங்களது இயக்கத்தின் சார்பிலே வைக்கப்பட்ட நீண்டநாள் கோரிக்கையான தென்னக நதிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆளுநர் உரையில் வைத்திருப்பது வரவேற்கக்கூடியது. அதேபோன்று பல்வேறு தொலைநோக்குப் பார்வையோடுகூடிய திட்டங்கள் செயல்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக விவசாயிகள் பிரச்சினையைப்பற்றிச் சொல்கிறபோது, கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லி, அதற்குரிய செய்தியும் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் இதைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இன்றைக்கு இந்தியா மிகவும் பதற்றமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அயோத்தியிலே இராமனுக்குக் கோவில் கட்டுவோம் என்று விஷ்வ இந்து பரிஷத் எடுக்கிற நடவடிக்கையின் காரணத்தாலே, 100 கோடி மக்களும் என்ன ஆகும், என்ன நிலை ஏற்படும் என்று ஓர் இக்கட்டான நிலையிலே இருக்கிறார்கள். பதற்ற நிலையிலே இந்தியா இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றிச் சொல்கிறபோது, மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சி, வாஜ்பாய் அரசு இரட்டை நிலை எடுத்து வருகிறது. 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற நிலையை வாஜ்பாய் எடுக்கிறார். எப்படியும், எப்பாடு பட்டாலும் தடுப்பேன் என்று வாஜ்பாய் நாடாளுமன்றத்திலே சொல்கிறார்; பத்திரிகையாளர்களிடத்திலே சொல்கிறார். ஆனால், அதே நேரத்திலே அங்கே உத்தரப்பிரதேச மாநிலத்திலே அந்த கரசேவையிலே





ஈடுபடுகிறவர்கள் எல்லாம் உள்ளே சென்று கொண்டிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அந்த கரசேவையிலே ஈடுபடுகிறவர்கள் கிட்டத்தட்ட 40,000 பேர் அயோத்தியிலே இருக்கிறார்கள் என்று அசோக் சிங்கால் கூறுகிறார். இதற்குத் தலைமை தாங்குகிற விஷ்வ இந்து பரிஷத்தினுடைய தலைவர் அசோக் சிங்கால் அவர்களே, அந்த அயோத்தி மாநகரத்திற்குள்ளே சென்று விட்டார். ஆகவே, தினசரி பூசை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதாக ஒரு செய்தி. நாளை மறுநாள் நடைபெறுகிற இந்த நிகழ்ச்சி என்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதுதான் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற பதற்றமான நிலையாக இருக்கிறது. மத நல்லிணக்கத்தைப் பேசிக் கொண்டிருக்கிற இந்த நாட்டில், இப்படி இரட்டை நிலையை பாரதிய ஜனதா கட்சி எடுப்பதன் காரணத்தினாலேயே இந்திய நாடு இப்படிப்பட்ட இக்கட்டான நிலையைச் சந்திக்க வேண்டிய நிலை இருப்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலையிலிருந்து விடுபட்டு இந்தியா பாதுகாக்கப்பட வேண்டும். மத நல்லிணக்கம் பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாகத் தமிழகத்தில் இந்த விளைவுகளின் காரணத்தினாலே எந்தவொரு சிறு சம்பவமும் ஏற்பட்டுவிடாமல் நமது தமிழக அரசு சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் ஆழமான கருத்தாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-35*

குறிப்பாக மத்திய அரசாங்கம் ஒரு பட்ஜெட்டைப் போட்டிருக்கிறது. நமது மாநில அரசு அடுத்த மாதம் பட்ஜெட் போட இருக்கிறது என்று சொன்னால்கூட, மத்திய அரசு ஏழையெளிய மக்களின் மீது மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தியிருக்கிறது. மதுபான வகைகளுக்குரிய வரியைத் தள்ளுபடி செய்த அவர்கள், ஏழையெளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற மண்ணெண்ணெய்க்கு லிட்டருக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசை உயர்த்தியிருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், விவசாயி மேலும் மேலும் நலிந்து கொண்டே இருக்கிறான். இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயியை, எழுந்து நிற்க முடியாத நிலைக்கு ஆளாகியிருக்கிற விவசாயியை, பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு

வழங்கப்பட்ட யூரியா, இன்னும் பல்வேறு உரங்களுக்குரிய மானியங்களிலே 5 சதவிகிதம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு விரோதமாக, ஏழையெளிய மக்களுக்கு விரோதமாக மத்திய அரசு ஆண்டுகொண்டே இருக்கிறது. அப்படிப்பட்ட பாரதிய ஜனதா கட்சியினுடைய பட்ஜெட்டைப் பார்க்கிறபோது, நம்முடைய பட்ஜெட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமா அல்லது இதிலே சொல்லப்பட்டிருக்கிற செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா என்றெல்லாம் இப்போது பேச முடியாது என்று சொன்னால்கூட, விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பார்க்கிறபோது, இதிலே ஒரு செய்தி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 49 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்று செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதிலே ஒரு செய்தி, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிவாரணத் தொகை என்பது போதாது என்று நமது ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. நிலைமையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த நிதியைப் பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இது போதுமான நிதியா, இல்லையா என்பதைச் சொல்லிவிட்டு, எப்போது பெறுவது, எப்போது வழங்குவது என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடமிருந்து உடனடியாக நிதியைப் பெற்று, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதிலே ஒரு செய்தியை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தொடர்ந்து இயற்கை பாதிப்பு. திருவாரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்கள் என்பவை, ஒரு தடவை வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன, மறுதடவை புயலால் பாதிக்கப்படுகின்றன. மறுதடவை வறட்சியால் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, தொடர்ந்து பாதிக்கப்பட்டுகொண்டே அந்த விவசாயிகள் இருக்கிறபோது, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் செய்வதற்குரிய முயற்சி, ஒரு திட்டமிட்ட நடவடிக்கை இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதிலே குறிப்பாக, நேற்றுக்கூட ஒரு செய்தி இங்கே விவாதிக்கப்பட்டது. நெல் கொள்முதலைப் பற்றிச் சொன்னார்கள். நெல் கொள்முதல் செய்யவில்லை என்பதல்ல பிரச்சினை. நெல் கொள்முதல் செய்வதிலே ஏற்பட்ட குளறுபடிதான் பிரச்சினைக்குரியதாக அந்த மாவட்டத்திலே வந்தது. அதை மறுக்கவே முடியாது. இதிலே நான் அரசியல் பேச விரும்பவில்லை; ஆளுங்கட்சியைக் குறை சொல்வதாகவும் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. காரணம், நிர்வாகத்திலே ஏற்பட்டு இருக்கிற அந்தப் பிரச்சினை; வெள்ளம் வருவதற்கு முன்னதாக, நான்கு தினங்களுக்கு முன்னதாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்குமானால், இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் அந்த மாவட்டத்தில் கண்டிப்பாக ஏற்பட்டிருக்காது. அதிலே ஏற்பட்ட குளறுபடியின் காரணத்தினாலேதான் பல நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

***மாண்புமிகு திரு. ப. தனபால்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் தந்து கொண்டே இருக்கிறார்கள். சம்பா பருவத்திலே டிசம்பர் மாதக் கடைசியிலேயும், ஜனவரி மாதம் முதல் வாரத்திற்குள்ளேயும் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியே கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுவிட்டன. தேவையான அளவிற்குக் கொள்முதல் நிலையங்கள் இருந்தன. மழை பிப்ரவரி மாதம் முதல் வாரத்திலேதான் வந்தது. ஆகவே, எதிர்பாராது வந்த மழைக்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது. கொள்முதலுக்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் உரிய காலத்தில் எடுத்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்முதல் நிலையங்களைத் திறந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மொத்தம் திறக்கப்பட்ட கொள்முதல் நிலையங்கள் எத்தனை? டிசம்பர் மாதத்திலே எத்தனை திறக்கப்பட்டன? ஜனவரி மாதம் முதல் வாரத்திலே எத்தனை திறக்கப்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

[2002 மார்ச் 13

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. ப. தனபால்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் 950 கொள்முதல் நிலையங்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஜனவரி 1-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளுடைய தேவையின் அடிப்படையிலே தொடங்கப்பட்டன. 950 கொள்முதல் நிலையங்கள் ஜனவரி 15-ஆம் தேதிக்குள்ளாகவே தொடங்கப்பட்டு, இப்போது 7 இலட்சத்து 50 ஆயிரம் டன் அளவிற்குக் கொள்முதல் நடைபெற்றிருக்கிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் வழக்கமாக, தமிழக அரசு கொள்முதல் நிலையங்களைத் தொடங்குவது டிசம்பர் 15-ஆம் தேதி. ஆனால், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி என்று பெயரளவில் சொல்லப்படுகிறதே தவிர, அப்படித் திறக்கப்பட்ட கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஜனவரி 15-க்குப் பிறகுதான் அதிகமான நிலையங்கள் திறக்கப்பட்டன. அப்படி ஜனவரி 1-ஆம் தேதி திறக்கப்பட்டிருந்தாலும்கூட, அதிகாரிகளுக்கு வாய்மொழி உத்தரவு என்று சொல்லி அந்த நிலையங்களிலே கொள்முதல் செய்யப்படவில்லை. அப்படிச் செய்யப்பட்டதாகச் சொன்னால் எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்று ஆதாரங்களோடு சொல்ல வேண்டும். ஆகவே, பருவ மழை இல்லாமலோ, காலந்தாழ்த்தியோ அல்லது பருவம் இல்லாத நேரத்திலோ பெய்திருந்தாலும்கூட, மிகப்பெரிய அளவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் அரசு அதிகாரிகளுடைய போக்குகளால்தான் என்பதை இங்கே குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்புகிறேன். காரணம், அதிகாரிகள் உரிய நேரத்திலே நிலையங்களைத் தொடங்கி, நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால், உரிய காலத்திலே, விவசாயிகள் அறுவடை செய்திருப்பார்கள்; நெல் எல்லாம் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கும்; விவசாயிகளுக்கு உரிய பணம் சேர்ந்திருக்கும். காலந்தாழ்த்தியதுதான் இந்த இழப்பிற்குக் காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நிச்சயமாகக் காலந்தாழ்த்தி கொள்முதல் நிலையங்களைத் திறக்கவில்லை. உரிய நேரத்திலேதான் திறந்தோம். ஜனவரி 1-ஆம் தேதி திறந்து, ஜனவரி 15-ஆம் தேதி வரை 15 ஆயிரம் டன் அளவிற்குக்கூட கொள்முதல் நடைபெறவில்லை. விவசாயிகள் நெல்லைக் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரவில்லை. அதற்குப் பின்னாலேதான் அறுவடை நடைபெற்றது. அறுவடையாகி நெல் வந்ததற்குப் பின்னாலேதான், இப்பொழுது 7-1/2 இலட்சம் டன் அளவிற்கு நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். ஆகவே சம்பா கொள்முதலைப் பொறுத்தவரையில் உரிய நேரத்திலே, சரியான நேரத்திலே, இந்த அரசாங்கம்—எப்போதும் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் காலகட்டத்திலேதான் இந்த அரசும்—ஜனவரி 1-ஆம் தேதி கொள்முதல் நிலையங்களைத் திறந்திருக்கிறது. அதிலே எந்தவிதமான குறையும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் டிசம்பர் 15-ஆம் தேதி வாக்கில் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதுதான் வழக்கம். ஆனால், இந்த ஆண்டு நடவும் காலதாமதமாக மேற்கொள்ளப்பட்டது; அறுவடையும் காலதாமதமாக இருந்தது. எனவே, ஜனவரி 1-ஆம் தேதி தொடங்கப்பட்டதில், மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதைப்போல, நெல்லே அந்த நிலையங்களுக்கு வரவில்லை என்ற நிலைதான் உண்மையில் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் செய்வதைப் பொறுத்தவரையில் நான் திரும்பவும் சொல்வது என்னவென்றால், இதனைப் பிரச்சினையாகவோ, குற்றச்சாட்டாகவோ தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டாம். இது எங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்பதை மட்டும்தான்

நான் சொல்ல விரும்புகிறேனேயொழிய இது குறைபாடோ, குற்றச்சாட்டோ அல்ல. அதில் இருந்த இடைவெளி என்பது பிரச்சினைக்குரியதாக மாறியது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல மழை பெய்கிற காலம் என்பது அரசாங்கம் ஏற்பாடு செய்வதில்லை; அது இயற்கைச் சீற்றம். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், மழை பெய்கிற அந்தக் காலத்திற்கு முந்தைய வார அளவிலேதான் கொள்முதல் நிலையங்கள் பரவலாக, அதிகமாகத் திறக்கப்பட வேண்டும். இது ஆண்டுதோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்ச்சி. ஒரு வார காலத்திற்கு முன்னதாகத் தேவையான அளவில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்குமானால், மழை பெய்கின்ற காலத்திற்கு முதல் வாரத்திலேயே அறுவடையை விவசாயிகள் முடித்திருப்பார்கள். கொள்முதல் நிலையங்கள் இல்லையென்கின்ற காரணத்தினாலும், கோடை காலம் என்கின்ற காரணத்தினாலேயும், மழை வரும் என்று அறவே எதிர்பாராத சூழ்நிலையிலும், கொஞ்சம் காலம் தாழ்த்தி அறுவடை செய்யலாம் என்றிருந்த காரணத்தினாலேயும், ஒரு 4 நாள் அல்லது ஒரு வாரம் காலதாமதமானது என்பதே மிகப்பெரிய இழப்பாகிவிட்டது. ஆகவே, இந்த நிலையங்கள் வேண்டுமென்பதற்காக மிகப்பெரிய சாலை மறியல் போராட்டங்கள், இயக்கங்கள் தொடர்ந்து எல்லா இயக்கங்களின் சார்பிலும் நடைபெற்றன. இதில் அ.தி.மு.க.கூட விதிவிலக்கல்ல. சாலை மறியலிலே அ.தி.மு.க. விவசாயிகளேகூட பங்கு பெற்றிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தினுடைய நிலை அது. அதனாலே அப்படி ஒரு பிரச்சினை இருந்தது என்பதுதான் உண்மை. வருகிற காலங்களிலே இந்தக் கொள்முதலைப் பொறுத்தவரையில், ஒரு உறுதியான கொள்கையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், அந்த மாவட்டம் கேள்விக்குரியதாக மாறிவிடுகிற ஓர் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது வழங்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொகை குறைவு. அதாவது 2500 ரூபாய் ஹெக்டேருக்கு என்று சொல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கே 6 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஆகவே, இந்தத் தொகை எந்தவகையிலும் காணாது. இந்தத் தொகையைப் பற்றி ஒரு இடத்திலே........

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகின்ற இழப்புகளுக்காக, தேசிய அளவில் தேசிய நிவாரண நிதி என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு குறியீடு வைத்திருக்கிறார்கள். அந்தக் குறியீட்டினுடைய அளவு, ஒரு ஹெக்டேருக்கு 2,500 ரூபாய்





என்று இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட அந்த 5 மாவட்டங்களுக்கும் முதலாவதாக நாம் அறிவித்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மேலாகத் தருவதற்கு மைய அரசிடம் பல்வேறு கடிதங்கள் மூலம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: *உறுப்பினர் 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்**: எனக்கு நேரம் போய்க் கொண்டிருக்கிறது. நேரம் நீங்கள் வாங்கிக் கொடுப்பதாக இருந்தால், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: ஆம். உங்களின் நேரத்தில்தான் கழிக்கப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளோடு சேர்த்துப் பார்க்கிறபோது, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்குரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதேபோல், வருமாண்டு சாகுபடிக்குரிய உற்பத்திக்கான விதை நெல்லே இல்லை; அறவே அற்றுப்போய் விட்டது. ஆகவே, தமிழக அரசு, இதிலே இப்போதே, காலத்தே சிந்தனை செய்து விவசாயிகளுக்குரிய விதை நெல்லை 50 சதவிகித மானிய விலையிலே வருமாண்டு உற்பத்திக்கான வகையில் வழங்குவதற்கான ஒரு தொலைநோக்குத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நில வரியை இரத்து செய்யவேண்டும். அதேபோல், பயிர்க் கடன்களையும், கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதேபோல், குத்தகையைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இவற்றைச் செய்தால்தான் விவசாயி மறு உற்பத்தியை அடுத்த ஆண்டு செய்ய இயலும். அதற்கான வகையிலே திட்டமிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 மார்ச் 13

விவசாயத்தைச் சார்ந்திருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை இப்போது கேள்விக்குரியதாக மாறிவிட்டது. கிட்டத்தட்ட இந்த மாவட்டங்களிலே 12 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான அளவு வருமானம் இல்லாத காரணத்தினால், மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே, அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, வருகிற 3 மாத காலத்திற்காவது, குறைந்தபட்சம் ஏப்ரல், மே, ஜூன் ஆகிய இந்த 3 மாதங்களுக்கு, மீனவர்களுக்கு வழங்குவதுபோல, ஒரு நிவாரணம் வழங்க வேண்டும். குறைந்தபட்சம் மாதம் 500 ரூபாயும், 20 கிலோ அரிசியும் கண்டிப்பாக வழங்க வேண்டும். இல்லையென்றால் அவர்களைப் பாதுகாக்க முடியாது. அந்த அளவுக்கு இக்கட்டான நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயத் தொழிலாளர்களுக்குரிய நிவாரணத்தையும், வெள்ள நிவாரணத்தோடு இணைத்து வழங்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கோலப்பன் குழுவினுடைய சிபாரிசு, அதற்காக அமைக்கப்பட்ட நல வாரியம், இவற்றையும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், போக்குவரத்துத் துறையைத் தனியார்மயமாக ஆக்குவதை அரசு கைவிட வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் அழுத்தமாகச் சொல்கிறேன். அது சேவை மனப்பான்மையோடு செயல்படக்கூடியதாக இருக்காது. தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்யுங்கள். தொழிலாளர்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாவார்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள், மிகப் பெரிய குற்றம் புரிந்தவர்கள்தான் வழக்கிலே இருக்கிறார்கள் என்று. நான் கேள்விப்பட்டதெல்லாம், குற்றம் புரியாதவர்களும் வழக்கில் தண்டிக்கப்படுவதற்குரிய முயற்சியாகி, வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தத் தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு செய்தி. சிவகங்கை மாவட்டத்தில், சின்னக்கடலூர் என்ற இடத்திலே ஒரு பிரச்சினை. இப்போது இந்தச் சட்டசபையிலே இரண்டு தினங்களாக விவாதித்துக் கொண்டே இருக்கிறார்கள். எங்களது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாவட்டச்



2002 மார்ச் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

செயலாளர் திரு. பி.எல். இராமச்சந்திரன் என்பவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி என்பவர், விவசாயச் சங்கத்தினுடைய மாநிலச் செயலாளர் குணசேகரன் என்பவர்கள் எல்லாம் அந்தக் கிராமத்திற்குக் கொடியேற்றச் சென்றார்கள் என்ற காரணத்தினாலேயே அங்கே பல்வேறு பிரச்சினைகள். இரட்டைக் குவளை முறை இருக்கிறது என்பதை எதிர்த்த காரணத்தினாலேயே, அனைத்துக் கட்சிகளினுடைய கொடிகளும் இறக்கப்பட்டிருக்கின்றன. அண்ணா தி.மு.க. கொடி உட்பட அந்தக் கிராமத்திலே இறக்கப்பட்டுவிட்டது. எல்லோரும் சேர்ந்தே கொடிகளை இறக்கி, இரட்டைக் குவளை முறையை நாங்கள் தடுத்து விடுகிறோம், எடுத்து விடுகிறோம் என்று ஒப்புக் கொண்டு, அந்தக் கொடிகளை இறக்கினார்கள். ஆனால் இரட்டைக் குவளை முறையும் தடுக்கப்படவில்லை; கொடிகளும் ஏற்றப்படவில்லை. ஓர் அரசியல் கட்சியினுடைய கொடியே ஏற்ற முடியாது என்ற நிலை, சிவகங்கை மாவட்டத்திலே, சின்னக்கடலூரிலே இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதன்மீது எங்களுடைய இயக்கமாக இருக்கிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய எங்கள் தலைவர்களும், தோழர்களும 115 பேர்கள் அங்கே சென்றபோது, அவர்களைக் காவல் துறை மறித்து, அநியாயமாக வழக்குகளைப் போட்டு, இன்றைக்கு திருச்சி சிறையிலே இருக்கிறார்கள். எந்தக் குற்றமும் செய்யவில்லை. கொடியே ஏற்றக்கூடாதா இந்த ஜனநாயக நாட்டிலே? இப்படி ஒரு விஷயத்தையும் கேட்கக்கூடாதா? (மணியடிக்கப்பெற்றது) இப்படிப்பட்டவர்கள்மீது இப்படி ஒரு வழக்கைப் போட்டு, உள்ளே தள்ளியிருக்கிறார்கள். ஆகவே, வழக்குகளை வாபஸ் பெறவேண்டும்; அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலுவாகச் சொல்லிக் கொண்டு, இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. நம்முடைய மானியக் கோரிக்கைகளிலும் மற்றும் நிதிநிலை அறிக்கையின்மீதும் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி. (குறுக்கீடு) திரு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த புயலால் பாதிக்கப்பட்ட 5 மாவட்டங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்திலுள்ள

நாங்குநேரி பகுதியில், மிக அதிகமான வாழையும், நெல்லும் சேதம் அடைந்திருக்கின்றன. ஆகவே, நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் அந்த நிவாரணம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. டி. மணி. *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12-50*

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. டி. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. மணி, பெயர் மாறிவிட்டதா? நான் மாண்புமிகு உறுப்பினர் டி. மணி பெயரைத் தான் சொன்னேன். ஜி.கே. மணி எழுந்து நிற்கிறீர்களே?

**திரு. ஜி.கே. மணி**: ஒரு நிமிடம் கொடுங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சரி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை சொன்னார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எக்டேருக்கு 2500 ரூபாய் குறியீடு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்த இலக்கு பற்றிச் சொன்னார்கள். அந்த இலக்கு என்பது மிகக் குறைவான தொகை. நெல்லுக்கு அப்படி இலக்கு நிர்ணயித்தாலும்கூட, நெல்லை அறுவடை செய்கிற இடத்திலே உளுந்து பயிரிடப்படுகிறது. உள்ளபடியே விவசாயிகளின் நிலை என்னவென்று சொன்னால், நெல்லில் இலாபமே கிடையாது. இது எல்லா விவசாயிகளுக்கும் தெரியும்; அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும், விவசாயிகளுக்கு இந்த உளுந்தில் வருகிற வருமானம்தான் வருவாய். ஆகவே, அதற்கு என்ன இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். அதேநேரத்தில், இன்னுமொன்று; நெல் கொள்முதல் செய்யப்படுகின்ற நேரத்திலே அங்கே விவசாயிகளிடமிருந்து நெல் வாங்குவது தவிர்க்கப்படுகிறது; ஏதோ சாக்குப்போக்கு காரணங்களைச் சொல்லித் தள்ளிவிட்டு, வேறு மாவட்டங்களிலே, வெளியிலே இருந்து வந்த நெல் எல்லாம்





வியாபாரிகள் மூலமாக அங்கே கொள்முதல் செய்யப்பட்டது. இப்படிப் பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. மூன்று முறை சென்று வந்தோம். இப்படி வரக்கூடிய நேரத்தில், குளறுபடிகள் நிறைய இருந்த காரணத்தாலே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தார்கள்; அப்படிப்பட்ட நிலை தொடரக் கூடாது என்பதற்கு அரசு ஒரு ஸ்திரமான முடிவை அறிவிக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வியாபாரிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்வது கடந்த காலத்தில் இருந்து வந்தது. நேற்று முன்தினம் வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் எந்தவிதத்திலும் வாங்கக் கூடாது என்ற கடுமையான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. டி. மணி.

**திரு. டி. மணி**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை, சில பிரச்சினைகளில் இங்கே வைக்க விரும்புகிறேன். குறிப்பாக இந்த இரண்டு நாள் விவாதத்திலே நம்முடைய போக்குவரத்துத் துறை சம்பந்தமாக, அது தனியார் துறையா, பொதுத் துறையா என்ற ஒரு கேள்வி எழுந்து, பெரிய விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை எல்லாம் தந்து இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில், மினி பேருந்துகள் பற்றிக் குறிப்பிடப்பட்டபோது, நான் தனியாக இருந்துகொண்டு, என்னுடைய கருத்துகளை எங்களுடைய கட்சியின் சார்பிலே இங்கே எடுத்து வைத்தேன். நம்முடைய அரசுப் பேருந்துகளுக்கு எல்லாம் வருமானம் இதனால் குறையும் என்ற கருத்தை அன்றைக்கே சொன்னேன். அதற்கு அப்போது அவர்கள் வேறுவிதமான விளக்கங்களை எல்லாம் தந்தார்கள். தினந்தோறும் நான் காலையிலே எழுந்து தேசிய நெடுஞ்சாலைக்கு வருகின்றபோது அங்கே முதலிலே செல்வது மினி பேருந்து; அதற்கு பின்னால் வருவது அரசுப் பேருந்து; அதற்குப் பின்னால் வருவது மினி பேருந்து; நம்முடைய பேருந்தில் 4 பேர்; ஆனால் அந்த மினி பேருந்தில் 20, 30 பேர் என்று அதிகமானவர்கள்

ஏறிச் செல்கின்றார்கள். இது அரசுக்கு இழப்பை ஏற்படுத்திவிடும் என்று அன்றைக்கே சொன்னேன்; இன்றைக்கும் சொல்கிறேன்.

அதேநேரத்தில் தனியார் துறை வைத்துக்கொண்டிருக்கிற பெரிய பேருந்துகளைப் பொறுத்தவரை எங்களுடைய மாவட்டத்தில் குழித்துறை பகுதியிலிருந்து அவர்கள் 14 பேருந்துகளை வழிநடத்துகிறார்கள். அதெல்லாம் சென்னைக்கு வருகின்றன. சொகுசு பேருந்து என்ற பெயரில் அதற்குத் தனி உரிமம் கிடைக்கின்றது; அதில் ஏராளமான மக்கள் ஏறிச் செல்கின்றார்கள். ஆனால் நம்முடைய அரசுப் பேருந்துகளிலே இன்றைக்கு சொகுசு என்பது மாறி வேறுவிதமாகக் காட்சி அளிப்பதன் காரணமாக அதிலே ஏறுவதற்கு நம்முடைய பயணிகளும் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே. இந்தப் பிரச்சினையில் தனியார் துறையினர் நுழைவதற்கு ஒரு வாய்ப்பு வருகின்றது. எனவே, இதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நஷ்டம் வருகிறது என்று சொன்னால், அதைப் போக்குவதற்கு எந்த வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை அரசு சிந்திக்க வேண்டும்; பரிசீலனை செய்ய வேண்டும்; அதுதான் எங்களுடைய நிலை.

இரண்டாவது, 15 அம்சங்கள் உள்ளடக்கி அருமையான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். எப்படி 5 ஆண்டுகளில், அல்லது 4 ஆண்டுகளில் நாம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர முடியும்? ஏற்கெனவே வருவாய் இல்லை. மத்திய அரசாங்கம் நமக்குத் தர வேண்டிய பணத்தைத் தரவில்லை. அதன் காரணமாக நிதி நெருக்கடி. அது கடந்த ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடியா, அல்லது 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட நெருக்கடியா என்பதெல்லாம் பிரச்சினைக்குரிய விஷயம். எனவே, இந்த நிதி நெருக்கடியைப் போக்குவதற்கு என்ன வழிமுறை என்பது பற்றி 11-வது நிதிக் குழுவின் சார்பிலே ஒரு பிரச்சினையை வைத்து இருக்கிறார்கள். அந்த நிதிக் குழுவின் மூலம் நம்முடைய உள்ளாட்சி மன்றங்களுக்கு இந்த 6 மாத காலத்தில் எந்த அளவிற்கு நிதியை நம்மால் வழங்க முடிந்தது என்பது முக்கியம். அந்த நிதிக் குழுவில் வருகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் இந்த மாமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்பது எங்களுடைய கட்சியின் கோரிக்கையாக நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 50 இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகக்





கணக்கிடப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலே வேலையில்லாதவர்கள், சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என்று இலட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். ஆக, இந்த 50 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நாம் கொடுப்பதன் மூலமாக அரசின் இதர உதவிகளை, அது மின்சாரமானாலும் சரி, தண்ணீரானாலும் சரி, உரமானாலும் சரி, இரண்டு ஆண்டுகளுக்கு நாம் வழங்குவோமேயானால் அதன்மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்கும், 5 இலட்சத்திற்கும் அதிகமான வேலையற்ற விவசாயிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் உரிய நல்ல முறையை நாம் உருவாக்க முடியும். தனியார் என்று சொல்கின்ற பெரிய பெரிய முதலாளிகளுக்கு இது சென்றுவிட்டால் பழைய நிலப்பிரபு சம்பிரதாயம் மீண்டும் தோன்றும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த வகையிலே அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று, பொதுத்துறை நிறுவனங்கள் என்று வருகிறபோது, ஏற்கெனவே நெய்வேலியைப் பற்றி எல்லோரும் கூறிவிட்டார்கள். சுமார் ஆயிரம் கோடி ரூபாய் ஒரு வருடத்திற்கு நிகர இலாபம். ஆனால், இதை ஆரம்பிக்கின்றபோது நஷ்டம் இருக்கிற நிறுவனங்களைத்தான் அரசு ஏற்றுக்கொள்ளும் என்று மைய அரசு சொல்லி, இன்றைக்கு பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியார் துறைக்கு விற்பனை செய்கின்ற சூழ்நிலையில்தான் இந்த மாமன்றமும் இதை ஆலோசிக்கிறது அல்லது சிந்தனை செய்கிறது.

முன்காலத்தில், நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் நாம் வைத்த கோஷம், இந்த நாடு விடுதலை பெற்றால் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்குவோம் என்று ஆசியாவின் ஜோதி, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குரல் கொடுத்தார்கள். அதன் பின்னணியில்தான் 1952-க்குப் பின்னால் வரையிலும், இந்திராகாந்தி அம்மையாருடைய இறுதி காலகட்டம் வரையிலும், இந்த தேசத்திலே பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கி, பாதுகாத்து வந்து இருக்கிறோம். அதற்குப் பின்னால் படிப்படியாக அது தள்ளிவிடப்பட்ட நிலையில் நின்று கொண்டுதான் இன்றைக்கு உலக நிலை என்றெல்லாம் அதற்கு பல்வேறு ஆதாரங்களைச் சொல்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னால் மத்தியிலே இருந்த முன்னாள் நிதி அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் தொலைக்காட்சியிலே, நேர்காணல் ஒன்றிலே சொன்னார்கள்.

உலகத்திலே எந்த நாட்டிலே இன்றைக்கு பொருளாதாரச் சீர்குலைவு இருந்தாலும், சீனா 7 சதமானத்திற்கு அதிகமான வளர்ச்சி அடைந்திருக்கிறது. அவர்களுடைய பாதைதான் என்ன என்பதை நாம் படிக்க வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே நின்று கொண்டு பார்க்கிறபோது நம்முடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு நான் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியிலிருந்து மணலை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். இதிலே வரக்கூடிய அந்நியச் செலாவணி மைய அரசுக்குச் செல்கிறது. எனக்கு முன்னாலே இன்னோர் மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், முந்திரியினுடைய விலை வீழ்ச்சி பற்றி. அந்த விலை வீழ்ச்சி இருக்கிற நேரத்தில் நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து—ஏறத்தாழ 80 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற முந்திரி ஆலையிலிருந்து—தயாரிக்கப்படும் முந்திரிப் பருப்பு முழுமையாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதனுடைய அந்நியச் செலாவணி எவ்வளவு? ஏற்கெனவே 3 ஆண்டுகளுக்கு முன்னால் மணவாளக்குறிச்சியிலே இருக்கின்ற அந்நியச் செலாவணி சம்பந்தமாக நான் ஒரு கேள்வியைக் கொடுத்தேன். இதுவரையிலே அதற்குப் பதில் வரவில்லை. எனவேதான் இந்த அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து மைய அரசுக்கு அந்நியச் செலாவணி மூலமாக எத்தனை கோடி ரூபாயை நாம் இன்று உருவாக்கிக் கொடுக்கிறோம்? இதனுடைய பட்டியலை நம்முடைய அரசு முன் வைக்க வேண்டும். அதன் மூலமாக மத்திய அரசோடு நாம் பேரம் பேசுவதற்கு, நமக்கு வரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒன்றுபட்ட குரலை நாம் கொடுப்பதற்குத் தயாராக வேண்டும். அது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான ஒரு வழியாக நான் கருதுகிறேன்.

அடுத்து, குடிநீரைப் பற்றி; நம்முடைய சென்னை மாநகரைச் சுற்றி உள்ள நீர்த்தேக்கங்கள் தூர்வாரப்படும் என்ற நல்லதொரு கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். அதை மாநிலம் பூராவிலும் விஸ்தரிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே 50 வருடங்களாகக் குளங்கள் தூர்வாரப்படாமல் உள்ளன. அவற்றைச் சரிவர தூர்வாரினால் மழைக் காலங்களிலே வருகின்ற தண்ணீரைப் பூராவும் தேக்கி வைத்துக் கொள்ள முடியும். இதர பெரிய திட்டங்களை உருவாக்குகின்றபோது, அந்தப் பெரிய திட்டங்களின் மூலமாகக் கிராமப்பகுதிகளிலே இருக்கின்ற குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிக்



கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அத்தகைய காரியங்களைச் செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1-00*

அதேபோன்று இன்னொரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மருத்துவத் துறையில். மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டில் ஆயுர்வேதம் சித்தா, யுனானி, அலோபதி இவற்றில் ஆயுர்வேதம் என்பது நம்முடைய நாட்டிலே இருந்தாலும்கூட, மாவட்ட மையத்திலே மருத்துவமனை என்ற அடிப்படையிலே கொண்டுவரப்பட வேண்டும். குறிப்பாக, கேரள மாநிலத்தில் ஆயுர்வேத மருத்துவத்திற்கு மிகச் சிறப்பான இடம் இருக்கிறது. அதனால் ஏராளமான மக்கள் பயன் பெறுகிறார்கள். அந்த வகையிலே செய்வதற்கு இதை நாம் சிந்திக்க வேண்டும்.

அதேபோன்று, அலோபதியைப் பொறுத்தமட்டில் எங்களுடைய மாவட்டத்திலே ஒரு மைய மருத்துவமனை இருக்கிறது; கோட்டாறு அரசு மருத்துவமனை. சமீபத்திலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது, அந்த மருத்துவமனையைப் பார்த்தார்கள். அவர்களுக்கே தெரியும். அந்த விளக்கத்திற்கு நான் வரவில்லை. அங்கே உள்ள . சீர்கேட்டைக் கொஞ்சம் மாற்ற வேண்டும்.

இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து குழித்துறையில் இருக்கக்கூடிய அரசு தலைமை மருத்துவமனையிலே 19 இலட்சம் ரூபாய் செலவிட்டு ஓர் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டு அது அமைக்கப்பட்டது. அந்த வேலை முழுமையாக முடிந்து போய்விட்டது. அதுபோன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கொடுத்துப் பிணவறை ஒன்று புதிதாகக் கட்டிக் கொடுத்தால், அதற்கு மின்சாரம் தருவதற்கு சம்பந்தப்பட்ட துறை தயாராக இல்லை. புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற அவசர சிகிச்சைப் பிரிவிலே, 19 இலட்சம் ரூபாய் செலவழித்து அதைத் திறந்தாலும்கூட, அங்கே ஸ்கேன் வசதி, ஆர்த்தோ டாக்டர் போன்ற வசதிகள் போதுமான அளவில் இல்லை. சமீபத்திலே ஒரு மாதத்திற்குள்ளே அந்த நகரத்திற்குள்ளே 12 பேர் விபத்தில் இறந்திருக்கிறார்கள். விபத்தில் காயமடைந்தவர்களை சிகிச்சை அளிக்க திருவனந்தபுரத்திற்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த வசதியெல்லாம் அருகிலேயே இருந்தால் நமக்கு வசதியாக இருக்கும். எனவே, அந்த வகையிலே இவற்றையெல்லாம் எப்படிச் செய்ய வேண்டும் என்று அரசு சிந்திக்க வேண்டும்.

[திரு. டி. மணி] [2002 மார்ச் 13

கிராமப்புறங்களிலே இருக்கிற ஒரு பிரச்சினை....

***மாண்புமிகு திரு. செ. செம்மலை**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆய்வுக்குப் பிறகு அந்த மருத்துவமனைக்கு உடனடியாக எலும்பு முறிவு மருத்துவ நிபுணர் ஒரே வார காலத்திற்குள் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த இடத்தில் கட்டடம் கட்டப்பட்டும், அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவக் கருவிகள் இல்லை என்பதை நானும் நேரில் சென்றபோது பார்த்தேன். எனவே, இணை இயக்குநர் அதற்கான முன்மொழிவுகளை அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். அந்த முன்மொழிவுகள் அரசுக்குக் கிடைத்தவுடன் நிச்சயமாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரேயொரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம்.

**திரு. டி. மணி:** இரண்டு சப்ஜெக்ட் பற்றிப் பேச வேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு முக்கியமான பிரச்சினை கல்லூரி சம்பந்தமானது. கல்விக்கு முதலிடத்தைத் தருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரியே கிடையாது. அங்கே இருக்கக்கூடிய கல்லூரி பூராவும் தனியாருக்குச் சொந்தமானவை. அவற்றிலே மருந்துபோல ஒரு கல்லூரி இருக்கிறது; அது அறநிலையத் துறைக்குச் சொந்தமான மகளிர் கல்லூரி. அதில் 40 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டடங்கள் அப்படியே இருக்கின்றன. எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. நான் முதல் கூட்டத்திலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு 7 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்பதைக் கொண்டு வந்து, அவர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னேன்; செய்து கொடுத்தார்கள். அதேபோல், ஒரு கட்டடம் கட்டுவதற்கு 16 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், திருநெல்வேலியிலும், கன்னியாகுமரியிலும் இருக்கின்ற இந்தத் துறை அதைக் கவனிப்பதாக இல்லை. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், 1½ கி.மீ. தூரம் மாணவிகள் இழுத்தடிக்கப்படுகிறார்கள். காலையிலே இங்கே படிக்க வர



2002 மார்ச் 13] [திரு. டி. மணி]

வேண்டும் மதியத்திற்கு மேல் 1½ கி.மீ. தாண்டிச் செல்ல வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த நிதியைக் கட்டடம் கட்டுவதற்கு இன்னும் செலவிடாமல் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அந்தச் சீர்கேட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சென்ற முறை நடந்த கூட்டத்தில் கேட்டார்கள். அதற்குப் பிறகு ஆய்வு செய்யப்பட்டு, உடனடியாக அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மேலும் அங்கே ஆசிரியர்கள் போதவில்லை என்று சொன்னார்கள். உயர் நீதிமன்றத்தின் மூலமாகத் தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தால் இதுவரையிலும் நாம் அங்கே ஆசிரியர்களை நியமிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் தடையாணை தளர்த்தப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் அங்கிருக்கிற இந்து சமய அறநிலையத் துறையின் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கல்லூரியில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கும். அங்கே கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டுவதற்குமான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் அரசு எடுக்கும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

**திரு. டி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து விலைவாசி. விலைவாசியால் ரொம்ப சங்கடப்படும் மாவட்டம்; தேங்காய் விலையினுடைய வீழ்ச்சி; இந்தியாவிலேயே நாம் தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். ஆனால் விலை வீழ்ச்சி; ஏன், என்ன காரணம் என்று சொன்னால், இலங்கையிலிருந்து கொப்பரையை இறக்குகிறார்கள். மத்திய அரசினுடைய கொள்கையின் காரணமாக பிலிப்பைன்சிலிருந்தும் இறக்குகிறார்கள். இந்த நிலையில் நம்முடைய தேங்காய்க்கு என்ன விலை கிடைக்கும்? இதுதான் பிரச்சினை.

இன்னொன்று, இரப்பர் விலை வீழ்ச்சி. இந்தியாவில் தேவையான இரப்பரை நாம் உருவாக்கிவிட்டோம். ஏற்றுமதி செய்யக்கூடிய

[திரு. டி. மணி] [2002 மார்ச் 13

அளவிற்கு நாம் வளர்ந்திருக்கின்றோம். இருந்தும் ஏன் இறக்குமதி செய்கிறார்கள்? அதனாலே இரப்பரால் உற்பத்தி செய்யக்கூடிய டயரின் விலை குறைந்துவிட்டதா? ட்யூப்பின் விலை குறைந்துவிட்டதா? இல்லையே, அதைக் கட்டுப்படுத்தும் வகையில் மத்திய அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையில் மாற்றம் செய்து அந்த இறக்குமதிப் பொருளுக்கு அதிகப்படியான சுங்க வரியைச் சுமத்தினால் இந்தச் சீர்கேடான நிலை வராது.

அதுபோன்றுதான் பச்சைத் தேயிலை. இந்தியாவிலேயே நாம் உற்பத்தி செய்கின்ற தேயிலை நமக்குப் போதுமானது. ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு நாம் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். இருந்தும் இறக்குமதி செய்வதன் காரணமாக, இந்தியாவிலேயே உற்பத்தி செய்கின்ற தேயிலையினுடைய விலை வீழ்ச்சியடைந்து விவசாயிகள் தற்கொலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே இந்த அரசு, மத்திய அரசோடு பேசினால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற அந்தப் பொருட்களுக்கு அதிகப்படியான சுங்க வரியை விதிக்க முடியும். அப்படி விதிப்பதன் காரணமாகத்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு சீரான ஒரு நிலையை நாம் உருவாக்கிக்கொள்ள முடியும்.

அதைப்போன்றுதான் நல்ல மிளகு; அந்த மாவட்டத்தில் விளையக்கூடியது நல்ல மிளகு; இன்றைக்கு 100 ரூபாய், 150 ரூபாய் ஒரு கிலோ. அதேபோன்று மலையிலே உற்பத்தியாகின்ற ஜாதிக்காய் விலை வீழ்ச்சி; விவசாயிகளுக்கு வருமானத்தைத் தேடித் தருகின்ற எந்தப் பொருளை எடுத்தாலும் அந்தப் பொருட்களெல்லாம் விலை வீழ்ச்சி. அதேநேரத்திலே அவற்றுக்குப் பயன்படுகிற உரத்திற்கு மத்திய அரசாங்கம் சப்சிடியை எடுத்துவிட்டார்கள். அதன் விளைவு என்ன? அதிகப்படியான விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) எனவேதான் இந்தச் சூழலில் இருந்து கொண்டு நான் கருத்தைச் சொல்கிறபோது இந்த 15 அம்சத் திட்டத்தை எந்த அளவிற்கு வெற்றி பெறச் செய்ய முடியும்? காரணம், அரசினுடைய கையில் போதுமான நிதியில்லை; நிதியாதாரத்தை உருவாக்கிக்கொள்வதற்கு நமக்கு வேறு வழியும் இல்லை. ஆகவேதான் மத்திய அரசாங்கத்தின் கொள்கையில் சில மாற்றங்களை வைத்துக்கொண்டு, நமக்குத் தேவையான, வர வேண்டிய நிதியை இந்த மாநிலத்திற்குத் தரவேண்டிய நிதியை நாம் பெற்றுக் கொள்வதிலே ஒன்றாக இருந்து, குரல்கொடுத்து, தமிழ்நாட்டைப்



2002 மார்ச் 13] [திரு. டி. மணி]

பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்த அரசு கொண்டு வந்திருக்கிற திட்டங்களில் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்ட வேண்டும், வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட என்னை வேட்பாளராக நிறுத்தி, எனக்காகப் பிரச்சாரமும் செய்து, வெற்றி பெறச் செய்து, இன்று சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். சூழ்ச்சிகளை வென்று, தர்மத்தை நிலைநிறுத்திய தர்மத்தின் தலைவி அவர்கள் இன்று ஆண்டிப்பட்டி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகத்தின் முதலமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் தமிழக முதலமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர், சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், இன்று அவர் ஏற்ற பதவிப் பிரமாணத்தை மீறியிருக்கிறார். நான் அரசியல் சட்டம் 188-வது விதியை வாசித்துக் காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பதவி ஏற்கும்போது பதவிப் பிரமாணம் செய்துகொள்கிறார்.

பிற்பகல் 1-10

அரசியல் சட்டம் விதி 188-ன்படி ஷெட்யூல் 3-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

"I,......having been elected a member of the Legislative Assembly do swear in the name of God—

ஆண்டவன் மீது சத்தியத்தைக் கூறுகிறேன்.—

that I will bear true faith and allegiance to the Constitution of India as by law established, that I will uphold the sovereignty and integrity of India—

[திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்] [2002 மார்ச் 13

முக்கியமானது—

and that I will faithfully discharge the duty upon which I am about to enter".

ஒரு சட்டமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர் ஆற்ற வேண்டிய பணி சட்டமன்றத்தில் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்பது. இன்று சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் முதல்வர் அவர்கள் பதவிப் பிரமாணத்தை ஏற்றிருக்கிறார்கள். ஆனால் இன்று சபைக்கு வர மறுக்கிறார். சபைக்கு வர மறுக்கும் அவர் ஆண்டவன்மீது சத்தியத்தை மேற்கொண்டு இன்று பதவிப் பிரமாணத்தை ஏற்றிருக்கின்றார் ஆகவே (குறுக்கீடு) இன்று நம்முடைய புரட்சித் தலைவி முதலமைச்சராகப் பணியாற்றுகின்ற அந்த முறையையும், (குறுக்கீடுகள்) சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் முன்னாள் முதல்வர் அவர்கள் பணியாற்றுகின்ற அந்த...(குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** POINT OF ORDER.

**திரு. பரிதி இளம்வழுதி:** POINT OF ORDER.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன், POINT OF ORDER கேட்கிறார்கள். என்ன POINT OF ORDER?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போகின்ற போக்கிலே புழுதி வாரித் தூற்றுகிறார். இதுவரை நின்ற அனைத்துத் தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர் தமிழ்நாட்டில் எங்களுடைய தலைவர் கலைஞர்தான். அத்தனை முறையும் அவர் பதவிப் பிரமாணம் எடுக்கின்றபோது 'உளமார உறுதி கூறுகிறேன்' என்று சொல்லித்தான் எடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, அவை நடவடிக்கைகளில் வந்து கல்ந்துகொள்ளவில்லை என்று சொல்கிறார். 1989-லே இப்போது இருக்கின்ற முதலமைச்சர், அவரும் வந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** POINT OF ORDER என்ன என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.



2002 மார்ச் 13]

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அரசியல் சட்டத்தில் ஒருவர் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது எவ்வாறு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மூன்றாவது ஷெட்யூலில் உள்ளது. முன்னாள் முதல்வர் அவர்கள் அப்படிப் பதவிப் பிரமாணத்தை ஏற்றிருந்தால் கண்டிப்பாக அவர் சட்டமன்ற உறுப்பினராகவே தொடர முடியாது என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடவுள் ஆணையாகவும் சொல்லலாம். உளமார என்றும் சொல்லலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். உங்கள் துணைத் தலைவர் பேசட்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்குப் பேரவையினுடைய முன்னவராக இருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்தான் தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையில் நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 11ஆம், 12ஆம் வகுப்பு படிக்கும் ஆதி திராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திருவள்ளுவர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகம்; அனைத்து பெண்கள் கல்லூரிகளையும் அன்னை தெரசா பல்கலைக்கழகத்துடன் இணைத்திருக்கிறார்கள். நம்முடைய கவர்னர் உரையில் புரட்சித் தலைவி அரசு ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில், விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் வகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு ரூபாய் 49 கோடியை ஒதுக்கியிருக்கின்றது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். விருந்தினர் மாளிகையில் அறை இல்லை என்பதற்காக நீதிமன்றங்களுக்குச் செல்லும் கூட்டம் அல்ல இது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பது குறித்து உச்ச நீதிமன்றத்துக்குச் செல்வது பற்றி கவர்னர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்] [2002 மார்ச் 13

*பிற்பகல் 1-15*

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபோது ஒரு பதவிப் பிரமாணத்தைக் குறித்துத்தான் தெரிவித்தேன். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரட்டை வேடம்; ஆண்டிப்பட்டித் தொகுதியில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்கிறார்கள். வேட்பு மனு தாக்கல் செய்து அந்தத் தேர்தலில் கலந்து கொள்கிற அதேநேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தைக்கூட அணுகாமல், டெல்லி உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணையைப் பெற நினைக்கிறார்கள். ஜனநாயகத்தில் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டியவர்கள் தேர்தலில் பங்கேற்றவர்கள், இரட்டை வேடம் போட்டு, டெல்லி உயர் நீதிமன்றத்தில், புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக ஆகக் கூடாது என்பதற்காகத் தடையாணையைப் பெறச் செல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை வேடம் போடுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கவர்னர் உரையில் 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் வருவாய் இழப்பு நிகழ்வுகளுக்குக் காரணம்; குறிப்பாக சேலம் மாவட்டத்தில், ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதில் மாபெரும் முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன. ஏற்கெனவே நம்முடைய சபை உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போலவே கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் ஊழல்; கால்நடைத் துறையில் ஊழல்; மீனவர்களுக்கு வீடு கட்டியதிலும் ஊழல்; இந்த விரைவு நீதிமன்றங்கள் விசேஷ விரைவு நீதிமன்றங்களாக அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விசேஷ விரைவு நீதிமன்றங்கள் கடந்த கால வருவாய் இழப்பு நிகழ்வுகளை விசாரித்து, குற்றம் புரிந்தவர்களுக்கு, கடந்த கால ஆட்சியாளர்களுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ள மகளிருக்கு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவது போன்ற நல்ல திட்டங்கள் எல்லா மாநிலங்களிலும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

விவசாயிகள் பயன்பெறும் வகையில், சித்த மருத்துவர்கள் பயன்பெறும் வகையில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. உடல் ஊனமுற்றோருக்கு, மூளை வளர்ச்சி



2002 மார்ச் 13] [திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்]

குன்றியவருக்கும், முதியோருக்கும் நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இலாப நோக்கு இல்லாமல் திட்டத்தை எடுத்து நடத்துவோருக்கு அரசு இலவசமாக நிலம் தரும் என்ற திட்டம் இங்கே அறிவித்திருப்பது எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தெய்வத்தின் குழந்தை என்பதைத்தான் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

இங்கே கவர்னர் உரையில், மகளிருக்கு 33 சதவீதம் துறைகளில் இடஒதுக்கீடு கிடைக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மகளிருக்கு அதிகமான சலுகைகள், அதாவது 5 இலட்சம் மகளிருக்கு அவர்கள் தொழில்செய்யும் வகையில் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ள திட்டம் மகளிர் சுயதொழில் செய்வதை ஊக்குவிக்கும் திட்டமாக இருக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நான் என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை இரண்டு நிமிடங்களில் கூறி விடைபெறுகிறேன். சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள விவசாயப் பெருமக்கள் மணிமுத்தாறு தண்ணீரை நம்பி இருக்கிறார்கள். விவசாயத்திற்கு மட்டும் அல்ல; குடிதண்ணீருக்கும்கூட. ஆகவே, இப்போது வறட்சியாக இருக்கும் குளங்களில் குடிதண்ணீருக்காக மணிமுத்தாறு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்று ஏற்கெனவே நான் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். மக்கள் அங்கேயிருந்து என்னிடம் தொடர்பு கொண்டு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

மற்றொன்று, சேரன்மகாதேவி தொகுதியில் ஒரு காவல் நிலையம் அமைப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கும் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, நிலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் நீதிமன்றமும், காவல் நிலையமும் அமைத்துத்தர நடப்பு நிதியாண்டில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

சேரன்மகாதேவி தொகுதியில் கன்னடியன் கால்வாயை. மக்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு பயன்பெறும் கால்வாயை, தூர் வாருவதற்காக ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. பச்சையாறு

திட்டத்தில் 13 குளங்களைச் சேர்க்க வேண்டுமென்ற அந்தப் பரிந்துரையும் அனுப்பப்பட்டிருக்கிறது.

இங்கே பல இடங்களில் குடிநீருக்கான நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். குறிப்பாக, கோபாலசமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய டவுன் பஞ்சாயத்துகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் மற்றும் I.C.U. வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவில் முதன்மையான மாநிலமாக மாற்றுவேன் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். கண்டிப்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை இந்தியாவில் முதன்மையான மாநிலமாக மாற்றி, இந்தியாவின் முதன்மையான பெண்மணியாகவும் அவர்கள் விளங்குவார்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் நம்முடைய ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றும்போது, எந்தச் சட்டத்திலும் நீங்கள் தொகுதிக்கு போங்கள், நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் உங்களுடைய கடமை தொகுதியில்தான் என்று தெரிவிக்கவில்லை. சட்டமன்றத்திற்கு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் வர வேண்டும். அவர்கள் வரவில்லையென்றால், அவர்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள் என்று சொல்லி, அதற்குக் கண்டிப்பாக இந்த அவை நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள். 1½ மணிக்கு முடித்துவிடுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நீங்கள் 1½ மணிக்கு சட்டமன்றத்தை ஒத்திவைப்பீர்கள். கூடுதலாக ஒரு 5, 10 நிமிடங்கள் அதிகப்படியாகக் கொடுங்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய உரையில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் நல்ல பல திட்டங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. 15 அம்சத் திட்டம் மற்றும் பல திட்டங்கள்





சொல்லப்பட்டிருக்கின்றன. நான்கு ஆண்டுகளில் படிப்படியாக அந்தத் திட்டங்கள் நிறைவேறும் என்று நான் நம்புகிறேன். அதே மாதிரி இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூட்டுறவுச் சங்கக் கடன்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 310 கோடி ரூபாய் வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரைக்கும் 226 கோடி ரூபாய் இந்த அரசால் விவசாயிகளுக்குச் சலுகை செய்யப்பட்டிருக்கிறது. அதேமாதிரி தமிழ்நாட்டில் மதுக்கடைகளை ஏலம் விடுகிற நேரத்தில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாதபடிக்கு சுமூகமாக, நல்ல முறையில் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

அதேமாதிரி ஆசிரியர்களை இடம் மாற்றம் செய்யக்கூடிய நேரத்தில் Counselling system சிறப்பான முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லாதபடிக்கு நடைபெற்றிருக்கிறது.

அதேமாதிரி என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் நீண்ட நாள் பிரச்சினை எது என்றால் அது உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம்தான். அந்தத் திட்டத்திற்கு அரசு சுமார் ரூ.3,920 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து ஆணையும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிலுவையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை இந்த பட்ஜெட்டிலேயே எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி செண்பகவள்ளி அணைத் திட்டம். இதுவும் ஒரு நீண்ட நாள் பிரச்சினை. இந்த செண்பகவள்ளி அணைத் திட்டம், கேரள அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் ஒரு மையமான இடத்தில் இருக்கிறது. அதில் உடைப்பு ஏற்பட்டு, தமிழ்நாடு அரசு அந்த உடைப்பைக் கட்டுவதற்கு 8-12-1983 அன்று கேரள அரசுக்கு 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் முன்பணமாகக் கட்டியுள்ளது. ஆனால், இதுவரைக்கும் அந்த வேலைகள் நடைபெறவில்லை. தமிழ்நாடு அரசு கேரள அரசுக்குப் பல நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும்கூட அவை கிடப்பிலே இருக்கின்றன. ஆனால், கேரள அரசு, என்னவோ, பெரிய அணை என்றும், கேரளாவில் இருக்கக்கூடிய தண்ணீர் தமிழ்நாட்டிற்குப் போகிறது என்றும் தவறுதலாக எண்ணியதால் இதுவரையில் அந்த அணைக்கு முன்னுரிமை கொடுத்து அதைக் கட்டவில்லை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகச் செய்தால் அந்தப் பகுதியில் உள்ள சுமார் 20,000

ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்த உள்ளாறு அணைத் திட்டம் என்பது சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதிக்கும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கும் சேர்த்து, இரண்டு தொகுதிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். இப்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தம்பி கருப்பசாமி அவர்களுடைய தொகுதியும் முழுமையாகப் பயன்பெறும். என்னுடைய தொகுதியும் பயன்பெறும். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற பட்ஜெட்டிலே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-25*

அதுமட்டுமல்லாமல், கோம்பையாறு அணைத் திட்டம். இதற்கும் எல்லா ஆய்வுகளும் செய்யப்பட்டுள்ளன. அந்தக் கோம்பையாறு திட்டம் வந்தாலும் சுமார் *5,000* ஏக்கருக்கு மேல் பாசன வசதி ஏற்படக்கூடிய திட்டமாக இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கும் நீங்கள் நிதி ஒதுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, பஸ் போக்குவரத்தைப் பற்றிப் பல்வேறு பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டிருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் இருக்கும் டெப்போவில் மட்டும் ஒரு நாளைக்கு *4* இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்படுகின்றது. ஒரு மாதத்திற்கு *1* கோடியே *20* இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையினால், தனியார் பஸ்களும் ஓட வேண்டும்; அரசு பஸ்களும் ஓடவேண்டும்; இரண்டிற்கும் இடையில் போட்டியிருந்தால்தான் சரியாக இயங்கமுடியும். நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய டெப்போவில் மட்டும் ஒரு நாளைக்கு *4* இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையினால், தனியார் பஸ்களையும் ஊக்குவிக்கவேண்டும், அரசு போக்குவரத்துக் கழகமும் இருந்தால்தான் சரியாக இருக்க முடியும்.

அதேமாதிரி நீண்ட நாட்களாகக் கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினை இருக்கிறது. ஒரு டன்னுக்கு *1,000* ரூபாய் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள். என்னுடைய தொகுதியில், என்னுடைய கிராமத்தில், தரணி சர்க்கரை ஆலை இருக்கிறது. அது 1986-லே எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டது. ஆகையினால், அந்த விவசாயிகளுக்குக் கரும்புக்கு டன்னுக்கு *1,000* ரூபாய்



கொடுத்தால்தான் சரியாக இருக்க முடியும். சென்ற அரசிடம் வலியுறுத்தியும், நடைமுறைப்படுத்த முடியவில்லை. இந்த முறையாவது விவசாயிகளுக்காக நீங்கள் மனது வைத்து கண்டிப்பாக டன்னுக்கு *1,000* ரூபாய் கொடுத்தால்தான் விவசாயிகளுக்கு இப்போது இருக்கக்கூடிய விலைவாசியில் ஊக்கம் அளிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கமுடியும்.

அதேமாதிரி, இப்போது சில மாவட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களில் நான்கு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. சில மாவட்டங்களில் ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றனன. சில மாவட்டங்களில் மூன்று சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. எங்களுடைய தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. விருதுநகரிலிருந்து, இராஜபாளையத்திற்கு அருகில் உள்ள என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து திருநெல்வேலிக்குப் போகவேண்டுமென்றால் இரண்டு மணி நேரம் ஆகிறது. ஆனால், தென்காசியைத் தலைமையிடமாக ஆக்கினால் சுமார் *100* கிலோ மீட்டரிருந்து சுமார் *50* கிலோமீட்டர் குறைக்கமுடியும். ஆறு சட்டமன்றத் தொகுதிகள் பெரும்பாலான மாவட்டங்களில் இருக்கின்றன. அப்படி இங்கும் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் இருப்பதால் தென்காசியைத் தலைமையிடமாக வைத்து ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டும்.

இப்போது உசிலம்பட்டியில் உள்ள சில பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். மூன்று கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தலே நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அங்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தவேண்டும்.

சபாநாயகர் அவர்கள் சிறப்பான முறையில் சில கருத்துகளைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சாதிச் சங்கங்கள், அரசியல்வாதிகள், அரசுத் துறை அதிகாரிகள் எல்லாம் சாதி உணர்வுகளைச் சில நேரத்தில் தூண்டிவிடுகிறார்கள். அது யாராக இருந்தாலும் சரி—சாதி உணர்வுகளைத் தூண்டிவிட்டால்—அவர்களைக் குண்டர் சட்டத்தில் போட்டால்தான் சரியாக இருக்கும். ஏனென்றால், மறைமுகமாக சில பிரச்சினைகள் இருக்கின்றன. காமராஜர் அவர்கள் ஒரு தேசியத் தலைவர். மறைந்த ஐயா முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஒரு தேசியத் தலைவர், அம்பேத்கர் ஒரு தேசியத் தலைவர். என்னவோ காமராஜர் அவர்கள்

நாடார்களுக்கு மட்டும் சொந்தக்காரர் போன்றும், முத்துராமலிங்கத் தேவர் ஐயா அவர்கள் தேவர்களுக்கு மட்டும் சொந்தக்காரர் மாதிரியும், அம்பேத்கர் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் சொந்தக்காரர் மாதிரியும் நினைக்கிறார்கள். அந்த மூன்று தலைவர்களும் அப்பேர்ப்பட்டவர்கள் இல்லை. அவர்கள், எல்லா சமுதாயங்களும் மதிக்கக்கூடிய தேசியத் தலைவர்கள்; எல்லா மக்களும் மதிக்கக்கூடிய தேசியத் தலைவர்கள். ஆகையினால், சாதி உணர்வுகளை, சாதிச் சங்கத் தலைவர்களாக இருந்தாலும் சரி அல்லது அரசுத் துறையிலுள்ள அரசு அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, சாதி உணர்வுகளைத் தூண்ட கண்டிப்பாக.......

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் இரண்டு நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** கொஞ்சம் டைம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மூன்று நிமிடம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** அதேமாதிரி வட மாவட்டங்கள், கடலூர் மற்றும் நாகை போன்ற பல்வேறு மாவட்டங்கள் மழையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய தென் மாவட்டங்களில், திருநெல்வேலியைப் பொறுத்தளவிலே சங்கரன்கோவில் தொகுதி, வாசுதேவநல்லூர் தொகுதி எல்லாம் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குளங்களில் எல்லாம் நீர் பெருகவில்லை. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. ஆகையினாலே இந்த இரண்டு தாலுகாக்களையும் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இரண்டு பாலங்கள்; என்னுடைய தொகுதியிலே பரயூர் அருகே இருக்கக்கூடிய பாலம் ஒன்று; கூடலூர் அருகே இருக்கக்கூடிய பாலம் ஒன்று; இவை பெரிய பாலங்கள்; 4,5 கிராமப் பஞ்சாயத்துகளுக்குத் தொடர்புள்ள பாலங்கள்; அதனாலே அந்தப் பாலங்களுக்கு எல்லாம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தளவிலே தைரியமாக, துணிச்சலாக நல்ல நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மாதிரி இந்த அரசால் 15 அம்சத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது பயனுள்ளதாகப் படிப்படியாக வளர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்த நான்கு ஆண்டுகளிலே நடவடிக்கை மேற்கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளைப் பற்றி 15,16,17 பத்திகளில் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய வளர்ச்சிக்குத் தரிசு நிலங்களைப் பயன்படுத்துவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தரிசு நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் படிப்படியாக, எல்லா இடங்களிலும், தரிசு நிலங்கள் எங்கு இருந்தாலும்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் அது எந்தப் பகுதியாக இருந்தாலும்—அதை எடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகவே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலும், சங்கரன்கோவில் பகுதியிலும் தரிசு நிலங்கள் நிறைய இருக்கின்றன. ஆகையினாலே தரிசு நிலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேமாதிரி நெடுஞ்சாலையைப் பொறுத்தளவிலே மிக மோசமாக இருக்கின்றது. இரண்டு வழித்தடங்களிலே பஸ் போக்குவரத்து நடைபெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலமாக நான் எழுதிக் கொடுக்கிறேன். அதற்கு முன்னுரிமை கொடுத்து நீங்கள் அதற்கு நிதி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி கூட்டுறவுத் தேர்தலையும் விரைவாக முடிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கூட்டுறவுத் தேர்தலை விரைவாக முடித்தால் அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை solve பண்ணுவதற்கு ஏதுவாகவும், அங்கே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு உதவிகரமாகவும் இருக்கும்.

அதேமாதிரி ஊராட்சி மன்றங்கள் இப்போது நிதி வசதி இல்லாமல் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே 82 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு நார்ம்ஸ் போட்டுக் கொடுத்து, இன்னின்ன வேலைதான் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறீர்கள். அதை இரத்து செய்ய வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2 கோடி ரூபாயை அவர்கள் விருப்பப்படி கொடுத்து பணிகளைச் செய்கிறார்கள். அதேமாதிரி

[திரு. ரா. ஈஸ்வரன்] [2002 மார்ச் 13

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற இந்த 82 இலட்சம் ரூபாயை, அவர்கள் நல்ல வேலைகள் செய்வதற்கு, தரமான வேலைகள் செய்வதற்கு நீங்கள் உத்தரவாதமாகக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

இப்போது நவீன கழிப்பறைகள் 2 இலட்சம் ரூபாய்க்குக் கட்டுவதற்கு நீங்கள் உத்தரவு வழங்கியிருக்கிறீர்கள். இது ஒருசில பகுதிகளிலேதான் சரியாக இருக்கும். கிராமப்புறங்களில் 2 இலட்சம் ரூபாயைக் கொடுத்தாலும், தண்ணீர் இருந்தால்தான் அந்த நவீன கழிப்பறைகள் சரியாக இருக்க முடியும். தண்ணீர் இல்லையென்றால் கண்டிப்பாக அதில் பாதிப்பு ஏற்படும். ஏற்கெனவே நவீன கழிப்பறைகள், சில பகுதிகளிலே கட்டிக்கொடுத்ததிலே ரொம்ப அசுத்தமாக, மோசமாக இருந்தது. ஏனென்றால் தண்ணீர் இல்லையென்றால் பெண்கள் உள்ளே போக முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகையினாலே அதற்கு ஏற்றவாறு நீங்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆகையினாலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி இல்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இந்த மாதிரி பெண்களுக்குண்டான கழிப்பிடங்கள் கட்டுவதற்காக அவர்கள் ஆணையிட்ட நேரத்திலே, முதலில் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொண்டு, பின்புதான் கழிப்பறைகளைக் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், உரையை முடித்து விடுங்கள்.



2002 மார்ச் 13] [திரு. ரா. ஈஸ்வரன்]

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட நல்ல திட்டம்தான். ஆனால், மக்கள் முறையோடு பயன்படுத்தினால் சரியாக இருக்கும். ஆகையினாலே, இந்தத் திட்டத்திற்குத் தண்ணீர் வசதி இருந்தால்தான் சரியாக இருக்க முடியும். எந்தச் சூழ்நிலையிலேயும் தண்ணீர் வசதியைச் சரியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-35*

அடுத்து, குடிதண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில்—ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்—சிவகிரி பேரூராட்சி சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பேரூராட்சி. நான் ஆரம்பத்திலேயே சிவகிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னேன். ஒரு இடத்தில் open கிணறு போட்டார்கள். அந்த இடத்தில் போட வேண்டாமென்று பல முறை சொன்னேன். அதையும் மீறிப் போட்டார்கள். அந்த இடத்தில் மயானம் இருக்கிறது. பிரேதங்களை அடக்கம் செய்யக்கூடிய, பிரேதங்களை எரிக்கக்கூடிய இடமாக அது இருக்கிறது. ஆகையினால் தண்ணீர் மோசமான நிலையில் வந்து, அந்த கிராமத்தில் இப்போது காலரா பரவியிருக்கிறது. தண்ணீர் மோசமான நிலையில் இருக்கிறது. எனவே, அந்த இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் இரண்டு open கிணறுகள் போட்டால் சிவகிரி பேரூராட்சிக்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுகொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2002 மார்ச் 13

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30 மணியளவில்* **மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை எனக்குத் தந்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழக முன்னாள் முதல்வர், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, என்னை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றையதினம் இந்த ஆளுநர் உரையில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையை ஆரம்பிக்கின்றேன். (குறுக்கீடு) ஆம், கன்னிப் பேச்சு, கன்னிப் பேச்சு தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, கன்னிப் பேச்சா? *(சிரிப்பு)*

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** 5 ஆண்டுகள் அமைச்சராகப் பணியாற்றி இன்று எதிர்க்கட்சி வரிசையில் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றவன், என்ற அந்த அடிப்படையில் முதன் முதலாக எனது குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள நெய்வேலி நகரத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைத் தனியார்மயமாக்குகின்ற ஒரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்டித்து நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர் தோழர்களும், அதிகாரிகளும், பொறியாளர்களும் இன்றையதினம் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 11ஆம் தேதியன்று உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. அதில் பல்லாயிரக்கணக்கான தோழர்களும் அனைத்துக் கட்சியினரும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், பாரதிய ஜனதாக் கட்சியை சேர்ந்தவர்களும் மற்ற அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து உண்ணாவிரதத்தை நடத்தினார்கள். அனைவரும் அந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளை வழங்கினார்கள்.



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

தனியார்மயமாக்குவதன் மூலமாக பிற்காலத்தில் 4,5 மாநிலங்கள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை எப்படியாவது ஆளும் கட்சியினர் தடுக்க வேண்டும். காரணம், இன்றையதினம் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், அது பொதுத்துறையில் இருக்கின்ற காரணத்தால், ஒரு யூனிட் விலை ஒரு ரூபாய் 65 பைசா என்ற அளவில் மின்சாரத்தை வழங்குகின்றது. அது தனியார் மயமாக்கப்பட்டால் அந்தத் தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றால் ஒரு யூனிட்டிற்கு 4 ரூபாய், 4.50 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் பெரிய பாதிப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதேபோல பலர் வேலையிழக்கின்ற அபாயமும் இருக்கின்றது.

நெய்வேலி நிறுவனத்தில் கிட்டத்தட்ட 20,000 தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்து கான்டிராக்ட் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 15,000 நபர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படும், பேரழிவு ஏற்படுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், இங்கே இருக்கின்ற தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களும், அதேபோல இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய சட்டமன்றத் தலைவர்களும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும்.

கடந்த காலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது சேலம் உருக்காலைத் திட்டத்தை தனியார் மயமாக்குவதைத் தடுப்பதற்கு எல்லோருடைய வேண்டுகோளையும் ஏற்று, சட்டமன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தை இயற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அதைச் தற்சமயம் நிறுத்தி வைத்துள்ளார்கள். அதே முறையில் இப்போது இந்த ஆளும் கட்சி, முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் தொழிலாளர்கள் சார்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எல்லோருக்கும் தெரியும், அடை மழை பெய்தது. தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களெல்லாம் அந்தப் பெரிய மழையினால் பாதிக்கப்பட்டு, அறுவடை செய்த நெல் அழிந்து போன காட்சியையெல்லாம் பார்த்தீர்கள். ஆனால் நம்முடைய முன்னாள் முதலமைச்சர், தற்சமயம் இருக்கின்ற பொதுப் பணித்துறை அமைச்சர்

அவர்கள் அதைப் பார்வையிடாமல் ஆண்டிப்பட்டிக்குச் சென்று விட்டார். இதில் எல்லாக் கட்சி எம்.எல்.ஏ.-க்களும் சொன்னார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். இருந்தாலும்......

*பிற்பகல் 4-35*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்பாக இயற்கைச் சீற்றத்தினால் பெரும் பாதிப்புக்கு உள்ளான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வெகுவாக விவசாயப் பெருங்குடி மக்களும், அவர்கள் விளைவித்த பயிர்களும் சேதம் அடைந்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஜீவானந்தம் அவர்களையும், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்களையும் அந்தப் பகுதிக்கு அனுப்பி, வெள்ளச் சேதங்களைப் பார்வையிடச் சொன்னார்கள். அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களை நான் நேரடியாகத் தொடர்பு கொண்டேன். வெள்ளச் சேதங்களைப் பற்றிய விவரங்களை உடனடியாக அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. நிவாரண நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நன்றி. அமைச்சர்கள் வந்து பார்வையிட்டார்கள். முதலமைச்சர் வந்து பார்வையிட்டிருந்தால் மத்திய அரசு மூலமாக அதிகமான நிதியைப் பெற வாய்ப்பு வந்து இருக்கும். ஏனென்றால் ஒரு முதலமைச்சரே வெள்ளச் சேதத்தைப் பார்க்கச் சென்றார் என்றால், ஏதோ தீவிரமான, அதிகமான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணம் மத்திய அரசுக்கும் இருக்கும், மக்களுக்கும் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால்தான் சொன்னேன். இப்போது வெள்ள நிவாரணம் எல்லாம் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். நானும் அந்த ஊர்க்காரன்தான். உண்மையிலேயே எங்களுடைய பகுதி மக்களுக்கெல்லாம் வெள்ள நிவாரணப் பணம் இன்னும் வழங்கப்பட வில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையில் அவர்கள்தான் அங்கம் வகித்துக் கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய செல்வாக்கை இந்த நல்ல நேரத்திலே அவர்கள் அங்கே காண்பித்து, எடுத்துச் சொல்லி, தஞ்சை வாழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகப்படியான நிவாரணம் வாங்கித் தரப்பட வேண்டும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகச் சொல்லிகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும், இந்த மாநிலத்தை ஆள்வது உங்களுடைய ஆட்சிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பெற்றுத் தருகின்ற வாய்ப்பு உங்களுக்குத்தான் உண்டு; கடமையும் உண்டு. நீங்கள் கேட்டால் நாங்கள் சிபாரிசு பண்ணுகிறோம், பண்ணிச் செய்கிறோம். அதனால் அதற்குள்ளாக இன்னும் வெள்ள....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னால்தான் சிபாரிசு செய்வதாகச் சொல்கின்றார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு உள்ளபடியே மக்கள் படுகின்ற துன்பங்களில் அக்கறை இல்லை என்பதுதான் அர்த்தம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அக்கறை இருப்பதால்தான் இந்தச் சட்டமன்றத்திலே பேசுகிறோம். ஏனென்றால், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த காலத்தில் முதலமைச்சராக கடந்த ஆட்சியில் இருந்தபோது, வெள்ள நிவாரணப் பணிகள் உடனடியாக முடுக்கிவிடப்பட்டு, சேதம் அடைந்தவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி கொடுத்த ஒரு காட்சியையும் பார்த்தீர்கள். மழை பெய்ததால் நெல்லை வைத்துக்கொண்டு ரோட்டிலே நிற்கிறான் அவன். நெல்லை விற்க முடியவில்லை. வெள்ள நிவாரணப் பணமும் கொடுக்கவில்லை. இன்னும் யாரும் வாங்கவில்லை. ஏனென்றால் உளுந்துப் பயிர் போய்விட்டது. அதேபோல வெங்காயமும் போய்விட்டது. அந்த அளவிற்கு விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மழையால் பாதிக்கப்பட்ட, தேர்ந்த நெல்லை விற்க முடியாமல் வைத்துக்கொண்டு விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகளுக்கு 300 கோடி ரூபாய் வட்டி சலுகை பண்ணுவோம் என்று சொன்னார்கள். அந்த வட்டி சலுகை வந்து சேரவில்லை. இருந்தாலும் அதிலே 100 கோடி ரூபாய் கொடுத்தாலும் பரவாயில்லை...

[2002 மார்ச் 13

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தலைவர் அவர்களே, நேற்றைக்கே இதைப்பற்றிப் பேசுகிறபோது, வட்டி 226 கோடி ரூபாய்; விவசாயிகள், 6 இலட்சத்து 11 ஆயிரம் பேர் பலன் பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொன்னேன். உறுப்பினர் அதைக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். இல்லையென்றால், கேட்டுவிட்டு வேண்டுமென்றே பேசுகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற அந்தத் திட்டத்தினை விவசாயிகள் 6 இலட்சத்து 11 ஆயிரம் பேர் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 226 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். பரவாயில்லை. இப்போது கொடுங்கள் என்றுதான் சொல்கிறோம். இருக்கிற நெல்லை வாங்குங்கள் என்று சொல்கிறோம். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒன்றுக்கு முக்கால் தேறியிருக்கிறது. அவர்கள் களத்துமேட்டில் நெல்லை வைத்திருக்கிறார்கள்; ரோட்டில் நெல் இருக்கிறது; யாரும் நெல்லை எடுப்பதில்லை.

காலையில் உணவு அமைச்சர் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்னார்கள். நாங்கள் தொள்ளாயிரத்துச் சொச்சம் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்; திறந்திருக்கிறீர்கள். எங்களது ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், நெல் கொள்முதல் நிலையங்கள் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் திறக்கப்பட்டன; நெல்லை வாங்கினோம். ஆனால், உங்களுடைய ஆட்சியில் தொள்ளாயிரத்துச் சொச்சம் இடங்களில் திறந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். உதாரணத்திற்கு என்னுடைய கடலூர் மாவட்டத்தில், எங்களுடைய ஆட்சியில் 93 கொள்முதல் நிலையங்கள் வைத்தோம். இப்போது இந்த ஆண்டு 60 நிலையங்கள்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால், நெல்லை வாங்கவில்லை; அந்த நெல்லை வாங்கவில்லை. நான் சொல்வது உண்மையா இல்லையா என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து—விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற ஆட்சியாக இருந்தால், இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை—தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் அனுப்பி, அங்கே ரோட்டில் பார்க்கச் சொல்லுங்கள். ரோடு பூராவும்



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

நெல் மூட்டை கிடக்கிறது; யாரும் வாங்கவில்லை. ஏனென்று கேட்டால் பழுப்பு நெல், பழுப்பு நெல் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய ஆட்சியில் ஒரு முறை கொடுத்தார்கள். Discolour ஆக இருந்தால் அதற்கு 8% வாங்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆட்சியில் discolour ஆக இருந்தால் 4% தான் வாங்கச் சொல்கிறார்கள். அதைப் போல குப்பைக்கூளம் இருந்தால் 4% தான் வாங்கச் சொல்கிறார்கள். இந்த முறையைப் பார்த்தால் விதை நெல்லை எப்படி வாங்குவார்களோ அதைப்போல வாங்குகின்ற காட்சி இந்த ஆட்சியில் இருக்கிறது; உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் உறுப்பினர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அவர்களுடைய ஆட்சியில் நடந்த தவறுகளையெல்லாம் முன்பே பட்டியல் போட்டுக் காண்பித்துவிட்டோம். ஆந்திராவில் இருந்து நாங்கள் நெல்லை வாங்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லைக் கொள்முதல் செய்கிற வகையில்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே, தரமான நெல்லைப் பெற்று, தரமான அரிசியைத் தர வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவியினுடைய தீவிரக் கொள்கை. அதன் அடிப்படையிலேதான் சீராக, விவசாயிகள் கொண்டு வருகிற அத்தனை நெல்லையும் ஒரு மணியைக்கூட விடாமல் வாங்குவதை இந்த அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டிலே ஆந்திராவிலேயிருந்து கொண்டு வரப்பட்டது நெல். யாருக்காகவோ நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தீர்கள் நீங்கள். ஆனால், இன்றைக்கு நாங்கள் தமிழக விவசாயிகளுக்காகவும், தஞ்சை பகுதியிலே இருக்கிற டெல்டா விவசாயிகளுக்காகவும்தான் திறந்து முழுமையான கொள்முதலை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தவறான தகவலைக் கூறுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியிருந்தால் நான் நிரூபிக்கிறேன். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். தைரியமிருந்தால் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி நேரடியாகப் பார்வையிடச் சொல்லுங்கள். விவசாயிகளைப் பார்த்து, எவ்வளவு மூட்டை நெல்லை ரோட்டில் வைத்திருக்கிறார்கள். எவ்வளவு விற்க முடியாமல் தடுமாறுகிறார்கள்

என்பதையெல்லாம் அறிய நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக அனுப்புவீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் நெல் கொள்முதல் நிலையங்களை ஆரம்பித்திருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். காலையில் கூட யாரோ ஒருவர் சொன்னார்; உறுப்பினர் ஒருவர் சொன்னார். தனியார் வியாபாரிகள் கொடுக்கிற நெல்லைத்தான் வாங்குகிறார்களே தவிர, விவசாயிகளின் நெல்லை வாங்குவதில்லை என்று ஒரு கருத்து நிலவுகின்றது. அதைப் போக்க வேண்டுமென்றால், இந்த அரசு அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழுவை நேரடியாக அனுப்பி, விவசாயிகளிடத்தில் விசாரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்ததாக (மணியடிக்கப்பெற்றது) தொடர் பசுமைப் புரட்சி என்று இங்கே நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர், 2 நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். விவசாயிகள் பிரச்சினை போயிற்று. மற்ற பிரச்சினைகள் முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** முதல் பேச்சு பேசுகிறேன். தலைவர் அவர்களே, தொடர் பசுமைப் புரட்சியை உள்ளடக்கி என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு 15 அம்சத் திட்டத்தினைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் தொடர் பசுமைப் புரட்சி உண்டு. ஆனால், விவசாயிகளும் கஷ்டப்படுகிறார்கள், தொடர் பசுமைப் புரட்சித் திட்டத்தின் மூலமாக, அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் இணைக்கப்படும் என்று இப்போது கவர்னருடைய உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் நிதிநிலை கருதியும், நிருவாக வசதி கருதியும் நாங்கள் இந்த மாவட்டங்களை —இரண்டாகப் பிரிக்கப்பட்ட மாவட்டத்தை— ஒன்றாக இணைக்கிறோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது பார்த்தீர்கள் என்றால், காலையில் 110 விதியின்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையில் அந்தத் தொகுதி மக்கள் தொகை குறைவாக இருக்கிறது. அதனால் இணைக்கிறோம் என்று





சொல்லியிருக்கிறார்கள். எனக்கு என்ன சந்தேகம் என்றால் நீங்கள் நிதிநிலை அறிக்கையில் தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தருமபுரியை ஒரு மாவட்டமாகவும், கிருஷ்ணகிரியை ஒரு மாவட்டமாகவும் பிரித்து இருக்கிற நீங்கள் இன்றைய தினம் தலைவர் கலைஞர், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்த காரணத்தை முன்னிட்டுத்தான் இணைத்திருக்கிறீர்கள் என்ற சந்தேகம் வருகிறது.

பிற்பகல் 4-45

தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்றீர்களா இல்லையா என்று இதுவரைக்கும் எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அங்கு மட்டும் நிதி இருக்கிறது, இங்கு மட்டும் நிதி இல்லையா? கேட்கிறேன். அங்கே மட்டும் நிதி இருக்கிறது அதைப் பிரிப்பதற்கு. பெரம்பலூர் மாவட்டத்திலே எங்கே பார்த்தாலும் கடையடைப்பு; பேருந்துகள் ஓடவில்லை. மக்கள் செல்ல வாய்ப்பில்லாமல் கறுப்புக் கொடி கட்டியிருக்கிறார்கள். அதுவே ஓர் அவமானச் சின்னம். பெரம்பலூர் மாவட்டத்திலே வீட்டுக்கு வீடு கறுப்புக் கொடி கட்டப்பட்டுள்ளது. கறுப்புக் கொடியை ஏற்றியுள்ளார்கள். இது இந்த அரசுக்கு அவமானமாகப்படவில்லையா என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உள்ளாட்சித் தேர்தலை நாங்கள் நேர்மையாக நடத்தினோம் என்று கவர்னர் உரையில் இங்கே பெருமையாகக் கூறினீர்கள். சென்னை மாநகராட்சித் தேர்தலை நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள்; கேட்டிருப்பீர்கள்; டி.வி.யிலே பார்த்திருப்போம், ரேடியோவிலே கேட்டிருப்போம். சென்னை மாநகராட்சித் தேர்தலில் என்ன நடந்தது? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள் திரு. பன்னீர்செல்வம், இரண்டு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம் சொன்ன கருத்துகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இன்னும் இரண்டு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். சிதம்பரத்திலேயே இருங்கள். சென்னைக்கு வராதீர்கள், பேசுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 மார்ச் 13

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நீக்கப்பட்டுவிட்டது. அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நான் தவறான செய்தியைச் சொல்லவில்லையே மாநகராட்சித் தேர்தலிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பேப்பரிலே வந்திருக்கிறது; டி.வி.யிலே காட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேப்பரிலே வந்ததற்குப் பிறகு பேச முடியாது. நீங்கள் ஒழுங்காகப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் தூங்கிக்கொண்டு இருந்தேன். இராத்திரி 12 மணிக்கு வந்து எழுப்புகிறீர்கள்; அரெஸ்ட் பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பன்னீர்செல்வம், இங்கே பார்த்துப் பேசுங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** என்ன இது? பேச விடுங்கள், இது என் கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்). இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அடுத்ததாக, இன்றையதினம், சட்டக்கல்லூரி மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே இருக்கிற சட்ட அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சட்டமன்றம் நடந்துக்கொண்டிருக்கிறது. இந்த வேளையில் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திய மாணவர்களை கடந்த 7-12-2001-ல் சட்டக்கல்லூரி விடுதியில் மாணவர்களைக் கடுமையாக, போலீஸ் அத்துமீறித் தாக்கினார்கள். அதைக் கண்டித்து உண்ணாவிரதம்; சிறையில் தள்ளப்பட்டார்கள். பொய் வழக்குப்



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

போட்டு, உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணையில், முன்னாள் டி.ஜி.பி. திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழு விசாரித்து, அது போலீஸ் அத்துமீறல் என்று அவர்கள் அறிக்கை கொடுத்துள்ளார்கள். அதேபோல தனி நபர் கமிஷன் இந்த ஆட்சியில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. திரு. அஹமது அலி அவர்கள் தலைமையில் மூன்று மாதத்திற்குள் அந்த அறிக்கை தர வேண்டும் என்று சொல்லி அறிவித்தார்கள். மூன்று மாதம் முடிந்து கிட்டத்தட்ட 2, 3 நாட்கள் ஆகின்றன. அஹமது அலி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் இறந்துபோனார்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எப்படியோ மூன்று மாதத்தில் கண்டுபிடிக்க வேண்டும் என்று அறிக்கை கொடுத்தீர்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறந்து போனவர் எப்படிக்கொடுக்க முடியும்?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இறந்த பிறகு தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், பரிதி சொல்லக்கூடிய கருத்தோடு முடித்துவிடுவோம். (குறுக்கீடு) அவர்தான் பேசிக்கொண்டு இருக்கிறாரே, அவரைச் சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். அதேபோல, மாணவர்களைத் தாக்கிய போலீஸ்காரர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, இடைக்கால நிவாரணம், அதாவது ஹைகோர்ட் நீதிபதி அவர்கள் அறிவித்த இடைக்கால நிவாரணத்தை வழங்குவேண்டும் என்று கோரியும் இங்கே மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதம் என்று கடந்த இரு தினங்களாக இருக்கிறார்கள். இன்றையதினம் சாலை மறியல் செய்து, 50 மாணவர்கள் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியையும் டி.வி.-யிலே சொன்னார்கள். இந்த ஆட்சியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், சட்ட அமைச்சர் என்ன செய்கிறார், முதலமைச்சர் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) மாநகராட்சித் தேர்தலிலே,.... (கூச்சல்— குழப்பம்) மாணவர்களைக் கொடுமைப்படுத்துகின்ற ஆட்சியாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஓட்டுக் கேட்க விடமாட்டேன் என்கிறீர்கள்.

[2002 மார்ச் 13

பிற்பகல் 4-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ஓட்டுக்கேட்க விடமாட்டேன் என்கிறீர்கள். பொறுப்பான முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொல்கிறார்கள். சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்தையும் தி.மு.க.வினர் அடித்து உடைத்தார்கள் என்று சொன்னால் போலீஸ்காரர்கள் எப்படிப் பிடிப்பார்கள்? (குறுக்கீடுகள்) இன்றைக்கு நான் கேட்கிறேன். பாலனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு (குறுக்கீடு) சேகர்பாபு, பேசலாம். (குறுக்கீடு) போதும், போதும்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** சார், ஒரேயொரு நிமிடம், நன்றி சொல்ல வேண்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, நீங்கள் உட்காருங்கள், அவர் நன்றி சொல்லி முடித்து விடட்டும்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எனக்கு என்ன சந்தேகம் என்றால், ஊரிலே பேசிக்கொள்கிறார்கள்—பாலனை அண்ணா தி.மு.க.-காரர்கள்தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வேண்டாம் உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய மனிதருள் மாணிக்கம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினை நல்கி இருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கில் வைந்து'



2002 மார்ச் 13] [திரு. ரா. ஈஸ்வரன்]

கொடுத்தால்தான் சரியாக இருக்க முடியும். சென்ற அரசிடம் வலியுறுத்தியும், நடைமுறைப்படுத்த முடியவில்லை. இந்த முறையாவது விவசாயிகளுக்காக நீங்கள் மனது வைத்து கண்டிப்பாக டன்னுக்கு 1,000 ரூபாய் கொடுத்தால்தான் விவசாயிகளுக்கு இப்போது இருக்கக்கூடிய விலைவாசியில் ஊக்கம் அளிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கமுடியும்.

அதேமாதிரி, இப்போது சில மாவட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களில் நான்கு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. சில மாவட்டங்களில் ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றனன. சில மாவட்டங்களில் மூன்று சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. எங்களுடைய தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. விருதுநகரிலிருந்து, இராஜபாளையத்திற்கு அருகில் உள்ள என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து திருநெல்வேலிக்குப் போகவேண்டுமென்றால் இரண்டு மணி நேரம் ஆகிறது. ஆனால், தென்காசியைத் தலைமையிடமாக ஆக்கினால் சுமார் 100 கிலோ மீட்டரிருந்து சுமார் 50 கிலோமீட்டர் குறைக்கமுடியும். ஆறு சட்டமன்றத் தொகுதிகள் பெரும்பாலான மாவட்டங்களில் இருக்கின்றன. அப்படி இங்கும் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் இருப்பதால் தென்காசியைத் தலைமையிடமாக வைத்து ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டும்.

இப்போது உசிலம்பட்டியில் உள்ள சில பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். மூன்று கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தலே நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அங்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தவேண்டும்.

சபாநாயகர் அவர்கள் சிறப்பான முறையில் சில கருத்துகளைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சாதிச் சங்கங்கள், அரசியல்வாதிகள், அரசுத் துறை அதிகாரிகள் எல்லாம் சாதி உணர்வுகளைச் சில நேரத்தில் தூண்டிவிடுகிறார்கள். அது யாராக இருந்தாலும் சரி—சாதி உணர்வுகளைத் தூண்டிவிட்டால்—அவர்களைக் குண்டர் சட்டத்தில் போட்டால்தான் சரியாக இருக்கும். ஏனென்றால், மறைமுகமாக சில பிரச்சினைகள் இருக்கின்றன. காமராஜர் அவர்கள் ஒரு தேசியத் தலைவர். மறைந்த ஐயா முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஒரு தேசியத் தலைவர், அம்பேத்கர் ஒரு தேசியத் தலைவர். என்னவோ காமராஜர் அவர்கள்

நாடார்களுக்கு மட்டும் சொந்தக்காரர் போன்றும், முத்துராமலிங்கத் தேவர் ஐயா அவர்கள் தேவர்களுக்கு மட்டும் சொந்தக்காரர் மாதிரியும், அம்பேத்கர் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் சொந்தக்காரர் மாதிரியும் நினைக்கிறார்கள். அந்த மூன்று தலைவர்களும் அப்பேர்ப்பட்டவர்கள் இல்லை. அவர்கள், எல்லா சமுதாயங்களும் மதிக்கக்கூடிய தேசியத் தலைவர்கள்; எல்லா மக்களும் மதிக்கக்கூடிய தேசியத் தலைவர்கள். ஆகையினால், சாதி உணர்வுகளை, சாதிச் சங்கத் தலைவர்களாக இருந்தாலும் சரி அல்லது அரசுத் துறையிலுள்ள அரசு அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, சாதி உணர்வுகளைத் தூண்ட கண்டிப்பாக.......

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் இரண்டு நிமிடம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** கொஞ்சம் டைம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மூன்று நிமிடம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** அதேமாதிரி வட மாவட்டங்கள், கடலூர் மற்றும் நாகை போன்ற பல்வேறு மாவட்டங்கள் மழையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய தென் மாவட்டங்களில், திருநெல்வேலியைப் பொறுத்தளவிலே சங்கரன்கோவில் தொகுதி, வாசுதேவநல்லூர் தொகுதி எல்லாம் வறட்சியினால் பாதிக்கப்படடிருக்கின்றன. குளங்களில் எல்லாம் நீர் பெருகவில்லை. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. ஆகையினாலே இந்த இரண்டு தாலுகாக்களையும் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இரண்டு பாலங்கள்; என்னுடைய தொகுதியிலே பரயூர் அருகே இருக்கக்கூடிய பாலம் ஒன்று; கூடலூர் அருகே இருக்கக்கூடிய பாலம் ஒன்று; இவை பெரிய பாலங்கள்; 4,5 கிராமப் பஞ்சாயத்துகளுக்குத் தொடர்புள்ள பாலங்கள்; அதனாலே அந்தப் பாலங்களுக்கு எல்லாம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தளவிலே தைரியமாக, துணிச்சலாக நல்ல நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மாதிரி இந்த அரசால் 15 அம்சத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது பயனுள்ளதாகப் படிப்படியாக வளர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்த நான்கு ஆண்டுகளிலே நடவடிக்கை மேற்கொள்வதில் உறுதியாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளைப் பற்றி 15,16,17 பத்திகளில் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய வளர்ச்சிக்குத் தரிசு நிலங்களைப் பயன்படுத்துவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தரிசு நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் படிப்படியாக,எல்லா இடங்களிலும், தரிசு நிலங்கள் எங்கு இருந்தாலும்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் அது எந்தப் பகுதியாக இருந்தாலும்—அதை எடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகவே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலும், சங்கரன்கோவில் பகுதியிலும் தரிசு நிலங்கள் நிறைய இருக்கின்றன. ஆகையினாலே தரிசு நிலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேமாதிரி நெடுஞ்சாலையைப் பொறுத்தளவிலே மிக மோசமாக இருக்கின்றது. இரண்டு வழித்தடங்களிலே பஸ் போக்குவரத்து நடைபெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலமாக நான் எழுதிக் கொடுக்கிறேன். அதற்கு முன்னுரிமை கொடுத்து நீங்கள் அதற்கு நிதி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி கூட்டுறவுத் தேர்தலையும் விரைவாக முடிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கூட்டுறவுத் தேர்தலை விரைவாக முடித்தால் அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை solve பண்ணுவதற்கு ஏதுவாகவும், அங்கே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு உதவிகரமாகவும் இருக்கும்.

அதேமாதிரி ஊராட்சி மன்றங்கள் இப்போது நிதி வசதி இல்லாமல் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே 82 இல்ட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு நார்ம்ஸ் போட்டுக் கொடுத்து, இன்னின்ன வேலைதான் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறீர்கள். அதை இரத்து செய்ய வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2 கோடி ரூபாயை அவர்கள் விருப்பப்படி கொடுத்து பணிகளைச் செய்கிறார்கள். அதேமாதிரி

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற இந்த 82 இலட்சம் ரூபாயை, அவர்கள் நல்ல வேலைகள் செய்வதற்கு, தரமான வேலைகள் செய்வதற்கு நீங்கள் உத்தரவாதமாகக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

இப்போது நவீன கழிப்பறைகள் 2 இலட்சம் ரூபாய்க்குக் கட்டுவதற்கு நீங்கள் உத்தரவு வழங்கியிருக்கிறீர்கள். இது ஒருசில பகுதிகளிலேதான் சரியாக இருக்கும். கிராமப்புறங்களில் 2 இலட்சம் ரூபாயைக் கொடுத்தாலும், தண்ணீர் இருந்தால்தான் அந்த நவீன கழிப்பறைகள் சரியாக இருக்க முடியும். தண்ணீர் இல்லையென்றால் கண்டிப்பாக அதில் பாதிப்பு ஏற்படும். ஏற்கெனவே நவீன கழிப்பறைகள், சில பகுதிகளிலே கட்டிக்கொடுத்ததிலே ரொம்ப அசுத்தமாக, மோசமாக இருந்தது. ஏனென்றால் தண்ணீர் இல்லையென்றால் பெண்கள் உள்ளே போக முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகையினாலே அதற்கு ஏற்றவாறு நீங்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆகையினாலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி இல்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இந்த மாதிரி பெண்களுக்குண்டான கழிப்பிடங்கள் கட்டுவதற்காக அவர்கள் ஆணையிட்ட நேரத்திலே, முதலில் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொண்டு, பின்புதான் கழிப்பறைகளைக் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், உரையை முடித்து விடுங்கள்.





**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட நல்ல திட்டம்தான். ஆனால், மக்கள் முறையோடு பயன்படுத்தினால் சரியாக இருக்கும். ஆகையினாலே, இந்தத் திட்டத்திற்குத் தண்ணீர் வசதி இருந்தால்தான் சரியாக இருக்க முடியும். எந்தச் சூழ்நிலையிலேயும் தண்ணீர் வசதியைச் சரியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் *1-35*

அடுத்து, குடிதண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில்—ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்—சிவகிரி பேரூராட்சி சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பேரூராட்சி. நான் ஆரம்பத்திலேயே சிவகிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னேன். ஒரு இடத்தில் open கிணறு போட்டார்கள். அந்த இடத்தில் போட வேண்டாமென்று பல முறை சொன்னேன். அதையும் மீறிப் போட்டார்கள். அந்த இடத்தில் மயானம் இருக்கிறது. பிரேதங்களை அடக்கம் செய்யக்கூடிய, பிரேதங்களை எரிக்கக்கூடிய இடமாக அது இருக்கிறது. ஆகையினால் தண்ணீர் மோசமான நிலையில் வந்து, அந்த கிராமத்தில் இப்போது காலரா பரவியிருக்கிறது. தண்ணீர் மோசமான நிலையில் இருக்கிறது. எனவே, அந்த இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் இரண்டு open கிணறுகள் போட்டால் சிவகிரி பேரூராட்சிக்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுகொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் *1-35* மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2002 மார்ச் 13

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30* மணியளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை எனக்குத் தந்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழக முன்னாள் முதல்வர், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, என்னை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றையதினம் இந்த ஆளுநர் உரையில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையை ஆரம்பிக்கின்றேன். *(குறுக்கீடு)* ஆம், கன்னிப் பேச்சு, கன்னிப் பேச்சு தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, கன்னிப் பேச்சா? *(சிரிப்பு)*

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *5* ஆண்டுகள் அமைச்சராகப் பணியாற்றி இன்று எதிர்க்கட்சி வரிசையில் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றவன், என்ற அந்த அடிப்படையில் முதன் முதலாக எனது குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள நெய்வேலி நகரத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைத் தனியார்மயமாக்குகின்ற ஒரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்டித்து நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர் தோழர்களும், அதிகாரிகளும், பொறியாளர்களும் இன்றையதினம் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த *11*ஆம் தேதியன்று உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. அதில் பல்லாயிரக்கணக்கான தோழர்களும் அனைத்துக் கட்சியினரும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், பாரதிய ஜனதாக் கட்சியை சேர்ந்தவர்களும் மற்ற அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து உண்ணாவிரதத்தை நடத்தினார்கள். அனைவரும் அந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளை வழங்கினார்கள்.



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

தனியார்மயமாக்குவதன் மூலமாக பிற்காலத்தில் *4,5* மாநிலங்கள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை எப்படியாவது ஆளும் கட்சியினர் தடுக்க வேண்டும். காரணம், இன்றையதினம் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், அது பொதுத்துறையில் இருக்கின்ற காரணத்தால், ஒரு யூனிட் விலை ஒரு ரூபாய் *65* பைசா என்ற அளவில் மின்சாரத்தை வழங்குகின்றது. அது தனியார் மயமாக்கப்பட்டால் அந்தத் தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்க வேண்டுமென்றால் ஒரு யூனிட்டிற்கு *4* ரூபாய், *4.50* ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் பெரிய பாதிப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதேபோல பலர் வேலையிழக்கின்ற அபாயமும் இருக்கின்றது.

நெய்வேலி நிறுவனத்தில் கிட்டத்தட்ட *20,000* தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்து கான்டிராக்ட் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட *15,000* நபர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படும், பேரழிவு ஏற்படுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், இங்கே இருக்கின்ற தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களும், அதேபோல இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய சட்டமன்றத் தலைவர்களும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும்.

கடந்த காலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது சேலம் உருக்காலைத் திட்டத்தை தனியார் மயமாக்குவதைத் தடுப்பதற்கு எல்லோருடைய வேண்டுகோளையும் ஏற்று, சட்டமன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தை இயற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அதைச் தற்சமயம் நிறுத்தி வைத்துள்ளார்கள். அதேமுறையில் இப்போது இந்த ஆளும் கட்சி, முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் தொழிலாளர்கள் சார்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எல்லோருக்கும் தெரியும், அடை மழை பெய்தது. தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களெல்லாம் அந்தப் பெரிய மழையினால் பாதிக்கப்பட்டு, அறுவடை செய்த நெல் அழிந்து போன காட்சியையெல்லாம் பார்த்தீர்கள். ஆனால் நம்முடைய முன்னாள் முதலமைச்சர், தற்சமயம் இருக்கின்ற பொதுப் பணித்துறை அமைச்சர்

அவர்கள் அதைப் பார்வையிடாமல் ஆண்டிப்பட்டிக்குச் சென்று விட்டார். இதில் எல்லாக் கட்சி எம்.எல்.ஏ.-க்களும் சொன்னார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். இருந்தாலும்......

*பிற்பகல் 4-35*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்பாக இயற்கைச் சீற்றத்தினால் பெரும் பாதிப்புக்கு உள்ளான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வெகுவாக விவசாயப் பெருங்குடி மக்களும், அவர்கள் விளைவித்த பயிர்களும் சேதம் அடைந்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஜீவானந்தம் அவர்களையும், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்களையும் அந்தப் பகுதிக்கு அனுப்பி, வெள்ளச் சேதங்களைப் பார்வையிடச் சொன்னார்கள். அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களை நான் நேரடியாகத் தொடர்பு கொண்டேன். வெள்ளச் சேதங்களைப் பற்றிய விவரங்களை உடனடியாக அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. நிவாரண நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நன்றி. அமைச்சர்கள் வந்து பார்வையிட்டார்கள். முதலமைச்சர் வந்து பார்வையிட்டிருந்தால் மத்திய அரசு மூலமாக அதிகமான நிதியைப் பெற வாய்ப்பு வந்து இருக்கும். ஏனென்றால் ஒரு முதலமைச்சரே வெள்ளச் சேதத்தைப் பார்க்கச் சென்றார் என்றால், ஏதோ தீவிரமான, அதிகமான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணம் மத்திய அரசுக்கும் இருக்கும், மக்களுக்கும் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால்தான் சொன்னேன். இப்போது வெள்ள நிவாரணம் எல்லாம் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். நானும் அந்த ஊர்க்காரன்தான். உண்மையிலேயே எங்களுடைய பகுதி மக்களுக்கெல்லாம் வெள்ள நிவாரணப் பணம் இன்னும் வழங்கப்பட வில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையில் அவர்கள்தான் அங்கம் வகித்துக் கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும்





ஒலி) அவர்களுடைய செல்வாக்கை இந்த நல்ல நேரத்திலே அவர்கள் அங்கே காண்பித்து, எடுத்துச் சொல்லி, தஞ்சை வாழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகப்படியான நிவாரணம் வாங்கித் தரப்பட வேண்டும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகச் சொல்லிகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும், இந்த மாநிலத்தை ஆள்வது உங்களுடைய ஆட்சிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பெற்றுத் தருகின்ற வாய்ப்பு உங்களுக்குத்தான் உண்டு; கடமையும் உண்டு. நீங்கள் கேட்டால் நாங்கள் சிபாரிசு பண்ணுகிறோம், பண்ணிச் செய்கிறோம். அதனால் அதற்குள்ளாக இன்னும் வெள்ள....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னால்தான் சிபாரிசு செய்வதாகச் சொல்கின்றார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு உள்ளபடியே மக்கள் படுகின்ற துன்பங்களில் அக்கறை இல்லை என்பதுதான் அர்த்தம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அக்கறை இருப்பதால்தான் இந்தச் சட்டமன்றத்திலே பேசுகிறோம். ஏனென்றால், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த காலத்தில் முதலமைச்சராக கடந்த ஆட்சியில் இருந்தபோது, வெள்ள நிவாரணப் பணிகள் உடனடியாக முடுக்கிவிடப்பட்டு, சேதம் அடைந்தவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி கொடுத்த ஒரு காட்சியையும் பார்த்தீர்கள். மழை பெய்ததால் நெல்லை வைத்துக்கொண்டு ரோட்டிலே நிற்கிறான் அவன். நெல்லை விற்க முடியவில்லை. வெள்ள நிவாரணப் பணமும் கொடுக்கவில்லை. இன்னும் யாரும் வாங்கவில்லை. ஏனென்றால் உளுந்துப் பயிர் போய்விட்டது. அதேபோல வெங்காயமும் போய்விட்டது. அந்த அளவிற்கு விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மழையால் பாதிக்கப்பட்ட, தேர்ந்த நெல்லை விற்க முடியாமல் வைத்துக்கொண்டு விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகளுக்கு 300 கோடி ரூபாய் வட்டி சலுகை பண்ணுவோம் என்று சொன்னார்கள். அந்த வட்டி சலுகை வந்து சேரவில்லை. இருந்தாலும் அதிலே 100 கோடி ரூபாய் கொடுத்தாலும் பரவாயில்லை...

[2002 மார்ச் 13

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தலைவர் அவர்களே, நேற்றைக்கே இதைப்பற்றிப் பேசுகிறபோது, வட்டி 226 கோடி ரூபாய்; விவசாயிகள், 6 இலட்சத்து 11 ஆயிரம் பேர் பலன் பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மையைச் சொன்னேன். உறுப்பினர் அதைக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். இல்லையென்றால், கேட்டுவிட்டு வேண்டுமென்றே பேசுகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற அந்தத் திட்டத்தினை விவசாயிகள் 6 இலட்சத்து 11 ஆயிரம் பேர் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4-10*

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 226 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். பரவாயில்லை. இப்போது கொடுங்கள் என்றுதான் சொல்கிறோம். இருக்கிற நெல்லை வாங்குங்கள் என்று சொல்கிறோம். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒன்றுக்கு முக்கால் தேறியிருக்கிறது. அவர்கள் களத்துமேட்டில் நெல்லை வைத்திருக்கிறார்கள்; ரோட்டில் நெல் இருக்கிறது; யாரும் நெல்லை எடுப்பதில்லை.

காலையில் உணவு அமைச்சர் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்னார்கள். நாங்கள் தொள்ளாயிரத்துச் சொச்சம் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்; திறந்திருக்கிறீர்கள். எங்களது ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், நெல் கொள்முதல் நிலையங்கள் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் திறக்கப்பட்டன; நெல்லை வாங்கினோம். ஆனால், உங்களுடைய ஆட்சியில் தொள்ளாயிரத்துச் சொச்சம் இடங்களில் திறந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். உதாரணத்திற்கு என்னுடைய கடலூர் மாவட்டத்தில், எங்களுடைய ஆட்சியில் 93 கொள்முதல் நிலையங்கள் வைத்தோம். இப்போது இந்த ஆண்டு 60 நிலயைங்கள்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால், நெல்லை வாங்கவில்லை; அந்த நெல்லை வாங்கவில்லை. நான் சொல்வது உண்மையா இல்லையா என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து—விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற ஆட்சியாக இருந்தால், இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை—தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்களுக்கும் அனுப்பி, அங்கே ரோட்டில் பார்க்கச் சொல்லுங்கள். ரோடு பூராவும்



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

நெல் மூட்டை கிடக்கிறது; யாரும் வாங்கவில்லை. ஏனென்று கேட்டால் பழுப்பு நெல், பழுப்பு நெல் என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய ஆட்சியில் ஒரு முறை கொடுத்தார்கள். Discolour ஆக இருந்தால் அதற்கு 8% வாங்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆட்சியில் discolour ஆக இருந்தால் 4% தான் வாங்கச் சொல்கிறார்கள். அதைப் போல குப்பைக்கூளம் இருந்தால் 4% தான் வாங்கச் சொல்கிறார்கள். இந்த முறையைப் பார்த்தால் விதை நெல்லை எப்படி வாங்குவார்களோ அதைப்போல வாங்குகின்ற காட்சி இந்த ஆட்சியில் இருக்கிறது; உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் உறுப்பினர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அவர்களுடைய ஆட்சியில் நடந்த தவறுகளையெல்லாம் முன்பே பட்டியல் போட்டுக் காண்பித்துவிட்டோம். ஆந்திராவில் இருந்து நாங்கள் நெல்லை வாங்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லைக் கொள்முதல் செய்கிற வகையில்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே, தரமான நெல்லைப் பெற்று, தரமான அரிசியைத் தர வேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவியினுடைய தீவிரக் கொள்கை. அதன் அடிப்படையிலேதான் சீராக, விவசாயிகள் கொண்டு வருகிற அத்தனை நெல்லையும் ஒரு மணியைக்கூட விடாமல் வாங்குவதை இந்த அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டிலே ஆந்திராவிலேயிருந்து கொண்டு வரப்பட்டது நெல். யாருக்காகவோ நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தீர்கள் நீங்கள். ஆனால், இன்றைக்கு நாங்கள் தமிழக விவசாயிகளுக்காகவும், தஞ்சை பகுதியிலே இருக்கிற டெல்டா விவசாயிகளுக்காகவும்தான் திறந்து முழுமையான கொள்முதலை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தவறான தகவலைக் கூறுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியிருந்தால் நான் நிரூபிக்கிறேன். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். தைரியமிருந்தால் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி நேரடியாகப் பார்வையிடச் சொல்லுங்கள். விவசாயிகளைப் பார்த்து, எவ்வளவு மூட்டை நெல்லை ரோட்டில் வைத்திருக்கிறார்கள். எவ்வளவு விற்க முடியாமல் தடுமாறுகிறார்கள்

என்பதையெல்லாம் அறிய நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக அனுப்புவீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் நெல் கொள்முதல் நிலையங்களை ஆரம்பித்திருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். காலையில் கூட யாரோ ஒருவர் சொன்னார்; உறுப்பினர் ஒருவர் சொன்னார். தனியார் வியாபாரிகள் கொடுக்கிற நெல்லைத்தான் வாங்குகிறார்களே தவிர, விவசாயிகளின் நெல்லை வாங்குவதில்லை என்று ஒரு கருத்து நிலவுகின்றது. அதைப் போக்க வேண்டுமென்றால், இந்த அரசு அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழுவை நேரடியாக அனுப்பி, விவசாயிகளிடத்தில் விசாரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்ததாக (மணியடிக்கப்பெற்றது) தொடர் பசுமைப் புரட்சி என்று இங்கே நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர், 2 நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். விவசாயிகள் பிரச்சினை போயிற்று. மற்ற பிரச்சினைகள் முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** முதல் பேச்சு பேசுகிறேன். தலைவர் அவர்களே, தொடர் பசுமைப் புரட்சியை உள்ளடக்கி என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு 15 அம்சத் திட்டத்தினைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் தொடர் பசுமைப் புரட்சி உண்டு. ஆனால், விவசாயிகளும் கஷ்டப்படுகிறார்கள், தொடர் பசுமைப் புரட்சித் திட்டத்தின் மூலமாக, அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் இணைக்கப்படும் என்று இப்போது கவர்னருடைய உரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் நிதிநிலை கருதியும், நிருவாக வசதி கருதியும் நாங்கள் இந்த மாவட்டங்களை —இரண்டாகப் பிரிக்கப்பட்ட மாவட்டத்தை— ஒன்றாக இணைக்கிறோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது பார்த்தீர்கள் என்றால், காலையில் 110 விதியின்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையில் அந்தத் தொகுதி மக்கள் தொகை குறைவாக இருக்கிறது. அதனால் இணைக்கிறோம் என்று





சொல்லியிருக்கிறார்கள். எனக்கு என்ன சந்தேகம் என்றால் நீங்கள் நிதிநிலை அறிக்கையில் தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தருமபுரியை ஒரு மாவட்டமாகவும், கிருஷ்ணகிரியை ஒரு மாவட்டமாகவும் பிரித்து இருக்கிற நீங்கள் இன்றைய தினம் தலைவர் கலைஞர், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்த காரணத்தை முன்னிட்டுத்தான் இணைத்திருக்கிறீர்கள் என்ற சந்தேகம் வருகிறது.

பிற்பகல் 4-45

தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்றீர்களா இல்லையா என்று இதுவரைக்கும் எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அங்கு மட்டும் நிதி இருக்கிறது, இங்கு மட்டும் நிதி இல்லையா? கேட்கிறேன். அங்கே மட்டும் நிதி இருக்கிறது அதைப் பிரிப்பதற்கு. பெரம்பலூர் மாவட்டத்திலே எங்கே பார்த்தாலும் கடையடைப்பு; பேருந்துகள் ஓடவில்லை. மக்கள் செல்ல வாய்ப்பில்லாமல் கறுப்புக் கொடி கட்டியிருக்கிறார்கள். அதுவே ஓர் அவமானச் சின்னம். பெரம்பலூர் மாவட்டத்திலே வீட்டுக்கு வீடு கறுப்புக் கொடி கட்டப்பட்டுள்ளது. கறுப்புக் கொடியை ஏற்றியுள்ளார்கள். இது இந்த அரசுக்கு அவமானமாகப்படவில்லையா என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உள்ளாட்சித் தேர்தலை நாங்கள் நேர்மையாக நடத்தினோம் என்று கவர்னர் உரையில் இங்கே பெருமையாகக் கூறினீர்கள். சென்னை மாநகராட்சித் தேர்தலை நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள்; கேட்டிருப்பீர்கள்; டி.வி.யிலே பார்த்திருப்போம், ரேடியோவிலே கேட்டிருப்போம். சென்னை மாநகராட்சித் தேர்தலில் என்ன நடந்தது? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள் திரு. பன்னீர்செல்வம், இரண்டு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம் சொன்ன கருத்துகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இன்னும் இரண்டு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். சிதம்பரத்திலேயே இருங்கள். சென்னைக்கு வராதீர்கள், பேசுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 மார்ச் 13

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நீக்கப்பட்டுவிட்டது. அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நான் தவறான செய்தியைச் சொல்லவில்லையே மாநகராட்சித் தேர்தலிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பேப்பரிலே வந்திருக்கிறது; டி.வி.யிலே காட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேப்பரிலே வந்ததற்குப் பிறகு பேச முடியாது. நீங்கள் ஒழுங்காகப் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் தூங்கிக்கொண்டு இருந்தேன். இராத்திரி 12 மணிக்கு வந்து எழுப்புகிறீர்கள்; அரெஸ்ட் பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பன்னீர்செல்வம், இங்கே பார்த்துப் பேசுங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** என்ன இது? பேச விடுங்கள், இது என் கன்னிப் பேச்சு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்). இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அடுத்ததாக, இன்றையதினம், சட்டக்கல்லூரி மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே இருக்கிற சட்ட அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சட்டமன்றம் நடந்துக்கொண்டிருக்கிறது. இந்த வேளையில் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திய மாணவர்களை கடந்த 7-12-2001-ல் சட்டக்கல்லூரி விடுதியில் மாணவர்களைக் கடுமையாக, போலீஸ் அத்துமீறித் தாக்கினார்கள். அதைக் கண்டித்து உண்ணாவிரதம்; சிறையில் தள்ளப்பட்டார்கள். பொய் வழக்குப்



2002 மார்ச் 13] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

போட்டு, உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணையில், முன்னாள் டி.ஜி.பி. திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழு விசாரித்து, அது போலீஸ் அத்துமீறல் என்று அவர்கள் அறிக்கை கொடுத்துள்ளார்கள். அதேபோல தனி நபர் கமிஷன் இந்த ஆட்சியில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. திரு. அஹமது அலி அவர்கள் தலைமையில் மூன்று மாதத்திற்குள் அந்த அறிக்கை தர வேண்டும் என்று சொல்லி அறிவித்தார்கள். மூன்று மாதம் முடிந்து கிட்டத்தட்ட 2, 3 நாட்கள் ஆகின்றன. அஹமது அலி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் இறந்துபோனார்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எப்படியோ மூன்று மாதத்தில் கண்டுபிடிக்க வேண்டும் என்று அறிக்கை கொடுத்தீர்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறந்து போனவர் எப்படிக்கொடுக்க முடியும்?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இறந்த பிறகு தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், பரிதி சொல்லக்கூடிய கருத்தோடு முடித்துவிடுவோம். (குறுக்கீடு) அவர்தான் பேசிக்கொண்டு இருக்கிறாரே, அவரைச் சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். அதேபோல, மாணவர்களைத் தாக்கிய போலீஸ்காரர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, இடைக்கால நிவாரணம், அதாவது ஹைகோர்ட் நீதிபதி அவர்கள் அறிவித்த இடைக்கால நிவாரணத்தை வழங்கவேண்டும் என்று கோரியும் இங்கே மீண்டும் சாகும் வரை உண்ணாவிரதம் என்று கடந்த இரு தினங்களாக இருக்கிறார்கள். இன்றையதினம் சாலை மறியல் செய்து, 50 மாணவர்கள் இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியையும் டி.வி.-யிலே சொன்னார்கள். இந்த ஆட்சியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், சட்ட அமைச்சர் என்ன செய்கிறார், முதலமைச்சர் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) மாநகராட்சித் தேர்தலிலே,.... (கூச்சல்—குழப்பம்) மாணவர்களைக் கொடுமைப்படுத்துகின்ற ஆட்சியாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஓட்டுக் கேட்க விடமாட்டேன் என்கிறீர்கள்.

*பிற்பகல் 4-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ஓட்டுக்கேட்க விடமாட்டேன் என்கிறீர்கள். பொறுப்பான முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சொல்கிறார்கள். சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்தையும் தி.மு.க.வினர் அடித்து உடைத்தார்கள் என்று சொன்னால் போலீஸ்காரர்கள் எப்படிப் பிடிப்பார்கள்? (குறுக்கீடுகள்) இன்றைக்கு நான் கேட்கிறேன். பாலனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு (குறுக்கீடு) சேகர்பாபு, பேசலாம். (குறுக்கீடு) போதும், போதும்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** சார், ஒரேயொரு நிமிடம், நன்றி சொல்ல வேண்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, நீங்கள் உட்காருங்கள், அவர் நன்றி சொல்லி முடித்து விடட்டும்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எனக்கு என்ன சந்தேகம் என்றால், ஊரிலே பேசிக்கொள்கிறார்கள்—பாலனை அண்ணா தி.மு.க.-காரர்கள்தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வேண்டாம் உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய மனிதருள் மாணிக்கம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினை நல்கி இருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து'





காரணத்தைச் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், பத்திரிகைச் செய்தியில் பேட்டியிலே சொல்கின்றபோது, நான் பேரவைக்குச் சென்று உட்கார்ந்திருந்தால், எதிர் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் செய்யக்கூடிய கேலியையும், கிண்டலையும், அவர்களுடைய வசைமொழியையும் நான் கேட்க வேண்டுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குப் பயந்து தான் வராததுபோல்தான் அன்றைக்கு பத்திரிகைச் செய்தியிலே கொடுத்து இருந்தார்கள். அன்றைய தினம்கூட,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், பேராசிரியர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். உடல்நலம் கருதி அவர் வந்து அமர்வதில் சில சிரமங்களை ஏற்படுத்தும் என்ற வகையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்வதுதான் கண்ணியமானது.

*பிற்பகல் 5-30*

**திரு. ஆஸ்டின்:** இரண்டு தினங்களுக்கு முன்பு, ஆளுநர் உரைக்கு மறுதினம் பத்திரிகையிலே நான் ஒரு செய்தியைப் பார்த்தேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த ஆளுநர் உரையிலே புதுமை ஏதும் இல்லை என்று ஒரு செய்தியைக் கொடுத்திருந்தார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் அருளிய அந்த உரையிலே, தொலைநோக்குப் பார்வையோடு இந்த நாட்டை எதிர்காலத்திலே வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் செல்வதற்காக பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருப்பதை ஏன் அவரால் உணர முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக இன்றைக்கு இந்த அரசின்மீது மிகப் பெரிய ஒரு நிதிச் சுமை ஏற்றப்பட்டிருக்கின்றது. கஜானா காலி, களஞ்சியம் காலி என்ற நிலையையும் மீறி, கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறையோடு, தமிழகத்தை ஒரு நோயாளியாக்கி, கோமா நிலைக்குத் தள்ளி அப்படி கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழகத்தை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கடந்த ஆட்சி ஒப்படைத்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று கடந்த

ஆண்டிலே வழங்கப்பட்ட ஆளுநர் உரையும், அதைத் தொடர்ந்து வந்த பட்ஜெட்டும் கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட அந்த நோயாளியை கண்விழிக்கச் செய்ததை நாம் பார்த்தோம். தொடர்ந்து இந்த ஆண்டிலே மீண்டும் முதலமைச்சராக அம்மா அவர்கள் பொறுப்பேற்று இப்போது வழங்கியிருக்கிற இந்த ஆளுநர் உரையும், தொடர்ந்து வரவிருக்கிற பட்ஜெட்டின் மூலமாக கண்விழித்த அந்த நோயாளி எழுந்து உட்காரப் போவது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டில் இந்த அரசு அளிக்கக்கூடிய ஆளுநர் உரையையும், பட்ஜெட்டையும் தொடர்ந்து எழுந்து உட்காரக்கூடிய அந்த நோயாளி எழுந்து நிற்கக்கூடிய பலத்தைப் பெறப்போகின்றார். 2004 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் அளிக்கக்கூடிய ஆளுநர் உரையும், பட்ஜெட்டும் வந்தபிறகு எழுந்து நிற்கும் சக்தியைப் பெற்ற அந்த நோயாளி எழுந்து நடக்கக்கூடிய சக்தியைப் பெறப் போகின்றார். அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிலே வரக்கூடிய ஆளுநர் உரையையும், பட்ஜெட்டையும் தொடர்ந்து எழுந்து நடக்கும் சக்தியைப் பெற்ற அந்த நோயாளி பலத்துடன் ஓடக்கூடிய சக்தியைப் பெற இருக்கின்றார். இறுதியாக மக்களுடைய ஆதரவைப் பெற்று இன்று ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய இந்த அரசினுடைய இறுதி பட்ஜெட் வரக்கூடிய நேரத்திலே, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வரக்கூடிய அந்த ஆளுநர் உரையும், பட்ஜெட்டும், புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையிலே, நிர்வாகத் திறமையின் காரணமாக எழுந்து நின்று நடந்து செல்லக்கூடிய அந்த நோயாளி மிகப் பெரிய சக்தியைப் பெற்று, ஒரு விளையாட்டு வீரனைப் போல ஓடக்கூடிய சக்தியைப் பெற்று, இந்திய அரசியல் வரலாற்றிலே, இந்திய அரசியல் அரங்கிலே வளர்ச்சியடைந்த மாநிலம் எது என்ற அந்த ஓட்டப் பந்தயத்திலே தமிழகம் முதல் இடத்தைப் பெறப் போவது உறுதி என்பதற்கு அடையாளமாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரை இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசினுடைய பல்வேறு எண்ணங்கள் இந்த ஆளுநர் உரையிலே பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே மூன்றாவது பக்கத்திலே குறிப்பிட்டிருப்பதைப்போல, பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக மத்திய அரசு தேசியச் சட்டம் ஒன்றை இயற்றும் முயற்சிக்கு இவ்வரசு தனது முழு ஆதரவை அளிக்கும் எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலமாக வன்முறைக்கும், தீவிரவாதத்துக்கும் இங்கு இடம் இல்லை என்பது ஆணித்தரமாக எடுத்து





வைக்கப்பட்டிருக்கிறது. இதேபோலத்தான் 1991-லே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது அதற்கு முந்தைய ஆட்சியாளர்களால் தமிழகம் தீவிரவாதிகளினுடைய கூடாரமாக, வன்முறையாளர்களின் கூடாரமாக அன்றைக்கு மாற்றப்பட்டிருந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய உயிரையே பணயம் வைத்து, விடுதலைப் புலிகளை அடித்து விரட்டி, வன்முறைக் கும்பலை அடித்து விரட்டி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய சாதனையை அன்றைக்கு நிகழ்த்தினார்கள். அதைப் போன்று இப்போது இந்த ஆட்சிக் காலத்திலே தீவிரவாதம் தலைதூக்காதவாறு தமிழகத்தைப் பாதுகாத்து வருகின்றார்கள்.

அதைப்போல காவிரி நீர்ப் பிரச்சினை. காவிரி நீர்ப் பிரச்சினையிலே மத்திய அரசு நடுநிலையோடு நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதன் மூலமாக காவிரி நீர்ப் பிரச்சினையிலே இந்த அரசினுடைய ஸ்திரத் தன்மை, அரசினுடைய நிலை தெளிவாக இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. சில ஆட்சியாளர்களைப் போல மத்திய அரசுக்கு ஆமாம் சாமி போடாமல் 1991-96 ஆட்சிக் காலத்திலே இந்த காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக தமிழகத்து விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, அப்போது மத்தியிலே காங்கிரஸ் இயக்கம் ஆட்சியிலே இருந்த காலத்திலே, காங்கிரஸ் கட்சி தன்னுடைய தோழமைக் கட்சியாக இருந்தபோதிலும்கூட 1994-லே புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய விவசாயிகள் பாதிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, அன்றைக்கு தன்னுடைய உடலை வருத்தி, கடற்கரைச் சாலையிலே நான்கு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, அதைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் நேரடியாக இங்கே வருகை தந்து, இரண்டு குழுக்கள் அன்று அமைக்கப்பட்டு, அவர்களிடத்திலே பல்வேறு உறுதிமொழிகளைப் பெற்று, 1991-க்கு முன்பு காவிரி நீர்ப் பிரச்சினையிலே உயிரற்றுப் போயிருந்த நிலையை மாற்றி அன்றைக்கு உயிரூட்டியவர் புரட்சித் தலைவி என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிறபகல் 5-35*

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு காவிரி குறித்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அந்த உண்ணாவிரதத்திற்குப் பிறகு இரண்டு கமிட்டிகளைப்

[திரு. துரைமுருகன்] [2002 மார்ச் 13

பெற்றார்கள் என்று சொன்னார். அது என்ன கமிட்டி என்று தெரிவித்தால் போதும்.

**திரு. ஆஸ்டின்:** அந்த இரண்டு கமிட்டிகள் ஒன்று Monitoring Committee, இன்னொன்று Implementation Committee.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் கேட்டது வாஸ்தவம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டது வாஸ்தவம். ஆனால் அன்றைக்கு இருந்த மத்திய அரசு 2 கமிட்டிகளையும் போடவே இல்லை. கடைசி வரை பல கடிதங்களை இவர் திருப்பித் திருப்பி எழுதியதற்குப் பிறகும் அவர்கள் போடவே இல்லை என்பதுதான் உண்மை.

**திரு. ஆஸ்டின்:** நான் இதிலே குறிப்பிட வந்தது 1991-க்கு முன்பு உயிரற்றுப் போயிருந்த அந்தப் பிரச்சினைக்கு தன்னுடைய உடலை வருத்தி உண்ணாவிரதம் இருந்து உயிர் ஊட்டியவர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இதை இங்கே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை முதற்கண் 142 அடியாகவும், பின்னர் 152 அடியாகவும் உயர்த்த அனுமதி கோரி உச்ச நீதிமன்றத்திலே முறையீடு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவிலே தேர்தல் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற நல்ல திட்டங்களை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக மாற்றும் வகையிலே, 'அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு' அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான இவ்வரசினுடைய இலக்கை அடைவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு இந்த ஆளுநர் உரையிலே 15 அம்சத் திட்டத்தை வழங்கி இருக்கிறார்கள். தொடர் பசுமைப் புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடைப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு போன்ற 15 அம்சத் திட்டத்தை இந்த ஆளுநர்



2002 மார்ச் 13] [திரு. ஆஸ்டின்]

உரையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். இந்த 15 அம்சத் திட்டம் வரக்கூடிய 4 ஆண்டுகளிலே, 5 ஆண்டுகளிலே நிறைவேறுகிறபோது, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த அரசு நடைபோடுகிறபோது நிச்சயமாக 5-வது ஆண்டிலே, இந்தியாவிலேயே தமிழகம் முதல்தரமான மாநிலமாக, அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாறப் போவது உறுதி என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலுள்ள எந்த மாநில முதலமைச்சரின் சிந்தனையிலும் உதிக்காத இந்தத் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

அதைப்போல இன்னும் பல்வேறு திட்டங்களை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலத்தடி நீர்வளத்தை அதிகரிக்க முக்கியத்துவம், ஓசூரில் மலர்கள் ஏற்றுமதி வர்த்தக மண்டலம், தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், கால்நடை—எருமை வளர்ப்பதற்கு 93 கோடி ரூபாய் செலவிலே புதிய திட்டம், மீனள மேம்பாட்டு இயக்ககம் அமைத்தல், மழை நீரைச் சேகரிக்கும் பெரும் திட்டம், புதிய நீர்த் தேக்கங்கள், தடுப்பணைகள் கட்டுதல், ஏரிகளை ஆழப்படுத்துதல் அடங்கிய சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-2; 2,300 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கல், துப்புரவுத் திட்டம், சிறிய நீர்த் தேக்கங்களைத் தூர்வாரி ஆழப்படுத்திட வெளி நிதி உதவியுடன்கூடிய திட்டம், தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்திட மத்திய அரசை வலியுறுத்தல், புறநகர் மருத்துவமனைகளிலே அடிப்படை வசதிகளை மேம்படுத்திட சிறப்புக் கவனம், ஆயுர்வேதம், சித்தா, யுனானி போன்ற மாற்று மருத்துவ முறை மேம்பாட்டிலே தனியார் துறை பங்கேற்பை ஊக்குவித்தல், நகரப் பகுதிகளில் பாதாள சாக்கடைகள் அமைப்பதற்கு புதிய திட்டம். 500க்கு அதிகமான மக்கள் தொகை உள்ள ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள், பெண்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள், ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே மாவட்ட அளவிலே ஏற்றுமதி வழிகாட்டி பிரிவுகளை ஏற்படுத்துதல், 385 வட்டாரங்களிலே வேளாண் தொழிற் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்; உலக வர்த்தக அமைப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்; அனைவருக்கும் இலவச தொடக்கக் கல்வி என்ற இலக்கை அடையும் வகையிலே ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் பள்ளிகளே இல்லாத குடியிருப்புகளில் உள்ள

[திரு. ஆஸ்டின்] [2002 மார்ச் 13

குழந்தைகளுக்குக் கல்வி கற்க ஏதுவான திட்டம் ஏற்படுத்துதல்; இப்படிப் பல்வேறு திட்டங்களை நான் இங்கே குறிப்பிடலாம். காலம், நேரம் இல்லாத காரணத்தால் இதைப் போன்ற கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட திட்டங்களை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மூலமாக இந்த ஆண்டில் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

*2006* ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு எந்த ஒரு குடும்பமும் வறுமைக்கோட்டிற்கு கீழ் இல்லை என்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு இந்த ஆளுநர் உரை இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு அம்சங்களையும் கொண்ட கிட்டத்தட்ட இந்த அரசினுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிற, காவிரி நீர்ப் பிரச்சினையிலேயும், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையிலும் இந்த அரசினுடைய நிலைப்பாட்டை விளக்குகிற அளவிலும் எதிர்காலத்திலே கிட்டத்தட்ட 4 ஆண்டுகளிலே நிறைவேற்றக்கூடிய அளவிலே உள்ள *15* அம்சத் திட்டங்களை உள்ளடக்கிய 40-க்கும் மேற்பட்ட திட்டங்களை இந்த ஆண்டே செயல்படுத்துவதற்கான இந்த ஆளுநர் உரையைப் பார்த்துச் சில பேர், இதிலே புதுமை எதுவும் இல்லை என்று சொல்கிறார்கள். சில பேர் ஒன்றுமேயில்லை என்று பத்திரிகையிலே விளக்கம் கொடுக்கின்றார்கள். தன்னுடைய சட்டமன்ற அலுவலகத்தையே ஓராண்டு காலமாகத் திறக்காமல் பூட்டி வைத்துவிட்டு திடீரென்று ஒரு நாள் போய் அதைத் திறந்து வைத்துவிட்டு மறுநாள் அதை சேதப்படுத்தல் செய்துவிட்டு ** *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆஸ்டின் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) சரி பேசுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டமன்றத் தொகுதி அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு சம்பவத்திற்கு முதல் நாள்தான் திறந்து வைக்கப்பட்டது. அதனால் ஓராண்டு, அங்கே அவர் இருக்கக்கூடிய முறையில் அது இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** அமைச்சர் தொகுதியிலேயே சட்டமன்றத் தொகுதி அலுவலகம் கட்டுவதற்கு அவ்வளவு காலதாமதம் ஆகியிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்தைக் கட்டுவது அரசாங்கத்தினுடைய ஒரு துறைதானே தவிர தனிப்பட்ட கலைஞர் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், பேசி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** இதில் என்ன குறிப்பிட்டேன் என்று சொன்னால், நேற்று இந்த விவாதம் இந்த அவையிலே வந்தபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இதைப்போன்ற இழிவான நடவடிக்கைகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஈடுபடாது என்று சொன்னார்கள். அதற்கு ஒன்றை மட்டும் நான் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆஸ்டின் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் இதுபோன்று சொன்னபோது அப்படிப்பட்ட இழிவான காரியத்தில் தி.மு.க. ஈடுபடாது என்று நான் சொன்னேன். அவர்கள் நான் சொன்ன கருத்தை அந்த அளவில் அன்றைக்கு ஏற்றுக்கொண்டார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ இழிவான காரியத்தில் எப்போதோ ஈடுபட்டதாக அவருக்குத் தெரிந்தது போன்று கூறுகிறார். அவர் ஒருவேளை அப்போது அந்த இடத்திலே இருந்தாரோ என்னவோ? அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே இருந்தாரோ என்னவோ? நானாவது அங்கே படித்துக்கொண்டு இருந்தாரோ என்னவோ? நானாவது அங்கே படித்தவன். அந்தப் பல்கலைக்கழகத்திலே அந்த ஆண்டிலேகூட நான் போய்ப் பேசியிருக்கிறேன். ஆகவே, என்ன நடைபெற்றது என்பது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மார்ச் 13

எனக்குத் தெரியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய நிலையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறபோது அந்த நேரத்திலே மற்றவர்கள்மீது பாய வேண்டிய அவசியமில்லை என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ். *(குறுக்கீடு)* முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)* சரி, பேசுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** நான் குறிப்பிட்டது என்னவென்று சொன்னால், ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின் முடியுங்கள். நன்றி சொல்லி முடிப்பதாக இருந்தால் முடியுங்கள். *(குறுக்கீடு)* சாமி உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். அவர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எதற்காக இவ்வளவு பேர் எழுந்திருக்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* அவர் நன்றி சொல்லி முடிக்கப் போகிறார். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். ஆஸ்டின் நன்றி சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஆஸ்டின்:** தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமாக இரண்டு பிரச்சினைகளை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியிலே...... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடிக்கிறார். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. ஆஸ்டின்:** இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல பாதாள சாக்கடை திட்டம்...... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் நீக்கப்பட வேண்டிய கருத்து என்ன என்பதைக் கேட்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** சற்றுமுன் மாண்புமிகு உறுப்பினர் அந்த அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே நடந்ததைப் பற்றி இங்கே பேசி, யாரோ. . . . *(குறுக்கீடுகள்)* ரெக்கார்டில் இருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மார்ச் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி வந்திருந்தால் அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. உங்களுடைய தொகுதியைப் பற்றி பேசுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** என்னுடைய தொகுதியான நாகர்கோவில் தொகுதியானது அந்த மாவட்டத்தினுடைய தலைநகரான தொகுதி. இங்கே ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்காகக் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பே அங்கே திட்டம் தயாரிக்கப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், இதுநாள் வரை நடைபெறாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த பாதாள சாக்கடைத் திட்டத்திலே நாகர்கோவில் நகரப் பகுதியையும் சேர்த்து இந்தத் திட்டத்தினை இந்த தொகுதிக்கு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-45*

என்னுடைய தொகுதியிலே உள்ள கிராமப் பகுதிகள் அத்தனையுமே கடற்கரையோர கிராமங்களாக இருக்கின்றன. எனவே, கிராமங்களிலே அந்தப் பகுதிகளிலே, நிலத்தடி நீர் எல்லாம் உப்பு நீராக மாறிக் கொண்டிருக்கிறது. பல இடங்களிலே அங்கே பொது மக்களுக்கு குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலை உருவாகி வருகின்றது. எனவே, இதைத் தீர்க்கும்பொருட்டு அந்தப் பகுதிகளிலே உள்ள குளங்களையும், ஏரிகளையும், ஆழப்படுத்தும் வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அங்கே அத்திக்கடை, சம்பக்குளம் என்ற இரண்டு கால்வாய்கள் செல்கின்றன. அந்தக் கால்வாய்களை முழுமையாகத் தூர் எடுத்து, சுத்தப்படுத்தி, கடைவரம்பு வரையில் தண்ணீர் செல்லக்கூடிய அளவிலே மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை குமரி மாவட்டத்திலே அரசு கலைக் கல்லூரி இல்லை. எத்தனையோ பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் அங்கே இருந்தாலும்கூட, மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரியில் சேரவேண்டுமென்று சொன்னால், கல்லூரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றன. எனவே, கலைக் கல்லூரி இல்லாத மாவட்டம் என்ற அளவிலே இருப்பதால் அடுத்த ஆண்டிலாவது அங்கே ஒரு புதிய அரசு கலைக் கல்லூரியைத்

தொடங்கவேண்டும். ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலே அடிக்கல் ஒன்றை நாட்டிவிட்டு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கிவிட்டோம் என்று சொன்ன நிலையை நீங்கள் மாற்றி, இந்த ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒரு கருத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முந்தைய ஆட்சிக் காலத்திலே இந்த அவையிலே ஒரு சம்பவம் நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதுப் பிரச்சினைகள் எதுவும் வேண்டாம். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** நான் ஒரு விளக்கத்தை மட்டும் சொல்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நடந்ததைச் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னும் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அன்றைக்கு அமரர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த, சிவராஜன், தணு ஆகியோருடன் சேர்ந்து இருப்பது போன்ற படத்தைக் காட்டி, அந்தப் படத்தின் மூலம் புரட்சித் தலைவி அவர்கள் மீது கொலைப் பழி சுமத்தி, அன்றைக்கு ஒரு செய்தியை இங்கே நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைகள் எல்லாம் முடிந்துவிட்டன. இவையெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்ட கருத்துகள், முடிந்துவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் இரவிராஜ். ஆஸ்டின் உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், எவ்வளவு நேரம் பேசிவிட்டீர்கள். போதும், போதும், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற ஆளுநர் உரை என்பது தொலைநோக்குப் பார்வையுடன், இந்த மாநிலத்தை எதிர்காலத்திலே, இந்தியாவிலே முதல் தரமான மாநிலமாக மாற்றக்கூடிய அளவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை வீழ்த்த நினைத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு வேரறுந்து போனார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மன உறுதியினை, தன்னம்பிக்கையினை, தைரியத்தினை, துணிச்சலைக் கண்டு, இன்றைக்கு அகில உலகமே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாராட்டிக் கொண்டிருக்கிறது. இனி நீங்கள் படைக்கப்போகின்ற, புதிய சரித்திரங்களை, புதிய சாதனைகளை, வெற்றிகளை, எந்தக்



கொம்பனாலும், எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இலட்சியக் கனவு; மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு சபதம் ஏற்று அமர்ந்திருக்கிறார்கள். ஒரு இலட்சியத்தோடு இன்றைக்கு அமர்ந்து இருக்கின்றார்கள். விரைவிலே தமிழகம் இந்தியாவிலே முதல் தரமான மாநிலமாக மாறப்போகின்ற அந்த இலட்சியம் நிறைவேறக்கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை. அதற்கு அடித்தளமாகத்தான் இன்றைக்கு இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அந்த இலட்சியம் நிறைவேறுகின்ற காலகட்டத்திலே தமிழகம் முதல் தரமான மாநிலமாக மட்டுமல்ல. இந்தியாவிலுள்ள அத்தனை மாநிலங்களிலும் முதல் தரமான முதலமைச்சராக, அத்தனை பேருக்கும் வழிகாட்டியாக, நம்முடைய முதலமைச்சர், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பெயர் எடுப்பார்கள், புகழ் பெறுவார்கள் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் வழங்கிய உரையினை வரவேற்று, வாழ்த்தி, பாராட்டி, உரை நிகழ்த்திய ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

• **திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்று வருகின்ற விவாதத்தில் கலந்துகொள்ள பாட்டாளி மக்கள் கட்சியினுடைய உறுப்பினராகிய என்னை அழைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்கள், சட்டசபையிலே ஆளும் கட்சி கொண்டு வரக்கூடிய, பொது மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரக்கூடிய திட்டங்களை ஏற்றுக்கொள்வதோடு மட்டும் இல்லாமல், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் சுட்டிக்காட்டி, மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்று பணித்தமையை மனதிலேகொண்டு என்னுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே 15 அம்ச திட்டங்களான தொடர் பசுமைப் புரட்சி, உணவுப் பாதுகாப்பு, கால்நடைப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு போன்ற பல

திட்டங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. அரசின் திட்டங்கள் முழுமையாக உரிய மக்களைச் சென்று அடைவதில்லை. உரிய பயனாளிகள் அரசின் திட்டங்களின், சலுகைகளைப் பெற முடிவதில்லை. இந்த நிலைமை மாறவேண்டும். எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களே அரசின் திட்டங்களை, சலுகைகளை அபகரித்துக்கொள்ளும் நிலைமை மாறவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் செல்வாக்கு இல்லாத அப்பாவி ஏழை எளிய அடித்தட்டு மக்களையும் அரசின் திட்டங்கள் சென்றடையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அரசு அறிவிக்கின்ற திட்டங்கள் அனைத்தும் படிப்படியாக நடைமுறைக்கு வரவேண்டும்.

*பிற்பகல் 5-50*

கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரிலே ஆளுநர் உரையிலே வீட்டுமனை ஒதுக்கீடு விரைவுத் திட்டம் பற்றிச் சொல்லப்பட்டது. ஆனால், அது முற்றிலுமாக நடைமுறைக்கு வரவில்லை. திருவள்ளூர் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் பல கிராம மக்கள், ஏழை மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பித்தும் பயன் இல்லை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் மிட்டக்கண்டிகை அருந்ததியர் காலனி, வலசைவெட்டி கிராமத்தில் இருளர் காலனி, சிட்ரம்பாக்கம் பழங்குடியினர் பகுதி, புதிய இருளஞ்சேரி காலனி, நரசிங்காபுரம் கொட்டையூர் காலனி, பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகர், கடம்பத்தூர் ராஜாஜி சாலை, வீராரகவபுரம் அருந்ததியர் காலனி, பொன்பாடி பள்ளர் காலனி, பூனிமாங்காடு சந்தியா நகர், ஆற்காடு குப்பம் பம்படா காலனி, ஆற்காடு குப்பம் திடீர் நகர், காவேரிராஜபுரம் காலனி, நல்லாத்தூர் முத்தரையர் காலனி, கூவம் சிறிய காலனி, பூனார் கண்டிகை, மும்முடிகுப்பம் காலனி, கார்த்திகேயபுரம் சரஸ்வதி நகர், விடையூர் மணல்மேட்டுத் தெரு இப்படிப் பல கிராமங்களில் மக்கள் எல்லாம், பட்டா கேட்டும், பட்டாவிற்கு மனு செய்தும் அங்கே நடைமுறைபடுத்தப்படவில்லை. அந்த மக்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. மேற்குறிப்பிட்டுள்ள கிராமங்களிலே பாதி பேர் அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலங்களிலே 20, 30 ஆண்டுகாலமாகக் குடியிருந்து வரக்கூடியவர்கள். அரசினுடைய நிதிச் சுமை இல்லாமல், குடியிருக்கக்கூடிய அந்த மக்களுக்குப் பட்டா கிடைப்பதற்குக்கூட அங்கே தடையாக இருந்துகொண்டிருக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்டுகிறேன்.





பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசன வசதி மற்றும் மக்களின் குடிநீர் வசதி ஆகிய தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ப நிலத்தடி நீர் அளவை உயர்த்துவதற்கு புதிய தடுப்பணைகள் கட்டப்படும் என்று ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வருகின்றபோது எங்களுடைய திருத்தணி தொகுதியிலே அருங்குளம் ஆற்றிலே தடுப்பணை ஒன்று இந்த நிதியாண்டிலேயே கட்டப்பட வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றாட நிர்வாகத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது என்று ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மத்தியிலே தமிழ் மொழி தேசிய மொழி ஆக்கப்பட வேண்டும் என ஆசைப்பட்டு கோரிக்கைகள் வலுத்து வருகின்ற இந்த நேரத்திலே இங்கே தமிழகத்திலே நாம் பேசும் மொழியை ஆட்சிமொழியாக ஆக்கத் தயங்குவது ஏன் என்கின்ற என்னுடைய ஆதங்கத்தை நான் சொல்லி, தமிழகத்திலே நாம் பேசிக் கொண்டிருக்கின்ற தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிச் சுமை அதிகம் உள்ளது என்று சொல்லி காரணம் காட்டி ஏழை பாட்டாளி மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையிலே அரிசி விலையேற்றம், பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலையேற்றம், மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் பல்வேறு விலை உயர்வுகளைச் செய்துள்ளது உழைக்கும் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. எனவே, இந்த விலை உயர்வுகளைத் திரும்பப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-55*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முதல் 5 ஆம் வகுப்பிலிருந்து அரசுத் தேர்வு என்று அறிவித்து, பிறகு அடுத்த ஆண்டு முதல் அமலுக்கு வரும் என அரசு அறிவித்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இதனால் பாதிக்கப்படுவார்கள். 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற முடியவில்லை என்று படிப்பைப் பாதியிலே விட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிடும் மாணவர்களைப் போல, 5 ஆம் வகுப்போடு மாணவர்கள் வீட்டுக்கு

வந்துவிட வேண்டுமென இந்த அரசு கருதுகிறதா எனக் கேட்க விரும்புகிறேன். எனவே, அடுத்த ஆண்டுகூட நிச்சயமாக 5 ஆம் வகுப்பிலே இருந்து அரசு தேர்வு முறை என்பதை நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டிலிருந்து திருச்சி வரையிலே சாலை விபத்துகள் அதிக அளவிலே நடைபெறுகின்றன. ஒவ்வொரு விபத்திலும் சிக்கி மக்கள் 10 பேர், 20 பேர் ஒரே நேரத்தில் சாகின்ற கொடுமை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. சாலை நடுவில் தடுப்புச் சுவர் அமைத்து இருவழிப் பாதையாகப் போக்குவரத்தை முறைப்படுத்த வேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு திருத்தணி தொகுதியில் பல கிராமங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருந்தது. குறிப்பாக திருத்தணி பேரூராட்சியில் இருந்த கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அதிகாரிகள் தவறிவிட்டதால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளானார்கள். அந்த நிலைமை இந்த ஆண்டு வராமல் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வாடகை வீடுகளில் குடியிருக்கும் ஏழைகள், நடுத்தர மக்கள் ஒரு சிறிய இடம்கூட வாங்க முடியாத அளவுக்கு ரியல் எஸ்டேட் தொழில் முடங்கிப்போய் இருக்கிறது. இதிலே அரசு கவனம் செலுத்தி, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் கொடுத்த கரும்புக்குப் பணம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் கடந்த மாதத்தில் அரவை மில்லை நவீனபடுத்துகிறோம் என்று சொல்லி கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய்க்கு அங்கே முறைகேடு நடந்திருக்கிறது. அந்தப் பணத்திலே பாதியைக் கொடுத்திருந்தாலே அந்த விவசாயிகளுடைய துயர் துடைக்கப்பட்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.





அதேபோல, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில் சரவணப்பொய்கைத் திருக்குளத்தைத் தூர்வாரி சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இதனால் சகதியில் சிக்கி பல பக்தர்கள் உயிரிழக்கிறார்கள். சமீபத்தில் சென்னை. பெரம்பூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்திருக்கிறார். எனவே, உடனே குளத்தைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தணி திருக்கோயில் பாண்டிச்சேரி, ஆந்திரம், கேரளம் போன்ற பல மாநிலங்களிலிருந்து மக்கள் அதிக அளவில் வரக்கூடிய ஒரு சுற்றுலாத் தலமாகவும், திருக்கோயிலாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. திருத்தணி மலை மீதிருந்து சித்தூர் சாலையை இணைக்க ஒரு பாதை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகள் முயற்சித்தபோது அங்கே உள்ள வனத் துறையினர் அதைத் தடுத்திருக்கிறார்கள். அது வீணாகக் கிடக்கக்கூடிய தரிசு இடம். எனவே, மக்கள் பயனடையக்கூடிய வகையிலே, திருத்தணி பேரூராட்சியிலே கூட்ட நெரிசலைக் குறைக்கின்ற வகையிலே, மாற்றுப் பாதை உருவாக்க சம்பந்தப்பட்ட வனத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை அரசுக்கு வழங்கி மாற்றுப் பாதை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராகியிருக்கிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் என்னுடைய தொகுதியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 6-00*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாலே கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளிலேயும், பொறியியல்

கல்லூரிகளிலேயும் 15 சதவீத இட ஒதுக்கீடு அளித்து உத்தரவிட்டிருந்ததை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 சதவீதமாக உயர்த்தி ஒதுக்கி உத்தரவிட்டிருந்தார்கள். அந்த உத்தரவு உயர் நீதிமன்றத்தாலே இரத்து செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்து கிராமப்புற மாணவர்கள் பயனடைகிற வகையிலே மீண்டும் அந்த இட ஒதுக்கீட்டினைப் பெறவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயுள்ள கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் என்கிற ஊர்களிலேயிருந்து 2 விசைப் படகுகளில் 7 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்தி, துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவர்களைக் கைது செய்து இலங்கைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர்களை மீட்டுத் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம் ஆகிய இரண்டு ஊர்களிலுமாக 7 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள் என்ற தகவல் இங்கேயுள்ள என்னுடைய துறைச் செயலாளர் அவர்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்தத் தகவலைக் கூறி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருக்கு ஃபேக்ஸ் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் இலங்கையிலே இருக்கின்ற High Commission Office-உடன் தொடர்புகொண்டு அங்கிருக்கின்ற 7 பேரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலேயிருக்கின்ற மீன் வளத்





துறையினுடைய உதவி இயக்குநர் மூலமாக இந்தத் தகவலைச் சொல்லி இருக்கின்றார்கள் என்ற தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியிலுள்ள மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்தியிருக்கிறீர்கள். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லை. இந்த உரையிலேகூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியினைப் பகிர்ந்தளிக்கிற அளவுக்கு சட்டம் இயற்றப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மூன்றடுக்கு முறையில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றதே தவிர, உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற பிரதிநிதிகளுக்கு, ஊராட்சி மன்றத் தலைவருக்கு, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கு, மாவட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி இருக்கிறது என்று சொன்னால், அந்த ஒரு இலட்சம் ரூபாய் நிதியைக்கூட அந்த ஊராட்சி மன்றத் தலைவர் தன்னிச்சையாக, எது தேவையோ அதற்குச் செலவு செய்ய முடியாத அளவுக்கு, இந்தக் காரியத்தைத்தான் செய்ய வேண்டும்; பாலத்தைத்தான் கட்ட வேண்டும் என்றெல்லாம் ஒரு குறிப்பிட்ட வரைமுறையில் செலவழித்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுவது, உள்ளாட்சி அமைப்புகளினுடைய அதிகாரத்திலே தலையிடுவதாகும். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் தரத்தக்க வகையிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே பேசி பெற்றுத் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, 82 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறீர்கள். அதிலேயும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்; இன்னின்ன காரியங்களுக்குத்தான் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். இதை எதற்காகத்

[திரு. ப. அரசன்] [2002 மார்ச் 13

தரவேண்டும்? நீங்களே செலவு செய்துகொள்ள வேண்டியதுதானே? 82 இலட்சம் ரூபாயை எங்களுக்குத் தந்து, நாங்கள் என்ன காரியத்திற்காகச் செலவு செய்ய வேண்டும் என்பதை நீங்கள் சொல்வீர்கள் என்று சொன்னால், அந்த நிதியை நீங்களே வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டியது தானே? ஏன் எங்களிடத்திலே தருகிறீர்கள்? ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி எங்களாலே பயன்படுத்தப்பட வேண்டும். எங்கள் தொகுதியிலே என்ன அவசரத் தேவை வரும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த விதியைத் தயவுசெய்து மாற்ற வேண்டுமென பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

காலையிலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நெல் கொள்முதல் சரியாக நடைபெறுகிறது என்று சொன்னார்கள். நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; என்னுடைய தொகுதியிலே பிப்ரவரி 15-ஆம் தேதி, 20-ஆம் தேதிக்குப் பிறகுதான் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அதுவும் நான் மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே பலமுறை எடுத்துச் சொல்லி, சென்னையிலே இருக்கிற அதிகாரிகளோடு பலமுறை பேசியதற்குப் பின்னாலேதான் தொடங்கினார்கள். ஒன்றை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 70,000 ரூபாயை ஒரு நாளைக்கு ஒரு மையத்திற்குத் தருகிறார்கள். ஒரு மையத்திலே இருவர் பணிபுரிகிறார்கள். ஒரு ஹெல்ப்பர், ஒரு பி.சி; இருவர் பணிபுரிகிறார்கள். அவர்களாலே ஒரு நாளைக்குக் குறைந்தது 200 மூட்டைகள் கொள்முதல் செய்ய முடியும். இந்த 70,000 ரூபாயை வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு இந்த அரசாங்கம் அளித்திருக்கிற நிதியிலிருந்து 150 மூட்டைகள்தான் கொள்முதல் செய்ய முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னதுபோல, எங்களுடைய பகுதியிலே, சாலைகளிலே எல்லாம் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. முறையாகப் பணம் அளிக்கப்படாத காரணத்தினால், நிதி ஒதுக்கப்படாத காரணத்தினால், நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படவில்லை. ஏற்கெனவே, பெரிய மழையினாலே பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிற கொள்முதல் திட்டத்தின் காரணமாக மீண்டும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை



2002 மார்ச் 13] [திரு. ப. அரசன்]

அமைச்சர் அவர்கள் கனிவோடு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு கொள்முதல் நிலையத்திலே ஏறத்தாழ 500 மூட்டைகளாவது கொள்முதல் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூற்றுவதைப் பற்றிச் சொன்னார்கள். அது ஒரு கொடுமை. ஏற்கெனவே, மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கொள்முதல் நிலையத்திற்கு நெல்லைக் கொண்டு வருகிறபோது கிரஷர் என்கிற ஒரு நெல் தூற்றும் மெஷினை வைத்துக்கொண்டு அதற்கு 10 ரூபாய் வாங்குகிறார்கள். 70 கிலோ தூற்றுவதற்கு கொண்டுவந்தால், விவசாயிகளிடம் 10 ரூபாய் வாங்கிக் கொள்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தால் நேரிடையாக அதைப் பார்க்கலாம். ஒவ்வொரு மையத்திலேயும் நெல்லைத் தூற்றுகிறேன் என்று சொல்லிக்கொண்டு வைத்திருக்கிறார்கள். தயவுசெய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி அவற்றையெல்லாம் களைய வேண்டும் என நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஆவுடையார்கோவில் தாலுகா மிகவும் பிற்படுத்தப்பட்ட தாலுகா என்பதை இந்த நேரத்திலே இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே மின்சாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த மின் அழுத்தம் இருக்கிறது. ஆகையினாலே, மாணவர்களாலே படிக்க முடியவில்லை. மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே 2 துணை மின் நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவார்கள். ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்திலே சில பகுதிகள் பயன்பெறுகிற வகையிலே ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தீட்டி, அதற்குப் பின்னாலே எங்கள் பகுதியிலே இருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் குடிநீர் கொண்டு செல்கிற அளவிற்கு ஒரு திட்டத்தை தீட்டி இருக்கிறார்கள். நான் பணிவன்போடு ஒன்றை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்; இராமநாதபுரம் Bulk Water Supply என்கிற அந்தக் குடிநீர்த் திட்டத்திலே திருமயம் வரைக்கும் தண்ணீர் வருகிறது. திருமயத்திலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தொகுதி அரிமளம்

ஒன்றியத்திற்கு வந்து, பிறகு ஆவுடையார்கோவில் மணமேல்குடி ஒன்றியங்களுக்கும் குடிநீர் தர வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே சிறப்புமிக்க ஆவுடையார்கோவில் என்கிற புனித ஸ்தலம் இருக்கிறது. அந்தக் காலத்திலே ஸ்தபதிகள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** 5 நிமிடம் கொடுங்கள். ஸ்தபதிகள் கோயிலைக் கட்டுகிற நேரத்திலே என்ன சொல்வார்கள் என்றால், ஆவுடையார்கோவிலுக்கு நிகராகக் கட்டித் தருவோம் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு சிற்பக் கலையிலே புகழ்பெற்ற ஸ்தலம் ஆவுடையார்கோயில். அதைச் சுற்றுலாத் ஸ்தலமாக ஆக்கித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய அறந்தாங்கி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அந்தத் தொகுதியிலே மகளிர் படிப்பதற்கு புதுக்கோட்டை செல்ல வேண்டிய ஒரு சிரமமான நிலை இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய தொகுதியிலே ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்கித் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரு தனியார் சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்தச் சர்க்கரை ஆலை உருவானதனாலே எங்களுடைய பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பொருளாதாரத்திலே மிகவும் வளர்ந்து கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த சர்க்கரை ஆலைக்கு வருகிற சாலை வசதிகள் குறைவாக இருக்கின்றன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்த தனியார் சர்க்கரை ஆலைக்கு சிறந்த சாலை வசதிகள் செய்து தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

அதைப்போல என்னுடைய நகராட்சி 3-ஆம் நிலை நகராட்சி, அறந்தாங்கி நகராட்சி. அந்த நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை திட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகமான பகுதி மழை நீரை, ஏரிகளை நம்பி விவசாயம் செய்கிற பகுதியாகும். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுடைய பாசன வசதியைப் பெருக்குகிற வகையிலே, மக்களுடைய பொருளாதார வளத்தை அதிகப்படுத்தக்கூடிய வகையிலே எங்களுடைய தொகுதியிலே இருக்கிற ஏரிகளைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, மதகுகளைச் சரி செய்து, அதைப்போல சருக்கைகளைச் சரி செய்து, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையிலே நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கொள்ளிடம் உபரி நீரைத் தருகின்ற ஒரு திட்டம் இருக்கிறது. ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது, அன்றைக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொண்டைமான் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொல்லி, அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். ஏறத்தாழ 100 டி.எம்.சி. தண்ணீர், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலே அந்தத் தண்ணீர் கொள்ளிடத்திலே திருப்பிவிடப்பட்டு, கடலிலே வீணாகச் சென்று கலக்கிறது. அந்த நீரை எங்கள் மாவட்ட பாசன வசதிக்காகத் திருப்புவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தினை தீட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நேற்றிலிருந்து பல உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துவது குறித்து சரியான ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கோரி, அவர்கள் விருப்பத்திற்கேற்ப அதைச் செலவழிப்பதற்காக ஓர் ஆணை கேட்டார்கள்.

[2002 மார்ச் 13

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** M.L.A. Fund என்பது Public Money, Pocket Money அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** நான்கூட முதலமைச்சரிடத்தில் கேட்டேன். என்னுடைய தொகுதியில் ஹாஸ்டல் கட்ட வேண்டிய வேலையில்லை. பி.சி. ஹாஸ்டல், எஸ்.சி. ஹாஸ்டல் இல்லை. ஆகவே, அந்தப் பணத்தின்மூலம் Bore போட்டுக் கொள்வதற்காக, 125 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக நான் ஒரு மனுவை கொடுத்து அந்த மனு கலெக்டரிலேயிருந்து ரொட்டேஷனிலேயே இருந்து கொண்டிருக்கிறது. இங்கே அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு அமைச்சர்கள் இருந்தும்கூட பல உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலே வராமல் இருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்தத் தொகுதி பணம் பாதிகூட வரவில்லை என்று சொல்கிறார்கள். Administrative sanction கூடக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக ஒன்றை அறிந்துகொள்ள விரும்புகிறேன். இங்கு இருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்களோ அல்லது முன்னாள் முதல்வர் அவர்களோ நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய அந்தக் கடிதங்களுக்கு, அந்தக் கோரிக்கைகளுக்கு ஏதாவது பதிலைத் தந்து, அந்தப் பணம் உடனடியாகச் செலவிடப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்ந்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கடைசியாக பேசிய உறுப்பினர் அவர்கள் கிராமப்புற மாணவர்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு என்ற ஆணையானது உயர் நீதிமன்றத்தினாலே தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு நாம் செல்லப் போகிறோமா இல்லையா என்பதை நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2002 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு, அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எம். பாலன்.

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சாதாரணத் தொண்டனான என்னை லால்குடி தொகுதியிலிருந்து இப் பேரவைக்கு, 22 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற வைத்து, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி, நன்றி, நன்றி என்று நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன். தேர்தல் நேரத்திலே எனது தொகுதி மக்களைப் பொருளாதாரத்தைக் காட்டியும், அமைச்சர் என்ற அந்தஸ்தைக் காட்டியும் விலைக்கு வாங்கிவிடலாம் என்று எண்ணியவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடையாளம் காட்டிய இந்த ஏழைத் தொண்டனை வெற்றி பெற வைத்த என் தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-15

ச்தித் திட்டம் தீட்டி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அழித்து விடலாம் என்ற எண்ணம் கொண்டவர்களின் சதி வலையை அறுத்து எறிந்துவிட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வெற்றிபெற வைத்து, இன்றைக்கு அரியணையிலே ஏற்றி இருக்கும் ஆண்டிப்பட்டி தொகுதி மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கின்ற திட்டங்களெல்லாம் தமிழகத்தை இந்திய துணைக் கண்டத்திலே முன்மாதிரி மாநிலமாக மாற்ற உறுதி கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இன்றையதினம் தமிழகமே

பாராட்டுகிற நிலைமையை உருவாக்கியிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் பெய்த மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்க்கையிலே வசந்தத்தை உருவாக்கும் வகையில் ரூ.49 கோடியை இவ்வரசு வழங்கி, விவசாயிகளின் துயரைத் துடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்டை மாநிலங்களில் நிலவும் வன்முறையைப்போல் இல்லாமல், தமிழகத்தை எக்காலத்திற்கும் பொருந்தும் அமைதிப் பூங்காவாக வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எனது தொகுதியிலே 7 ½ ஆண்டுகளாகப் பொறுப்பிலே இருந்தவர்களை, தனது சொந்த கிராமத்தில் மக்களிடம் வாக்குகளை வாங்க முடியாமல் கள்ள வாக்குகளை இட்டு என்னைத் தோற்கடித்து விடலாம் என்று நினைத்தவர்களைத் தோற்கடித்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியால் இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கின்றேன்.

கொப்பரைத் தேங்காய் ஊழலில் ஈடுபட்டவர்களும், வேகன் மூலமாக அரிசி கடத்தியவர்களும் என் தொகுதியில் இருந்தவர்கள்தான், இன்றைக்கு புத்தர் வேஷம் போடுகின்றார்கள்; புனிதர் வேஷம் போடுகின்றார்கள். அம்மா அவர்கள் இவர்களின் முகத்திரையைக் கிழித்து, இவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்களும் பழிவாங்கப்பட்டவர்களும் குமுறுகிறார்கள். திருச்சி மாவட்டமே குமுறிக் கொண்டிருக்கிறது. நடவடிக்கை எப்போது என்று திருச்சி மாவட்டமே ஏங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது என் தொகுதியிலே இருந்தவர்கள் நெஞ்சுக் கறி கேட்டு அதிகாரிகளை மிரட்டிய கொடுமையெல்லாம் நடந்திருக்கிறது இந்த நாட்டிலே. இந்தக் காரியத்தைச் செய்தவர்கள் என் தொகுதியிலேதான் இருந்தார்கள். அவர்கள்மீது உடனே நடவடிக்கை எடுத்து தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1989-ல் வானம் எப்போது பொழியும்; எப்போது இந்த கல்லாங்காடு பூமி விளையும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள்





கணக்கில்லா கோடிகளைச் சம்பாதித்துவிட்டு, அவர்கள் குடும்பத்தோடு வெளிநாடுகளுக்கு காலையும் மாலையும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணமெல்லாம் எங்கிருந்து வந்தது? லால்குடி தொகுதியிலே 300, 400 ஏக்கர்களை வளைத்துப்போட்டு இருக்கின்றார்கள். இன்றைக்கு அங்கே புத்தராக வேஷம் போட்டு, காரிலே பவனி வந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய பேச்சு கன்னிப்பேச்சு, யாரும் குறுக்கிட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. உறுப்பினருடைய பேச்சு கன்னிப் பேச்சு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசும்போதே சொல்லிவிட்டார், இது என்னுடைய கன்னிப் பேச்சு என்று. மூத்த உறுப்பினர்கள் தயவுசெய்து குறுக்கிட வேண்டாம் என்று தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. எஸ்.எம். பாலன்:** திருச்சி மாவட்டத்தையே மிரட்டி, 4000 கோடிக் கணக்கிலே சம்பாதித்தவர்களை என்றைக்கு உள்ளே தள்ளப் போகிறார்கள் என்று என்னுடைய மாவட்டமே ஏங்கிக் கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வயலிலே வேலை செய்தவர்களைக் கூப்பிட்டு, வணக்கம் வைக்கவில்லை என்று அறைந்தார்கள். அப்படி அறையப்பட்டவர்களெல்லாம் இன்றைக்கு ஏங்குகின்றார்கள். என்னுடைய தொகுதியிலே ஏரியை வளைத்துப் போட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு பணம் சரியான நேரத்திலே சென்ற ஆட்சியாளர்கள் வழங்கவில்லை என்று அங்கு விவசாயிகள் ரோட்டில் போகும்போது கேட்கும்போது அவரைக் கூப்பிட்டு இரண்டு அறை கொடுத்த காட்சியெல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தது. இவர்களுக்கெல்லாம் எப்போது தண்டனை என்று என் தொகுதி மக்கள் ஏங்குகின்றார்கள். அம்மாவிடம் சொல்லுங்கள் என்று என்னிடத்திலே அடிக்கடி சொல்கிறார்கள். அம்மா அவர்கள்

[திரு. எஸ்.எம். பாலன்] [2002 மார்ச் 13

உடனே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி காவிரி டெல்டா பகுதிகள் அடங்கிய தொகுதியாகும். ஆனால், என்னுடைய தொகுதியில் முழுக்க விவசாயத்தை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் இருக்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலே வாய்க்காலையும் ஏரிகளையும் தூர்வாராததால் பாசன வசதி இல்லாத காரணத்தினாலே விவசாயம் சரியாக நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே, அங்கேயுள்ள வாய்க்காலை ஏரிகளைத் தூர்வாரி, அங்கேயுள்ள மக்களைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 6-20

பெண்களின் வாழ்க்கையில் அக்கறை கொள்ளும் மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்களுக்கு, திருச்சி புறநகர் மாவட்டத்திற்கென்று மகளிர் காவல் நிலையத்தினை லால்குடியிலே அமைத்துக் கொடுத்திருப்பதற்காக எனது தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கரையூருக்கும், பூண்டிக்கும் கொள்ளிடத்திலே பாலம் அமைத்துத் தருகிறேன் என்று பத்திரிகைகளிலே அறிக்கை விட்டு வலம் வந்தவர்கள் இன்றைக்கு அந்த அறிக்கையோடு சென்று விட்டார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தப் பேரவையின் ஆண்டறிக்கையிலே, செங்கரையூருக்கும், பூண்டிக்கும் இடையிலேயுள்ள அந்தப் பாலம் அரசின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர், ஜெயங்கொண்டம், சிதம்பரம் போன்ற ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகள் லால்குடி வழியாகச் செல்லும்போது, போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகையால், லால்குடிக்கு ஒரு பை-பாஸ் ரோடு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டத்தூர் கிராமத்திலே புராதனச் சிறப்புமிக்க சிவன் கோவில் ஒன்று உள்ளது. அம்மா அவர்கள் நமது ஆட்சியிலே அந்தக்



2002 மார்ச் 13] [திரு. எஸ்.எம். பாலன்]

கோயிலுக்குக் கும்பாபிஷேகத்தை நடத்தவேண்டுமென்று இந்த மன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

லால்குடி தொகுதி என்பது முழுக்க, முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிறது. ஏதாவது ஒரு தொழிற்சாலையை அங்கே எங்களுக்கு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் புள்ளம்பாடி ஒன்றியத்திலே தனியார் நிலத்தைக் கையகப்படுத்தி 3 ஏரிகளை வளைத்தார்கள், அந்த ஏரிகளை வளைத்தவர்கள், நிலச்சொந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுத்தான் காண்டிராக்டர்கள் பணம் எடுக்கவேண்டும். ஏனென்றால் காண்டிராக்டர்களைப் போட்டவர்கள் எல்லாம் தனது தம்பிகள். அப்படி வைத்துக்கொண்டு, கிட்டத்தட்ட 6, 7 கோடியில், 4, 5 கோடியை உடனேயே எடுத்துவிட்டார்கள். எடுத்துவிட்டு விவசாயிகள் கேட்டால் அடிக்கிறார்கள். இந்தக் கொடுமை எத்தனையோ இடங்களில் நடந்துவிட்டது. ஒரு ஒன்றியத்திலே 3 ஏரிகளை வெட்டி, சுற்றிச் சுற்றி வெட்டி, கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள். அந்த ஏரிகளுக்கான பணத்தை இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். 2 நாட்களுக்கு முன்னர் நான் கலெக்டருடன் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் எங்கள் மீது மண்ணை வாரி இறைப்பதற்கு வந்துவிட்டார்கள். கலெக்டரே அசந்துபோய், உடனே அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். இன்றைக்கு அம்மா அவர்கள் இந்த 3 ஏரிகளுக்கும் நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு பணத்தை உடனடியாக அவர்களுக்கு வழங்கி, அவர்களது வாழ்க்கையின் துயரைத் துடைக்க வேண்டும். அவர்களுக்கு விவசாயத்திற்காக இருந்த நிலமும் போய்விட்டது. அதற்கான நிதியுதவியும் கொடுக்கப்படவில்லை என்றால், அவர்கள் என்ன செய்வார்கள்? 3 ஏக்கரை வைத்திருந்த விவசாயி இன்றைக்குக் கூலி வேலை செய்கிறார். என்ன செய்ய முடியும்? 3 ஏக்கர் வைத்துக்கொண்டு நிம்மதியாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த விவசாயி, கூலி வேலைக்கு மண்வெட்டி எடுத்துச்செல்கிறார். இதைப்போல எங்களுடைய கிராமத்திலே இருந்த 3 ஏரிகளை, வளைத்துவிட்டதால், 500, 600 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள், அவர்களது வாழ்க்கையின் துயரைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.எம். பாலன்] [2002 மார்ச் 13

இன்றைக்கு புள்ளம்பாடி ஒன்றியத்திலே, பெருவளப்பூர் என்ற கிராமத்திலே 500 ஏக்கரில் விவசாயம் செய்வதற்கு அங்கே பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புள்ளம்பாடி ஒன்றியம் வறட்சிப் பகுதியாகும். ஆகையால் அங்கே தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துக் கொடுக்கும்படி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

லால்குடி தொகுதி நெல் அதிகமாக விளைகின்ற ஒரு பகுதியாகும். அங்கே நவீன அரிசி ஆலை ஒன்றை அமைத்து, நெல் கொள்முதலை நல்லபடியாகச் செய்ய விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

புள்ளம்பாடி ஒன்றியத்திலே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. ஏழரை ஆண்டு காலம் அமைச்சராக இருந்தவர்களின் தொகுதி அது. அந்தத் தொகுதியிலே, 5 கிராமங்களிலே குளத்துத் தண்ணீரைக் குடிக்கிறார்கள். ஏழரை ஆண்டுகாலம் அமைச்சர் இருந்த தொகுதி அது. ஆனால் குளத்து நீரைக் குடிக்கிறார்கள். 2 நாட்களுக்கு முன்னர் அங்கு போனபோது இந்தத் தண்ணீர் இன்னும் 10 நாட்களுக்குத் தான் வரும் என்று சொல்கிறார்கள். மிகவும் பாவமாக இருக்கிறது. ஆனால், ஏழரை ஆண்டு காலம் அமைச்சராக இருந்திருக்கிறார், நினைத்தால் வெட்கக்கேடாக இருக்கிறது. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்றைக்கு இங்கே ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, எங்கள் பகுதியில் 35 கிராமங்களுக்கு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் உடனடியாகத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

லால்குடியிலே கல்லக்குடியில் ஓர் அரசு மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும்படி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, லால்குடியில் உள்ள அரசுப் பொது மருத்துவமனையில் தினந்தோறும் புற நோயாளிகள் 1,700 பேரும், உள் நோயாளிகள் 500 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இங்கேயும் அதே நிலைதான். சென்ற 5 ஆண்டு காலத்தில் இதே கொடுமை நடந்திருக்கிறது; அமைச்சராகவும் இருந்திருக்கிறார்கள். எப்படித்தான் இருந்தார்கள் என்று தெரியவில்லை. அந்த



2002 மார்ச் 13] [திரு. எஸ்.எம். பாலன்]

ஆஸ்பிட்டலைக் கண்டு கொள்ளவேயில்லை; மிகுந்த வேதனையாக இருக்கிறது. அம்மா அவர்கள், நமது ஆட்சிக் காலத்தில் 5 டாக்டர்களை அங்கே நியமனம் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த இதய தெய்வம் அவர்களின் பொற்பாதம் தொட்டு வேண்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-3-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

35. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

36. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

37. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

38. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

[2002 மார்ச் 13

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

10. 2000 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (91-வது திருத்த) சட்டமுன்வடிவு மக்களவையில் அறிமுகப்படுத்தப்பெற்றவாறு.

11. 2001 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு (91-வது திருத்த) சட்டமுன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்றவாறு.)

12. 27-11-2000 ஆம் நாளன்று இச்சட்டமுன்வடிவின் மீது மக்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

13. 23-8-2001 ஆம் நாளன்று இச்சட்டமுன்வடிவின் மீது மாநிலங்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

14. பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2001-2002)

15. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2001-2002)

16. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2001-2002)

17. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2001-2002)

18. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2001-2002)

☆ ⓟ

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22482
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53/40